

மந்திரப்
புன்னகை

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | மந்திரப் புன்னகை |
| ஆசிரியர் | : | காஞ்சனா ஜெயதிலகர் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | ஜூலை, 2005 |
| தாளின் தன்மை | : | 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 240 |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : | அருணோதயம்<br>5/3, கொடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>தொலைபேசி: 28132791 |

விலை: ரூ.60.00

| | | |
|---|---|---|
| கணினி அச்சு | : | வேலன் லேசர்<br>சென்னை-18, ✆94441-01753 |
| அச்சிட்டோர் | : | ஜீஎம் கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

# மந்திரப் புன்னகை

## உள்ளே


1. மந்திரப் புன்னகை 5

2. நேற்று முதல் உன் நினைவு 107


# மந்திரப் புன்னகை

## 1

விஸ்தாரமான ஏரிக் கரையில் வெண் கொக்குக
தாழப் பறந்து பின் பஞ்சாய் இறங்குவதும் சற்
ஆசுவாசப்பட்ட பின்பு எம்பிப் பறப்பதும் போல
இன்றும் அந்த விமான நிலையம் அவளுக்கு
தோன்றியது!

அன்று... முதன் முதலாய் விமான நிலையத்தை
பார்த்தது நான்கு வருஷங்களுக்கு முன்பு.

எத்தனை பிரமிப்பும் பரவசமுமாய் அ
நின்றிருந்தாள். அப்போது வயது இருபதுதான் - ப
கல்லூரிப் படிப்பையும் கூடப் பிரபல்யம் இல்
சிற்றூர்களிலேயே கழித்தவளுக்கு நகரமும் அ
அலட்டலும் பலத்த சுவாரஸ்யமாயிருந்தன.

சில கல்லூரிகள் இணைந்து நடத்திய 'ஃபே
ஷோ'விற்கு வந்த ஹேமலதா சந்தரின் பார்வை
இவள் விழுந்ததும் பெரிய மாற்றத்திற்குக் காரணமா

வாழ்க்கையே புரண்டு மாறியது. மாயாவின் மந்திரக் கோலைப் போல ஹேமலதாவின் புன்னகையும், பேச்சும் -

''பாருங்க மிஸ்டர் வாசன். உங்க வீட்டிலிருக்கும் தங்கப் புதையலைப் பற்றி உங்களுக்குத் தெரியலை.''

''எது.... எம் மக மந்திராவைக் குறிப்பிடறீங்களா?'' கூச்சத்துடன் நெளிந்தார் அப்பா.

''இந்த உயரமும் உடல்வாகும் கடவுளின் வரம்...''

தலைக்கு மிஞ்சிய தன் மகளை உற்றும் கூடப் பாராத மனிதர் விழித்தார்.

''சிற்றூரின் கல்லூரிகளில் பயின்ற பெண் இத்தனை தன்னம்பிக்கையும் ஒயிலும், தெளிவான பேச்சுமாய் இருப்பது ஆச்சரியம்.''

''ம்ம்.. நிறைய வாசிப்பா. ஆங்கிலப் பத்திரிகைகளை... அவை தரும் நாகரீகங்களையும் கற்றுக்கிட்டா போல.. பி.பி.சி.யின் செய்திகளின் சாயலில் உரக்க வாசிப்பா... அப்படித் தன்னையே உருவாக்கிக்கிட்டா...''

''இந்த ஆல்பம் பாருங்க சார்!'' - ஹேமலதா கவனமாய்க் கவர்ச்சி தணிந்த படங்களின் தொகுப்பை மந்திராவின் தந்தையிடம் தந்தாள்.

''நீங்களும் பாருங்கம்மா!'' என்று ஒதுங்கி நின்ற தாயையும் இழுத்துக் கணவரருகே இருத்தினாள்.

அப்புகைப்படங்களில் சேலை கட்டியிருந்த பெண்கள் யாரும் ரவிக்கைகளுக்காய் மெனக்கெடவில்லை! இளம் மார்புகளைப் பண்டைக் காலக் கச்சை போன்ற ஜரிகைத் துணி இறுக்கியிருந்தது.

நூங்கில் தோள்கள் வெறுமையாய் காட்சியளித்தன. அல்லது பெருக்கு ஓரிரு நூல் இழைகள் அலங்காரமாய் ஓடின.



உடலை முழுக்க மறைத்தாற் போலத் தோன்றிய உடைகளும் கூடக் கொடி உடல்களின் கச்சிதங்களை எடுத்துக் காட்டிடவே பயன்பட்டிருந்தன.

''இதுதான் உங்க தொழிலாம்மா?'' - புகைப்படத் தொகுப்பை மூடிய வாசன் மரியாதை நிமித்தமாய்க் கேட்டார்.

''ஆமாங்க. மாடல் கோ-ஆர்டினேட்டர்னு... அதாவது...'' வாசனின் புன்னகை அவளது தடுமாற்றத்தைத் தடுத்தது.

''புரியுது. நான் பட்டதாரிதான். விளம்பர நிறுவனங் களுக்கும் மாடல்களுக்குமான தொடர்பை ஏற்படுத்தித் தருபவர் - சரியா?''

''நினைச்சேன்...'' என்றாள் ஹேமலதா பிரகாசமாய். ''இத்தனை இல்லாடியான மந்திராவின் பெற்றோர் வித்தியாசமானவங்களாய் இருக்கணும்னு. விவசாயம் பார்க்கும் நீங்க படிச்சவங்க, உலகப் போக்குப் புரியும்... உங்க ஒரே மகளின் வெற்றியை, புகழை நிச்சயம் நசுக்க மாட்டீங்க.''

ஹேமலதாவின் பகட்டுப் பேச்சை விட, மந்திராவின் பெற்றோர் சம்மதித்ததற்கான காரணம் வேறு.

அவர்களின் ஒரே கண்மணியின் ஆசை, அது!

உலக நாகரீகங்களைச் சாறு பிழிந்து தந்த பத்திரிகைகள், டி.வி. சானல்களில் அமிழ்ந்து கனாக்களில் மிதந்த மந்திரா விற்கு, அக் கவர்ச்சி உலகத்திற்குள் தான் நுழையக் கூடும் என்ற போது உவகையில் உச்சந்தலை வெடித்தது! நம்ப முடியாத ஆனந்தத்தில் ஆர்ப்பரித்தாள்.

''ஹையோ... ஏதோ தெரிஞ்சதைச் செய்தேன் - பரிசு கிடைச்சதே பெரிசு... இப்ப இப்படியான வாய்ப்பும்...

அப்பா... ப்ளீஸ். வேண்டாம்னுடாதீங்க... இது எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் தெரியுமா?'' கெஞ்சி மன்றாடினாள்.

தவிரப் பல ஆண்டுகளாய் நொந்த அவளது உணர்வுகளுக்கு இந்தப் பாராட்டும், வாய்ப்பும் ஒத்தடம் தந்தன.

''ஏய்... ஒட்டடைக்குச்சி, இங்க வா.''

''ஆளு வளந்தா மட்டும் போதாதுடீ... புத்தி மட்டாவே இருக்குதே!'' என்ற ஆசிரியப் பெருமக்களின் சீண்டல், சீறல்...

சாலையில் இவள் நடக்கையில் பெரும்பாலும் விடலைகள் பாடும் பாடல் -

'ஒட்டகத்தைக் கட்டிக்கோ...

கெட்டியாக ஒட்டிக்கோ' தான்!

''டேய்! ரொம்ப கெட்டியா ஒட்டினியானா ஒட்டகம் ஒரே உதையில உன்னை உலுக்கித் தள்ளிரும்டா. அதுல சவாரி பண்ண, மவனே! நீ இன்னும் அரையடி உசரமாய் வளரனும்!''

ஏன், பரிவான அம்மாவும் கூட, சேலைச் செட்டியார் தன் மூட்டையை வீட்டில் வந்து கடை பரப்பும் போது, அலுப்பதுண்டு.

''என்ன மதிக் குட்டி.. ஏன் இவ்வளவு உசந்தே? இப்பப் பார் முக்கால்வாசிப் புடவைங்க, அதுவும் அம்சமானதுங்க, எல்லாம் உன் கணுக்காலைக் காட்டிட்டு நிக்குது. உயரம் போதலையே, என்று.''

''பரவால்லைம்மா!'' - இடுப்பில இறக்கிக் கட்டினாள்.

''ஷ்ஷு''... பாதி இடுப்பைக் காட்டவா புடவை ...த்தறோம்? பார்க்கறவங்க கண்ணை உறுத்தக் கூடாதுமா, ...ங்கம்.''



ஆக, இன்றுவரை அந்தக் கவர்ச்சி உடைகளை மந்திரா அணிந்ததுமில்லை... கண்ணை உறுத்தும் அசைவுகளுடன் மேடையிலோ, காமிரா முன்போ நின்றதுமில்லை.

'ஓ மான்ட்ரா... அந்த தோசா, சாம்பார் பொண்ணா?'' என்று வடக்கத்தியர் கேலி பேசினாலும், தனக்கான மரியாதை தனி என்பதையும் உணர்ந்திருந்தாள்.

ஆனால் சிறு வயதில், சமாளிக்க அறியாத பருவத்தில் கேட்ட சில வார்த்தைகள் மனதை மிகக் கசக்க வைத்திருந்தன.

அத்தான் மோகனராஜின் வார்த்தைகள் இன்னும் நினைவில் உண்டு. ''என்னை விட்டால் உன்னை வேறு யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்க, கொக்குப் பெண்ணே... என் தலைவிதி நீதான். உன் தலைவிதி இதே வீரவக் குளத்தில் என்னோடு குடித்தனம் பண்ணி ஒன்னரை முழ நீளத்தில் வதவதன்னு குழந்தைகளைப் பெத்துத் தள்றது...''

''ச்சே... பேச்சைப் பாரு. நீங்க ஏன் என்னைக் கட்டனும்?''

இரட்டைச் சடை ஆடச் சின்ன மந்திரா அலட்டுவாள்.

''ஒரு தியாகந்தான்... வேற யாரு இதைக் கட்டுவான்ற பரிதாபந்தான். படிப்பும் துடிப்புமாய் ஒரு அழகி கிடைச்சால் நல்லாத்தான் இருக்கும்... ஹூம்...'' நீளப் பெருமூச்செறியும் ராஜத்தான்!

சிறுமியாய் இருக்கையில் மந்திரா தன் கண்களுக்கே கோரமாய்த்தான் தெரிந்தாள்.

குச்சி குச்சியான கால் கைகள், நீண்ட கழுத்து... களையற்ற முகம்... நளினமற்ற நடை...

ஆக அத்தானின் கேலியில் கண்ணீர் பொங்கும். தன் வாழ்வு முழுக்க இந்தக் கிராமத்தில் இவனுடனா என்ற பச்சாதாபம் பொங்கும்.

ஆனால் பள்ளி ஆண்டு விழாவிற்கு வந்த ஒரு பேச்சாளரின் பேச்சு திடமூட்டியது.

'பள்ளி நாட்களிலேயே பெண்கள் பீர்க்கைக் கொடி போல வளர்ந்துதான் விடுகிறார்கள். உருவம் வளர்வது செல்களின் பெருக்கம்தானே. அதை முழு வளர்ச்சி என்று கொள்ள முடியாது.

'தெளிவான அறிவும் தோல்விகளில் கலங்காத மனமும் முக்கியம். எவரெஸ்ட்டின் 29,000 அடி உயர முகட்டில் ஏற முயன்ற ஹிலாரியின் முதல் முயற்சி தோல்விதான் - ஆனாலும் மறுமுறை விடாமல் முயலவும் வெல்லவும் முடிவு செய்தார் - அதற்கு ஹிலாரி சொன்ன காரணம் என்ன தெரியுமா?

''எவரெஸ்ட் வளராது. ஆனால் நான் வளர்ந்து கொண்டே இருக்கிறேன்.'

மற்ற மாணவிகளுடன் சேர்ந்து மந்திராவும் பலத்த கைதட்டினாள். அந்த நம்பிக்கை வாசகத்தை மனதுள் அழுத்தி வைத்தாள்.

அதன் பிறகு பாடங்களைக் கருத்தாய்ப் படித்தாள்.

செய்த எதிலும் ஒரு நேர்த்தி சேர்ந்தது.

புத்தகங்களை ஆராய்ந்து தெளிவாய்ச் சிந்தித்தாள். சரி நேரத்தில் சாப்பிட்டாள். தொலைக்காட்சியின் தயவில் டற்பயிற்சி, உடுக்கும் முறை, கம்பீரமான மொழி, தைப் பேசும் விதம், நடை, பாவனை எல்லாம் னித்து. மோசமானதைக் களைந்து, தனக்கே ருகேற்றினாள். பருவமும் பெருதவி புரிந்தது.



ஒரே பெண் என்பதால் நல்ல புத்தகங்களின் துணையை நாட, அவையும் சளைக்காமல் அவளை மிடுக்காக்கின. ஆகக் கல்லூரிக்குள் புகுந்தபோது, வாத்துக் குஞ்சு அன்னமான கதையைப் போலவே, தான் உருமாறி விட்டதாய் அவளுக்குள் ஒரு கர்வம்... களிப்பு.

## 2

'மதுரைக்கான பயணிகள் கேட் எண் ஆறின் வழியே போகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.'

இனிய குரல் அறிவித்தது. ஆங்கிலத்திலும் இந்தியிலுமாய். கடந்த நான்கு வருடங்களில்தான் எவ்வளவு மாற்றம்...

எத்தனை அனுபவங்கள்!

நினைத்தும் பார்த்திராத வெற்றிகள்...

அதில் முக்கியமானதாய்... இதோ அருகே மகேந்திரன்!

'போகலாமா மதி?' கச்சிதமான ஆங்கில உச்சரிப்பில் வினவியபடி இவளது சற்றுப் பெரிய பையை எடுத்துக் கொண்டான்.

இவளும் எழுந்து நிற்க, அங்கிருந்த அத்தனை விழிகளும் தங்களை மொய்ப்பதை மந்திரா உணர்ந்தாள்.

முதல் தடவையாய் மும்பையின் சர்வ தேச விமான நிலையத்திற்குள் போனவளின் கண்கள் எப்படி அங்கிருந்த காட்சிகளை எல்லாம் அள்ளி அள்ளி விழுங்கின.

பட்டிக்காட்டானும் மிட்டாய்க் கடையும் கெட்டன!

சிவப்புக் குமிழை அழுத்தியதும் ஆவி பறக்கும் பானத்தைக் கமகமவென்று பொழிந்த காபி மெஷின், நட்சத்திர ஹோட்டல் பரப்பியிருந்த பெயர் அறியாத பலகாரங்கள், ஹீராலாலின் வைரங்கள், பாரிஸின் நறுமணங்கள், இத்தியாலின் தோல் பொருட்கள், கைவினைத் திறமைகள், ஜெர்மானிய மது...

அதுவரை பளபளப்பான பத்திரிகைகளில் மட்டுமே கண்டு பரிச்சயமாகியிருந்தவை இங்கு உயிருடன் மணத்தன!

அன்று உடனிருந்த ஹேமலதா சந்தோஷமாய் இவளது பிரமிப்பை ரசித்தாள்.

''உனக்கு வருத்தமில்லையே, மந்திரா?''

''நம்பத்தான் முடியலைங்க... நீங்க என் பெற்றோரைச் சந்திச்சப்பகூட இதெல்லாம் கைகூடும்னு நினைக்கலை... கடைசியில் என் விருப்பத்திற்கு அவங்க சம்மதிச்சதும் கனவு போலிருக்குது.''

''உன் ஆசை புரிந்ததால் தடை சொல்லலை. முதல்ல உன் கல்லூரிப் படிப்பு முடியட்டும்னு அவங்க சொன்னது நல்ல அறிவுரைதான்.''

''ஆனால் படிப்பு முடியும்வரை... நான் உங்க ஞாபகத்தில் இருப்பேன்னு நினைக்கலை...''

''உன் புகைப்படங்கள், விலாசம் எல்லாம் பத்திரப்படுத்தி இருந்தேன். ஆகப் பரீட்சை முடிஞ்சதுமே உன்னைச் சென்னைக்கு வரவழைச்சுட்டேன்.''

சென்னையில் மந்திராவிற்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளில் வேறு ஒருத்தி என்றால் மடங்கிப் போயிருப்பாள்.

''என்னால ஆகாதப்பா!'' என்று ரவிவேறி இருப்பாள். உடுக்க, உண்ண, பேச, பழக, சிரிக்க, நிற்க, நடக்க, உட்காரவும் கூடப் பயிற்சிகள்.



'கால் முட்டிகள் எப்பவும் சேர்ந்து இருக்கணும். முதுகிலோ தோளிலோ சரிவே இருக்கக்கூடாது!' என்று.

அதை எப்போதும் செய்கிறார்களா என்ற கடும் கண்காணிப்பு வேறு. ஒப்பனை, உடை, அதற்குத் தோதான நகைகள் என்று செலவிழுத்தது. ஆனால் இடை இடையே கிடைத்த மாடல் வேலைகளில் காசும் வந்ததால் சமாளித்தாள்.

ஆரம்பத்தில் பயிற்சிகளால் பழகிய அசைவுகளும் நளினமும் விரைவில் அவளது இயல்பே ஆயின.

நல்ல உயரமும் உடல் வாகும் என்பதால் உடற் பயிற்சிகளில் அவளைக் கசக்கிப் பிழியவில்லை.

''ஓய்வு நேரத்தில் ஹிந்தியும் ஃபிரெஞ்சும் கத்துக்கோ!'' என்ற ஹேமலதாவின் அறிவுரையை ஏற்றாள். காலையில் 'ஜிம்', மாலையில் மொழிகளோடு பரிச்சயம், இடையே காமிராக்களின் முன் என்று நாட்கள் கழிந்தன.

முக்கியமான 'ஷோ' ஒன்றில் பங்கு பெற வாய்ப்பு வந்தபோது மந்திராவிற்குப் பரபரப்புத் தாளவில்லை.

பெற்றோரிடம் அரை மணி நேரம் அது பற்றிப் பேசினாள்.

''நீ சந்தோஷமாயிருக்கேல்ல, கண்ணு? அப்ப சரி...''

'டி பியர்ஸ்' வைரங்களுக்காய், 'ராகமாலிக்' பட்டுகளுக்காய், 'வெனிஸ் லெதர்' தோல் ஆடைகளுக்காய் உயர்ரக நிகழ்ச்சிகளில் ஆரம்பத்தில் பதினைந்தில் ஒன்றாக இருந்தவள் விரைவில் முன் வரிசையை எட்டினாள்.

இயல்பிலேயே இசை, தாளப் பரிச்சயம் இருந்ததால் லயம் பிறழாமல் 'ராம்ப்'பில் நடை போட்டாள்.

'ஐயோ! நம்மைப் பார்க்கவா இந்தக் கூட்டம்...' இவர்கள் முன்பு தடுமாறாமல் நடந்து, ஒயிலாய் நின்று

அளவாய்ச் சிரிக்கக் கூடுமா?' என்று ஆரம்பப் பதட்டமெல்லாம் அடங்கிச் சர்வ அலட்சியத்துடன் நடந்து, தன்னை மொய்த்த கண்களை ஒரு ராணியின் தோரணையில் ஒதுக்கினாள். ஆனால் அரைகுறை ஆடையில் உடலை மோகமூட்டுவதாய்க் காட்டும் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளவேயில்லை. பெற்றோரின் வளர்ப்பு கவசமாய்க் காத்தது.

அந்தக் கண்ணியத்தால், ஆண்களிடமிருந்து சில சங்கடத் தொல்லைகளும் குறைந்தன. வந்தவற்றை இவள் தன் கடும் பார்வையாலே சமாளிக்க முடிந்தது.

இப்போதும் மொய்த்த பார்வை வண்டுகளைப் பற்றிய சலனமேயின்றி விமானத்தில் ஏறினாள். அமர்ந்ததும், கருநீலமும் சிவப்புமான பட்டுக் கட்டிய விமானப் பணிப்பெண் நீட்டிய யூடிகொலான் நனைத்த சிறு துண்டால் தன் முகம், கழுத்தை ஒற்றியவள், கைகளை நன்கு துடைத்தாள். எல்லோருக்கும் கவனமாய் ஒரே ரகப் புன்சிரிப்பைத் தந்த அப் பணிப்பெண் ஜோடியான தங்களை மட்டும் சற்று அதிக நேரம் பார்ப்பது புரிந்தது - தனக்குள் நகைத்துக் கொண்டாள்.

புகழ், பணம், பரபரப்பு போல பார்வைகளும் பழகிப் போன சமாச்சாரம்.

மகேந்திரனும் இவளும் கண்களை நிறைக்கும் ஜோடிதான். தெற்கிலுள்ள ஜமீன் பரம்பரையின் வாரிசான மகேந்திரன் தற்செயலாய் இந்த நாகரீக உலகில் புகுந்தவன்தான்.

மந்திராவை விட இரண்டு அங்குலங்களே அதிக உயரம். மாநிறம். வெகு கூர்மையான, சற்றே வித்தியாசமான முகம். கருடனுடையது போலச் சற்றே வளைந்த பருத்த மூக்கும். ஆளுமையுள்ள பரம்பரையின்



கர்வம் கலந்த கூர் விழிகளும் அவனை ஆண்மை மிகுந்தவனாய்க் காட்டின.

வடக்கே பெரும்பாலான ஆண் மாடல்கள் முகத்தை மழுமழுவென மழிப்பவர்கள் - சிவந்த சருமத்தோடு மீசையுமற்ற முகங்களில் பெண்மையின் சாயல் அதிகம்தான் - அவர்களின் நடுவே மகேந்திரனின் மிடுக்கு பரபரப்பானது! ஒரு தமிழ்ப் படத்தில் வில்லனாய் நடித்த பிறகு அவனது வெள்ளித்திரை ஆசை காணாமற் போனது!

அதீத ஒப்பனை, உச்சி வெயிலில் கதாநாயகனுடன் உருண்டு, சகட்டு மேனிக்குக் குத்துக்களை வாங்கிக் கால் பரப்பி விழுவது அவனுக்கு ஒத்து வரவில்லையாம்! இரு மருங்கும் கொடியிடைப் பாவைகள் வர, வித விதமான உடைகளில் மேடைகளில் நடப்பதும் கூட அலுத்து விட்டதாம். அதுவரை பழகிய புகைப்பட வித்தகர்கள், திரை உலகப் புள்ளிகள், விளம்பர உத்திகள், சக மாடல்கள் எல்லோரையும் சேர்த்து அவியலாக்கி - அதில் ருசியும் கண்டு விட்டான்.

ஹேமலதாவைப் போல, மும்பையின் முக்கிய மாடல் நிர்வாகி ஆகிவிட்ட பின், மகேந்திரன் - மந்திராவின் பழக்கம் நெருக்கமானது.

முதலில் இருவருக்கும் பாலம் கட்டியது - தாய்மொழிதான். 'அப்பா, ரொட்டியே சவைத்துச் செத்த நாவிற்கு மிளகாய்ப் பொடி தோசை சாப்பிட்டது போலிருக்குது...'' என்றான்.

''தமிழில் பேசறதுதானே... எனக்கும்தான்.''

''நீங்க நெல்லைப் பக்கமா?''

''ஆமாம்... நீங்களுமா?''

''எந்த ஊர்?''

''தென்காசிப் பக்கம்.. வீரவக்குளம்.''

''கேள்விப்பட்டதில்லை. ஆனால் தண்ணீர் வளத் தோட செழித்த பகுதியாய் இருக்கணும்.''

''ம்ம். அப்பாட்ட இருநூறு ஏக்கருக்கு மேல இருந்தது. தென்னை, வயல், பழத்தோட்டம்னு... அப்பாவுடைய ஒன்று விட்ட அக்காவும் பக்கத்திலதான்... இப்ப அப்பாக்கு முடியலைன்றதால பெரும் பகுதியை அத்தை மகன் ரா... வந்து மோகனராஜிடம் கொடுத்திட்டாங்க... வித்துட்டாங்க...''

''ஓ... அப்ப அவருக்கும் விவசாயம்தானா?''

''கிராமத்து அமைதியும் பசுமையும் பழகிட்டால் பிறகு லேசில் மீள முடியாது... நிலங்களை விஸ்தரித்தபடி ராஜுத்தான் அங்கேயே இருக்கார்...''

அவன் பெயரை உச்சரித்த நாக்கு ஏனோ குழறியது.

''நல்ல இந்திய விவசாயி... ம்ம்?''

இவனைப் பார்த்துக் கண் சிமிட்டினான் மகேந்திரன்.

## 3

திரைத்தட்டியின் 'வெள்ளித்திரை' பக்கம் விரிந்திருக்க, அங்கே இருந்த டாக்ஸி ஓட்டுனர்களின் அத்தனை கண்களும் அதிலிருந்த வண்ணப் படங்களில் ஒட்டிக் கிடந்தன.

''உடம்பு முழுக்கவுமா மேக்அப் மாவைத் தடவு றாளுக? இப்படி தகதகக்கறாளுக!''

''இயற்கையாவே பாதி இருக்கும்... மீதிய தடவி ஏத்திக்க வேண்டியதுதான்.''



''எல்லாம் பாதிக்குப் பாதிதாம் போல!''

சிகரெட் புகையும் பேச்சுமாய்க் கலகலத்தது, அந்த டாக்ஸி ஸ்டாண்ட்.

வெளிநாட்டுக் கும்பல் ஒன்று பல கார்களை வாடகைக்கு எடுத்துப் போயிருக்க, சொற்ப வாகனங்களே நின்றன.

''வந்த பிளைட்ல நமக்கு ஏதும் பார்ட்டி வரலை போலப்பா?''

''விமான நிலையத்தான் பணப் புழக்கம் சுமாரா இருக்கிற இடம்னு பாத்தா... இப்ப அதுவுமில்லைப்பா...''

''ஹைஹோடா... அங்கனப் பாரு மச்சி.''

பார்த்தவர்கள் கண்கள் விரித்து புகை விட்டன.

''படா ஷோக்கு குட்டிண்ணே... ப்ப படத்துல பாத்ததுகள விட க்ளாஸா இருக்குண்ணே...''

''கூட வர்ற ஆளு கையை ஆட்டறாம்ப்பா.''

''துரைராஜண்ணே! உங்க முறைதான - அடிச்சது லாட்டரி.''

காரில் பாய்ந்து ஏறிய 50 வயது ஓட்டுனர் முதல் கியரைப் போட்டார்.

''லாட்டரி அந்த ஜோடிக்குத்தாம்ப்பா - அதுக பின்னால என்ன ஆட்டம் போட்டாலும் நான் கண்டுக்காம ஓட்டுவேன்ல?'' காரைக் கிளப்பினார்.

ட்ராலியிலிருந்த பெட்டிகளைக் காரில் ஏற்ற உதவியவர்,

''எங்கேய்யா?'' எனவும்,

''தென்காசிப் பக்கம்,'' என்ற பதிலில் மலர்ந்தார்.

''போயிடலாம்மா... இங்கேருந்து மூனு அவுரு ஆவும்.''

''வாடகை நீங்க கேக்கறதைத் தரேன்...''

''இவோ பீட்டரு கணக்குத்தானம்மா... சினிமாக்காரங்க தாராளமாத்தான் தருவாங்க.'' பல்லைக் காட்டினார்.

ஊர் போகும் மகிழ்வில் இருந்தவளுக்குச் 'சுருக்' கென்றது. வேஷம் தரித்தவள் போலவா இருக்கிறது, தன் தோற்றம்? கடந்த சில ஆண்டுகளில் ஜீன்ஸும், மேலே சிறு சட்டையுமே பழகியிருந்தது. பயணப்படவும் அதுவே வசதி என்றாலும் பெற்றோரின் முன் அப்படிப் போய் நிற்பானேன் என்று சூடிதாரில்தான் இருந்தாள். இறுகிய கால்சராய் அவளது வடிவான கால்களின் நீளத்தைக் காட்ட, கையற்ற மேல் பகுதி அவளது வளைவுகளின் கச்சிதத்தை வடித்தது.

கடலின் நீலமும் மரகதத்தின் பச்சையும் கலந்த வண்ண உடை - இடையிடையே மின்னிய நட்சத்திரங்களுக்குப் பொருத்தமாய்க் காதிலும் உள்ளங் கழுத்திலும் கொத்து வைரங்கள் - மூங்கிலான நீண்ட கரங்களில் பிளாட்டினத்தில் ஒற்றியெடுத்த வைரத் துணுக்குகள்.

சற்றே செம்பட்டைச் சாயலில் பட்டுக் கூந்தல். சீரான முக அமைப்பை, மேக் அப் பெட்டியின் வர்ணங்கள் மிகக் கூர்மையாக்கி இருக்க, அசாத்திய அழகில் இருந்தாள். கை கால் நகங்களில் முத்து ரோஜாவின் மினுமினுப்பு.

''காரில் ஏ.ஸி. இருக்குல்ல?''

''இருக்குதுப்பா... அதுக்கும் சேர்த்துதான சார்ஜு.''

அணி வகுத்திருந்த மற்ற வாகனங்களைக் கண்ட மகேந்திரனின் முகத்தில் கடுப்பு -

''எல்லாம் பாடாவதி ரகங்கள் - மந்திரா, உன் பண்ணையிலிருந்து கூட யாரையாவது வரச் சொல்லியிருந்தால்... அதென்ன... ஹா... வில்வண்டி வந்திருக்கும். இதுகளை விட அது வசதியாய் இருந்திருக்கும்.''



''சொன்னேனே மகே, வீட்டிற்கு நாம எதிர்பாராமல் போய் இறங்கணும்னு - அம்மா, அப்பாக்கு ரொம்ப குஷியாயிடும்... நான் கிராமத்துக்குப் போய் மூணு வருஷமாச்சே.''

''அதுக்கு இப்படி முதுகு ஒடிஞ்சா போய்ச் சேரணும்? ஒரு நல்ல ஏஜென்ஸியில் சொல்லி லேன்சருக்காவது ஏற்பாடு செய்திருக்கலாம்.'' மகேந்திரனின் முணு முணுப்பைக் கேட்ட ஓட்டுனர் சமாதானப் படுத்தினார்.

'அந்த ரகங்கள் உயரம் கம்மியானதுய்யா... கிராமத்துச் சாலைக்குத் தோது இல்லை. நம்ம கார் ரதம் கணக்கா போவும், பாருங்க.''

அதற்கும் மகேந்திரன் முகம் சுழித்ததில் மந்திராவிற்குப் புளித்தது.

வசதியான வாழ்க்கை முறைக்குச் சமீபமாய் இருவரும் பழகி விட்டது நிஜம் - ஜமீன் வம்சம் என்றாலும் மகேந்திரன் எளிய வாழ்வில் வளர்ந்தவன்தான்.

'பெருங்காய டப்பா போலச் சிதிலமான எங்க மாளிகையில் எங்கப்பா இருந்தவரை வசித்தோம், மந்திரா. வெள்ளையடிக்க, ஓடு மாற்ற வசதி போதாது. எங்க சித்தப்பா, ஜன்னல் கதவுகளை ஒவ்வொன்றாய் பிய்ச்செடுத்து வித்து தண்ணி போடற ஆளு... இனியும் சமாளிக்க முடியாதுன்ற நிலைமையில் சொத்தை வித்துட்டு டவுன் பக்கம் போனோம். படிப்பு முடிஞ்ச பிறகு அடமும் பிடிச்சு அம்மாவின் கடைசி நகையை அடகு வச்ச பணத்தில் சென்னைக்கு வந்தேன். கல்லூரியில் என் தோற்றம் பலரைக் கவர்ந்தது புரிய, அதை மெருகேற்றினேன். சென்னையில் மாடல் துறையில் பத்து வருஷங்களுக்கு முன் ஆண்கள் கம்மி - ஆக நிறைய வாய்ப்புகள் - கூடவே காசும் வர

குவியாவிட்டேன். நல்ல உடையும் அதன் பையில் காசும் இருந்தால் போதுமே... அப்ப ஏற ஆரம்பிச்ச ஏணி... இப்ப இந்த அழகு ராணியே எனக்குக் கிடைக்கப் போவதில்தான் உச்சம்...!'

இரு மடக்கு ரம்மில் இப்படி உருக்கமாய்க் கதை சொன்ன மகேந்திரன், இப்போது ஏ.ஸி. காரிலும் ஏற யோசிப்பதேன்? தவிர உன் வீட்டு வில் வண்டி கூடத் தேவலை என்ற நக்கல் வேறு.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அல்லவா ஊர் வருகிறான்? இடையே இரு முறை இவளைப் பெற்றவர்கள் மும்பை வந்தபோது புறாக் கூண்டு போன்ற அச்சிறு இரு அறை வீட்டில் மூச்சடைத்துப் போனார்கள்.

இப்போது நல்ல சேதியை அவர்களிடம் சொல்லத் தன் இணையோடு சேர்ந்து வருபவளின் மனதுள் நூறு சந்தேகங்கள், பதட்டம், ஆவல், துடிப்பு எல்லாம்...

அதொன்றும் புரியாதது போல இச் சிறு அசௌகர்யத்தை ஏன் பெரிது படுத்துகிறான்?

பேசாமல் காரினுள் இவள் ஏற, அவனும் அப்படியே செய்ய வேண்டியதாயிற்று. ஓட்டுனர் சொன்னது போலவே ரதமாய் ஓடிய வாகனத்தில் அயர்ந்து கண் மூடினாள்.

நெல்லையை நெருங்கிய போது மழைக்கு அறிகுறி போலக் குளிர் காற்று வீசியது. அதில் விழித்தவளின் கண்களைக் குளிர் வித்தன, இருபுறமும் பரந்து கிடந்த பச்சை வயல்கள்.

''கார் கண்ணாடியை இறக்கலாமா... நல்ல காற்று போல..?''

''எதுக்கு? வெளி மண்ணை எல்லாம் காற்று வாரி நம் மேல் இறைக்கும். தேவையா?'' அலுத்தான் மகேந்திரன்.



பதில் சொல்லாமல் பார்வையை மேலும் குளிர் வித்தாள்.

பச்சைப் புடவைக்குக் கரை போல இரு மருங்கும் வரிசையாய்த் தென்னைகள்.

மும்பையின் சாலை எங்கும் எறும்புச் சாரி போல வாகன நெரிசலும் அவற்றின் புகையுமாய் மண்டியிருக்க, இரு மருங்கும் விண்ணை முட்டும் அழுக்குக் கட்டடங் கள்தான்... ஏன், விமானம் மும்பை நிலையத்திலிருந்து மேலேறியதும் தெரிந்த மும்பை ஒரு பெரிய குப்பம் போலத்தானே தெரிந்தது. தகரக் கூரைகளும் வறுமையுமாய்...

''இந்தப் பசுமை எத்தனை இதமானது... மனசே குளிர்ந்திடுச்சு...''

''ம்ப்ச். இந்த வயலை எல்லாம் ரெண்டு நாள் பார்த்துப் பரவசப்படலாம், மான்டி... இதில் தாராளமாய்ச் சம்பாதித்து விட முடியாது. வயிற்றுக்கும் வாய்க்குமாக அல்லாடணும். நான் இதையெல்லாம் அனுபவிச்சவன் தானே?'' அலட்சியமும் அலுப்புமாய்ச் சொன்னான்.

அது முழுக்க உண்மை அல்ல என்பது போல முழுக்கப் பொய்யுமல்ல - மாதக்கணக்கில் கடுமையாய் உழைக்கும் விவசாயிகள் சில மூட்டை நெல்லும் சில ஆயிரங்களையும் மட்டுமே எடுப்பது உண்மைதான்.

உரிய பருவத்தில் விதைத்து, உரமடித்து, மருந்து தெளித்து... கூடவே மழையின் கருணையும் சேர்ந் தால்தான் உண்டு. பிறகு நல்ல விலைக்கு விற்பனை யாகவும் வேண்டும்.

அப்பாவால் இதெல்லாம் முடியாமல்தான் பெரும்பகுதி நிலத்தை ராஜத்தான் என்று இவள் அழைக்கும் மோகனராஜிடம் விட்டது. பிறகு மகள் இந்தப் பக்கம் இனி வருவதெங்கே என்று பட, விற்றும் விட்டார்.

ஆனால் ஐம்பது ஏக்கர் தோப்பையும் அதன் நடுவே நின்ற பரம்பரை வீட்டையும் அப்பா நன்றாகவே பராமரிக்கிறார்.

"நீயும் இல்லாததற்கு இதுதாம்மா எங்களுக்கு மிஞ்சிய ஒரே ஆறுதல். உனக்கும் பட்டணம் அலுக்கும் போது வந்திருந்து ஆசுவாசப்பட ஒரு கூடு வேணு மில்லையா?" என்றபடி, இவளது எண்ண ஓட்டம் புரிந்தது போல, மகேந்திரன் இடை புகுந்தான்.

"எத்தனை அழகாய் இருக்கட்டுமே, மான்டி. மூன்று நாளைக்கு மேல் இங்கே காலாட்டிட்டு உட்கார்ந்தால் பயங்கரமாய் அலுத்திடும். இனி நம்ம ஊர்... வீடு எல்லாம் மும்பையில்தான்... என்ன சொல்றே?"

இவள் தோளைத் தட்டியபடி அவன் சொல்ல, இயந்திரமாய்ப் புன்னகைத்தாள்.

## 4

ராஜ் அத்தானின் இரு சகோதரிகளின் கல்யாணம் பேசப்பட்டபோது நடந்த கூத்தை எல்லாம் இவள் கண்டதுண்டு.

முதலில் ஜாதகங்கள் அங்கும் இங்குமாய்ப் பறக்கும் - அத்தை முகமறியாத மனிதர்களுக்குப் புலவும் கோழியு மாய்ச் சமைத்துப் போடுவார். பெண் பார்க்கும் வைபவம் ஒரு பண்டிகை போல நடக்கும்! ஆனால் சற்றே பயம் தரும் பதட்டப் பண்டிகைகள்!

அத்தையின் இரு பெண்களுமே நல்ல உயரம்.

ஆனால் மந்திராவை விட வளர்த்தி கம்மி என்பதால் அத்தை பரபரப்பாய் இவளை வீட்டிற்கு வரவழைப்பார்.



'மந்திராவின் பக்கத்தில் எங்க சுனிதா சாதாரண உயரமாய்த் தெரிவாளில்லையா, அண்ணி - ஆக இவளே பெண்ணைக் கூட்டி வரட்டும்!' என்றபடி,

அத்தையைப் பார்க்கப் பாவமாயிருக்கும்.

சொஜ்ஜி, பஜ்ஜியை வெட்டும் ஆவலில் புதுப்புது முகங்களைக் காணும் சுவாரஸ்யத்துடன் மந்திராவும் போய் நிற்பாள். தவிர வெறும் வயலும் தோப்புமான இடத்தில் வேறு பொழுது போக்கும்தான் ஏது?

ஆனால் ஓரளவிற்கு விபரம் தெரிந்த பிறகு அங்கு பேசப்பட்ட பேரம் விசனமாய்த் தானிருந்தது.

சுனிதாக்கா நல்லவள் - சமைக்கவும் வீட்டைப் பேணவும் தெரியும், அழகழகாய்க் கோலம் இழைப்பாள், கோர்வையாய்க் கதைகள் சொல்லுவாள்... இந்த மாப்பிள்ளை அப்படி ஒன்றும் பிரமாதமாய் இல்லை - மண்ணாந்தை போலப் பெற்றோர் தன்னை விற்கப் பேரம் பேசுவதைப் பார்த்திருக்கிறான்...!

'வரதட்சிணை எனப்படுவது யாதெனில் வளர்த்தமகனைப்
பெண் வீட்டில் விற்று விடல்.'

'எப்பெண்ணை மணந்தார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
வரதட்சிணையோடு மணந்த வர்க்கு.'

என்றெல்லாம் கல்லூரி இதழ்களில் சில காட்டக் குறள்களை எழுதினாள்.

'எதற்குத் தர வேண்டும் - தோப்போடு, சில லட்சங் களும் மாருதி ஸுமோவும்? தந்தால் இங்கு அத்தை வீட்டோடு மாப்பிள்ளை வந்திருந்து தோட்டத்திற்கு நீர் பாய்ச்சி, தென்னைகளின் கிளை கழிப்பாரா?'

அம்மாவின் காதில் இரவு படுக்கையில் இதை யெல்லாம் கிசுகிசுத்து.

"ஆ... வாயாடி... என்ன பேச்சிது? இப்படி நாம நினைக்கறது தெரிஞ்சால் கூட மாப்பிள்ளை வீட்டார் இந்தப் பக்கம் திரும்ப மாட்டாங்க!" கண்டிக்கப் படுவாள்.

ஒரு வழியாய் மூத்தவளுக்கு மணமாகி இளையவள் அனிதாவிற்கு வரன் தேட, ஆரம்பமானது அடுத்த நாடகம். உயரம், ஜாதகம், சீர், பேரம் என்று கதை அதேதான் என்றாலும் புது முகங்கள் பங்கேற்ற நாடகம்.

மந்திரா பயந்துதான் போனாள்.

எதிர்காலத்தில் தானும் இப்படித்தான் சங்கடப்பட நேருமோ? தனக்காய், பையனைப் பெற்ற ஏதோ ஒரு குடும்பத்தின் முன் தன்னைப் பெற்றவர்கள் கூனிக் குறுகி நிற்பார்களோ என்ற கலக்கம். ஆனால் கல்லூரிப் படிப்பை முடிக்கும் முன்பே, கடவுள் இவளுக்காய் வேறு கதவைத் திறந்து விட, ஆனந்தமும் ஆர்வமுமாய் அதில் நுழைந்து விட்டாள்.

நுழைந்த அழகுத் துறையில் பிரபலமாகி, சென்னை அண்ணா சாலையின் விஸ்தார விளம்பரப் பலகைகளில் இவளது வனப்பு வரையப்பட... களிப்போடு கலக்கமும் கலந்து உணர்ந்தாள்.

தன் உயரத்திற்கு, செய்யும் வித்தியாசமான வேலைக்கு, அதன் மூலம் சேர்த்து விட்ட பணம், முக்கியமாய்ப் பிரபல்யத்திற்கு ஏற்றது போல மாப்பிள்ளை அமையுமா?

ஜாதகம் கோர்த்து, பிறகு காபியைச் சிப்பியபடி பெண்ணை எடை போட்டு, அந்தச் சூட்டோடு முடித்து விடக் கூடுமா தன் திருமணம்?

தனக்கே இத்தகு சந்தேகங்கள் எனில் பெற்றவர்களின் கவலை அதிகமாய்தான் இருக்கும்!

ஆக மகேந்திரன் தன்னிடம் பழக முனைந்த போதும், சகஜமான அப் பழக்கம் சில மாதங்களில் மேலும்



நெருங்கியதில் இவளுக்குப் பரவசமாய் இல்லா விட்டாலும் நிம்மதி இருந்தது. ஒரு வேளை மகேந்திரனுக்குத் திருமண எண்ணம் வந்து அது பற்றித் தன்னிடம் பேசினால் சம்மதம் சொல்லிவிட வேண்டியதுதான் எனும் அளவிற்கு...

இருவரது தொழிலும் மொழியும் மாவட்டமும் கூட ஒன்று... அதைவிட இணைகோடுகளாய் ஓடிய பணம், புகழ்... ஆகப் பிரச்சனைகள் தலை தூக்காது என்ற நம்பிக்கை.

தாய் அறியாத சூலா..?

ஆகச் சில 'பேசி' உரையாடல்களில், சிறு கடிதக் குறிப்புகள் மூலமே அம்மா ஓரளவு விஷயத்தை யூகம் பண்ணி விட்டார்.

'மதிச் செல்லம், தனியே ஆயிரம் மைலுக்கு அப்பால் சுயமாய்ச் சம்பாதிக்கற, சமாளிக்கிற பெண் நீ - உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. இருபத்து நாலானாலும் நீ எங்களுக்குக் குழந்தைதான்... இன்னுமே உனை மடியில் இருத்திக் கொஞ்சத்தான் ஆசை... ஆனா மணையில் உக்காத்தி அழகு பார்க்கற பருவமில்லையாடா? அம்மா சொல்லறது உனக்குப் புரியுதில்லையா, செல்லம்? உனக்குப் பொருத்தமும் பிடித்தமுமான ஜோடி அங்கே அமையும்னு நீ நினைச்சால், உன் தேர்வை நாங்க ஏத்துக்கறோம். நீ.. சந்தோஷமாய் வாழணும். என்னடா?'

அது ஒரு விதமான பச்சைக் கொடி ஆட்டல் என்பதை உணர்ந்தவள், மகேந்திரன் திருமணப் பேச்செடுத்த போது மறுக்கவில்லை.

"ஒத்த வாழ்க்கை முறை... ஆக நாம திருமணம் செய்துக்கறது வசதிதான்... ஆனால் முதல்ல அப்பா, அம்மாவை நேரில் பார்த்துப் பேசி அவங்க ஆசீர்வாதத்திற்குப் பிறகு..."

தோள் குலுக்கலோடு கைகளை விரித்தாள்.

"எனக்கு ஆட்சேபனை இல்லை, மான்டி. அதாவது வீர்குளம் போல்..."

"என்ன மும்பை ஸ்டைலில் எங்க ஊர் பெயரைக் குதறுறீங்க... வீரவன்குளம்..."

"மூணு நாளைக்கு மேல என்னால் அந்தக் குளத்தில் மூழ்கிக் கிடக்க முடியாது... நீ தொடர்ந்து இருந்துட்டு வா - என்ன? நம் கல்யாணத்திற்காக இந்தத் தியாகம் கூடச் செய்யலைன்னா எப்படி?"

பழைய நினைவுகளுடன் குனிந்தவளின் விழிகளுக்குள் ஒளியைப் பாய்ச்சியது விரலில் கிடந்த ரெட்டைக் கல் வைர மோதிரம்!

ஒன்றுக்கு மற்றது சளைக்காத அளவும் ஜொலிப்புமாய்...

'நம்மைப் போல..' என்றபடி தங்களின் நிச்சயதார்த்தத்திற்கு அடையாளமாய் இவளது விரலில் சில நாட்களுக்கு முன்பே ஏறிய நகை அது.

இந்த செதியில் பெற்றவர்கள் மகிழுவார்கள் என்ற மகிழ்வில் வேலைகளை இழுத்துச் சேர்த்து ஓரளவு முடித்து விட்டுக் கிளம்பியாயிற்று.

"உங்க வீட்டாரின் அனுமதி, ஆசி கிடைக்கணுமே, மகே..." என்றாள்.

"அவங்களிடம் அதை நான் வேண்டி நிற்கலை, மந்திரா."

"பணம், அந்தஸ்தோடு இல்லைன்னாலும் உங்க குடும்பத்தார்.. அவங்க விருப்பமும், மகிழ்வும் முக்கியமில்லையா?"

அவசரமாய்க் கைகளை ஆட்டி மறுத்தான்.



"விடு, மந்திரா - உனக்கு உறவுகள் முக்கியம். ஆக உன் கடமையை விடு... நான் ஒரு கடிதம் அனுப்பலாம்... பிறகு நம் திருமண அழைப்பிதழ்... அது போதும்..."

தனக்குத் திருமணம் என்றானதும் இவளுக்கு ஏனோ ஊரை, தான் வளர்ந்து ஆடிய வீட்டை, முக்கியமாய் அம்மாவைத் தேடியது. விதவிதமான ஒப்பனைகளும், ஒயிலான உடைகளும் திகட்டி அலுத்தன. அம்மா மடியில் படுத்தபடி மருதாணி இட்டுக் கொள்ள வேண்டும். அம்மாவின் கைமணத்தில் கமகமக்கும் உருண்டைகளுக்காய் வாய் திறக்க வேண்டும்... அப்பாவின் பரிவான புன்னகையில் கரைய வேண்டுமென்று ஆசைகள் துளிர்த்தன... ஓங்கி வளர்த்தன.

ஆனால் அதெல்லாம் அத்தனை எளிதில் தீராத ஏக்கங்கள் என்பதும் புரிந்திருந்தது.

இவளது உணவு பெரும்பாலும் இலை, தழை, பழங்கள்தான். அம்மாவோ சாதத்தில் நாலு கரண்டி நெய்யூற்றிப் பிசையும் ரகம். மேலும் மருதாணியால் ஒரு மாதமேனும் பவளமாய் இருக்கும் நகங்களை வைத்து அந்நாகரீக உலகில் வலம் வர முடியுமா?

ஆகக் காசிக்கு வந்தும் தொலையாத கர்மம் போல, எந்நிலையிலும் உணவு, தன் தோற்றம், பொலிவு பற்றிச் சிந்தனையோடவே இருக்க வேணும்... அந்தக் கட்டாயத்தில் மனம் கடுத்தது.

வீடு நெருங்க நெருங்க, மற்றச் சிந்தனைகளை ஒதுக்கிப் பரபரத்தாள்... தோப்பின் மூங்கில் தடுப்பைத் தாண்டி வீட்டின் முன் வேகம் குறைந்து நின்றது வாகனம்.

நடுங்கும் விரல்களால் கார் கதவைத் திறந்து இறங்கினாள். பிரியமான வீட்டைப் பார்வையால் தடவினாள்... தாயின் முகம் தேடியவளுக்குத் தாழ்வாரத்தில் நின்று

வந்தவளையே வெறித்தபடி நின்றவனைக் கண்டதும் பெருகிய உற்சாகம் பெரிதும் வடிந்தது.

"ஹலோ... ராஜத்தான் எப்படி இருக்கீங்க?"

சகஜமான விசாரிப்புடன் வீட்டின் படியேறினாள்.

"ம்ம்... ஏது சொல்லாமல் கொள்ளாமல் மந்திரா விஜயம்?"

கேள்வி உறுத்தியது.

இது இவளது வீடு - இங்கும் கூடவா அறிவித்த பின்பு ஆஜராக வேணும்?

"இப்பதான் ஓய்வு கிடைச்சது - வந்தேன்... அப்பா, அம்மால்லாம்..."

"ஓஹோ... ஓய்வில்தான் பெற்றவங்களின் ஞாபகம் வந்ததா?"

கேலியாய்க் கிண்டிய கேள்வி இவளுக்கு மிகக் கசந்தது.

## 5

ஏதோ வீடே தன்னுடையது என்ற பாவனை.

உரியவளை விருந்தாளி போலக் கருதும் உபசரணை. இவன் தன் கடமையைச் செய்யவில்லை என்பதான தோரணை...

எத்தனை ஆவலாய் வந்தவளுக்கு இப்படி ஒரு வரவேற்பு... அதுவும் தன் வருங்காலக் கணவனின் எதிரே!

மோகனராஜ் வந்திருந்த புது நபரைக் கண்டு கொண்டதாய்க் காட்டவில்லை... இனியும் இவனிடம் என்ன பேச்சு என்பதாய் வீட்டினுள் விரைந்தாள்.



"வாங்க... இப்படி உட்காருங்க, மகே... ஒரே நிமிஷம்..." - என்றபடி.

சமையலறைக்குள் போனவளின் கண்கள் ஆவலாய்த் துழாவின.

"அடடே... யாரு வந்திருக்குன்னு பாருங்கம்மா... நம்ப பாப்பா..."

சமையல்காரத் தனம் வீறிட்டாள்.

சமையல் மேடைப்புறமாய் நின்ற உருவம் திரும்ப... மந்திரா மூச்சும் விடாமல் நின்றாள்.

பூப் போலிருக்கும் அம்மா... சிறு பறவைபோலச் சின்ன எட்டுக்களுடன் சுறுசுறுப்பாய் வளைய வரும் அம்மா... மிக மாறியிருந்தார்.

வாடிய பூப் போன்ற வதங்கல்...

தடுமாற்றமான அசைவுகள்...

ஆனால் கைவிரித்த பாசத்தில் மாற்றமில்லை.

"அடடே... மதிச் செல்லம்... வாம்மா..." அள்ளி முத்தமிட்டார். காண்பது கனவோ என்ற ஒரு திணறலுடன் மகளைத் தொட்டு வருடினார்.

அரவம் கேட்டு அடுக்களைக்கு வந்த அப்பாவும் சற்று மங்கிய ஓவியம் போலத்தான் இருந்தார்.

மகளை அதிகம் உற்றுக் கூடப் பார்க்காத அந்த மனிதர், பார்வை மீண்ட குருடன் விழிப்பதைப் போலத் தன்னை விழிகளால் விழுங்கியதில் இவளுக்குத் தொண்டை அடைத்தது.

மூன்று ஆண்டுகளாய் இங்கே எட்டியும் பார்க்கவில்லையே என்ற குற்ற உணர்வு உள்ளே அறுத்தது.

ஒரே மகளான தான், தன் கடமையிலிருந்து பிறழ்ந்த தவிப்பு.. அந்தத் தாபத்துடன் தகப்பனையும் கட்டிக் கொண்டாள்.

''ஏம்ப்பா மெலிஞ்சுட்டீங்க?''

''அப்பாக்கு டைபாயிட்... வந்து... சிரமப்பட்டுட்டாங்க.''

''ஐயோ... ஏம்ப்பா எனக்குச் சொல்லலை?''

''அத்தனை தொலைவிலிருக்கிற குழந்தையை ஏன் பதட்டப் படுத்தணும்னுதான்...''

ராஜத்தான் குத்தியது போலத் தான் ஒரு விருந்தாளி என்ற உணர்வு அவளை அடித்தது.

''எப்பம்மா?''

''அதெல்லாம் பிறகு சொல்றேன். முதல்ல உட்கார். என்ன சாப்பிடற?''

''நீங்களும் வாடித் தெரியறீங்க.''

''அம்மா பிழைச்சது மறு பிறப்பு, பாப்பா...'' தனம் குறுக்கிட்டாள்.

''ஷ்ஷ்... தனம்... மதிக்குட்டியை நலம் விசாரிக்கறதை விட்டுட்டு நம்ப பாட்டையே பாடறதா?''

''என்னம்மா..? எதையும் சொல்லாமல் ஒதுக்கறதாய் முடிவா?''

ஆதங்கத்துடன் கேட்டாள் மகள்.

முன் அறையில் மகேந்திரன் இருந்ததே மறந்து போனது அவளுக்கு. ''என்னாச்சும்மா?''

''அது... ஐம்பதைத் தொட்டதும் பெண்களுக்கு ஏற்படும் பொதுவான பிரச்சனைதான், செல்லம்... அதைப் பெரிசு பண்ணுவானேன்? இளநீர் ஒன்னைச் சீவேன், தனம்.''

''இரண்டாய் வெட்டுங்கம்மா..'' என்றாள் மெள்ள. ''என்னோடு அவரும் வந்திருக்கார்.''

''யாரு... அவரா... மகேந்திரனா?''



''ஆமம்மா.''

அம்மா பரபரப்பாகி, அப்பாவிடம் ஜாடையாய் விவரம் சொல்ல, சூழலில் மேலும் சந்தோஷம் சேர்ந்தது.

மகேந்திரனை அறிமுகப்படுத்த, உபசரிக்க என்ற மும்முரங்கள்... அங்கு ராஜத்தான் இல்லை என்பது ஒரு விதத்தில் ஆசுவாசம்தான் என்றாலும் மறுபுறம் ஆத்திரமும் பெருகியது.

எத்தனை திமிர்... திண்ணக்கம்!

பலகாலம் கழித்து வந்திருக்கும் தன்னை, கூடவே வந்திருக்கும் விருந்தாளியைக் கூடச் சட்டை செய்யாமல் கிளம்பி விட்டானே...! பெரியவர்கள் அவனை மோகன் என்றழைக்க, இவள் மட்டும் அவனை வித்தியாசமாய் ராஜத்தான் என்றே விளித்திருக்கிறாள்.

இருவருக்கும் இடையே எட்டு வருட வித்தியாசம் என்பதால் அவன் இவளை எப்போதும் சிறுமியாகவே நடத்தி இருக்கிறான்.

அதட்டலும் அறிவுரைகளுமாய்...

ஆனால் அவன் சொல்வதை எல்லாம் கேட்டு, தட்டாமல் நடந்தது இவளது அறியாமை... அப்படி இடங் கொடுத்ததால்தான் இப்படி அலட்டுகிறான்.

''பெட்டி எல்லாம் உன் அறைக்குப் போயாச்சு போலவே... போய்க் குளிச்சிடு, மதிச் செல்லம்... அதற்குள் மதிய உணவு தயாராகிடும்.''

அதற்கான க்ரீமைத் தடவி முகத்தின் பூச்சுகளை எல்லாம் அழித்து, குளித்ததும் மறுபடி சிறுமி ஆகி விட்டது போல உணர்ந்தாள்.

உணவு உண்ட பின் அம்மாவின் முந்தானையைப் பற்றியபடியே நடந்தாள். வட்டமாய் மெல்லிசாய் அரிந்து

வைத்திருந்த வெள்ளரிப் பழ வில்லையை வாயில்விட்டு விட்டு இன்னும் ஒன்றை முகத்தில் நடவினாள்.

"என்ன மதிக் குட்டி... இதான் உன் அழகு ரகசியமா?"

"ம்ம - அன்பான அப்பாவும் அழகும் பாசமுமான அம்மாவுந்தான் இதற்கான காரணம், ரகசியம் எல்லாம்... அதை அப்படியே பராமரிக்க இந்த வெள்ளரிப்பழம் கொஞ்சம் உதவுறாள்..."

"ஓஹோ?"

"ஒரு வெள்ளரிக் காயின் கலோரி சத்து எவ்வளவு தெரியுமா... ஒரு ஸ்பூன் சக்கரை இருப்பதுக்கும் மேல் கலோரிகள்..."

"அப்ப ஒரு தட்டு புலவ்... ஐம்பது, அறுபது இருக்குமா?"

"நீங்க சொல்றது ரெம்ப இருநூறைத் தாண்டும்..."

"ஆக வயிற்றுக்கு இதுதான் ஏற்றதுன்னு..."

"பதனத்துக்கும் ஏற்றதும்மா."

"அடடே... தம்மை நல்லாவே நினைப்பில் வச்சிருக்க மதிச் செல்லம்!"

"என்னம்மா" தாயின் தோளை அணைத்தாற்போலக் கட்டிக் கொஞ்சினாள்.

"நீங்க பேசக் கேட்டுப் பழகின மொழி... இது நாம் பிறந்து வளர்ந்த மண்... எப்படி மறக்கும்?"

அம்மாவும் மகளைச் சேர்த்தணைத்தாள்.

தளர்ந்த தேகம் என்னும் அன்பின் வலிமை கொண்டு மகளை இறுக்கினாள்.

"எங்களை மறந்திட்டியோன்னு... அப்பப்ப கவலைப்படுவோம், தங்கம்."



இவளுக்கும் நெஞ்சு கலங்கியது.

அதுவரை மகளிடம் காட்டக் கூடாதென்று கவனமாக அடக்கி வைத்திருந்த ஏக்கமும் அதன் வேதனையும் உடைப்பெடுத்து வழிந்தது...

மகளுடன் தாயின் கண்ணீரைத் துடைத்தாள். உப்பு நீரைத் துடைத்த விரல்களில் பாசம் ஒட்டிப் பிசுபிசுத்தது. திருமணமாகி ஏழெட்டு ஆண்டுகள் கழித்த பிறகே தான் பிறந்ததும், தொடர்ந்த இரண்டாம் ஆண்டில் ஜனித்த மற்றொரு குழந்தை நிலம் பார்த்ததே பிறந்து - உலகில் சில மணி நேரம் கூடத் தாக்குப் பிடிக்க முடியாமல் இறந்து போனதும், மந்திரமாகிறுந்த தெரியும் - குலக் கொழுந்தாய்ப் போற்றி வளர்க்கப்பட்டாள்.

"என் பேர் மும்பைக்காரங்களுக்கு ரொம்பப் பிடிக்குதம்மா... வைப்ரேஷனான பெயருன்னு சொன்னாலும் மேன்ட்ராவின்னுதான் உச்சரிப்பாங்க. சிவருக்கு மாண்டு... எப்படி இதைத் தேர்ந்தெடுத்தீங்க?"

"என் அத்தைப் பாட்டி சொல்லிக் கொடுத்த மந்திரத்தை ஓயாமல் சொன்ன பிறகுதான்... அதாம் பத்து வருஷம் கழிச்சு விரதமாய் வந்தியே நீ - தங்கம்..."

"குழந்தை பிறக்க வேற ஏதோ தலையணை மந்திரம் அல்லது வெத்தை மந்திரமோதான் தேவையின்னு கேள்வி" என்று குறும்புடன் ஆவலுடன் எப்படி நாங்கள் அடக்கினோம்!

மும்பையில் ஆவலுடன் மேலும் சேர்க்க, பக்கமாய்ப் பேசிச் சிரிப்பார்கள்... அந்நதன் வாழ்க்கை முறை வேறு.

இங்கோ அம்மா... பாவம்... வெட்கத்தில் குன்றி விடுவார்கள்...!

இப்படி இங்கு வளர்க்கப்பட்ட தான் நாகரீக வாழ்வில் முழுக்க ஒன்ற முடியவில்லை.

வீடு வந்தவளுக்குள் ஏக நிம்மதி... நிர்மலம். தொலை தூரம் பறந்து.. சுற்றியலைந்து களைத்த பறவை அதன் கூட்டில் வந்து அடையும் போதான சுகம்...

எந்த ஆபத்தும் அலுப்பும் இனி இல்லை என்ற சுகப் பாதுகாப்பு...

## 6

அதிகாலை வழக்கம் போலவே விழிப்புத் தட்டியது.

இன்று தேன் கலந்த எலுமிச்சை ரசமும், கூடவே உடற் பயிற்சிகளும் இல்லை என்ற உல்லாசம்!

சூடாக நுரை ததும்பக் கிடைத்து காபியுடன் மாட்டுக் கொட்டகைப் பக்கமாய் நடந்தாள்.

பாலுக்காக வளர்க்கப்பட்ட பசுக்களிடம் அவளுக்கு அத்தனை பரிச்சயம் இல்லை. 'வெள்ளித்தாயி' என்று பேரிடப்பட்ட முழு வெள்ளைப் பசு சாதுவானது. ஆக அவ்வப்போது அதன் முன் புல்லைப் பரப்புவாள். அந்தப் பசு இவளைக் கண்டதும் கழுத்து மணி ஒலிக்க கழுத்தைக் குலுக்கியது... தன்னை அடையாளங் கண்டதாய்த் தெரிவிக்கிறதோ?

அதை நெருங்கியவள், மிருதுவாய் அதன் நெற்றியை நீவினாள். உடம்பு முழுக்கச் சிலிர்த்தது பசு.

அந்தச் சிலிர்ப்பில் இவளுக்குமே புல்லரித்தது.

இந்த ஜீவனும் தன்னை நினைவு வைத்திருக்கிறதே என்ற நெகிழ்வுடன் மெல்ல நலம் விசாரித்தாள்.



''நல்லாருக்கியா, வெள்ளித்தாயி?''

பசு மீண்டும் சிலிர்த்தது.

''அதற்கு உன் செயற்கை நறுமணம் பிடிக்கலை.''

சொன்னது யார் என்பது திரும்பாமலேயே புரிந்தது. வீட்டின் கொல்லையில் நிற்கும் ஜீவன் தன்னைக் கண்டு சந்தோஷிக்கிறது என்றால் பெற்றவர்கள் தன்னை எத்தனை தூரம் காணாமல் ஏங்கித் தவித்திருப்பார்கள் என்ற ரீதியில் குழைந்த மனம், இறுகியது.

''உனக்குமே கூட இந்தச் சாண நாற்றம் சகிக்க முடியாததாய் இருக்குமே, மதி... ஏனிங்க வந்தே..?''

இந்த அருமை அத்தான் என்ன சொல்கிறான்?

மாட்டுக் கொட்டகைப் பக்கம் ஏன் வந்தாய் என்றா அல்லது தாய் வீடு வந்ததே அவசியமில்லை என்றா?

இவன் எதிலும் சந்தோஷப்பட்டு விடக் கூடாது என்று சபதமே எடுத்திருப்பான் போலும்...

அவனைப் பார்க்காமலேயே விலக நினைத்தவளின் கால், கழுனித் தொட்டியில் இடறி விடத், தடுமாறினாள்...

மிக நெருங்கி நின்றவனது கைகள் உடனே அவளது தோள்களைப் பற்றின.

அழுத்தமாய் அல்ல... ஆனாலும் அவன் விரல்கள் தகித்தன. அந்தத் தீ உடம்பெங்கும் விரைந்து பரவியது... இதுவரை அனுபவித்தறியாத அந்த நூதன வெப்பத்தில் திகைத்து நின்றாள்...

அந்தத் திகைப்பு அவளை வெகு நேரம் விடவே இல்லை. தன் உடம்பில் கிளர்ந்த அந்தப் புது உணர்வு என்ன? வெள்ளித்தாயி தன்னைக் கண்ட ஆனந்தத்தில் கொம்பசைத்து உடல் சிலிர்த்ததா அல்லது பழகாத புது வாசத்தில் முரண்டிச் சுழித்ததா என்பது புரியாதது போல...

தன் உணர்வுமே இவனுக்கு விளங்கவில்லை..! மோகனின் மீது பகை, வெறுப்பு என்று விட முடியாது எனினும் அவர்களது உறவு எப்போதுமே வழுவழு என்று சுகமாய் நழுவினதில்லை.

சற்று மொரமொரவென ஒருவரை ஒருவர் விரைப்பாய் உரசியதுண்டு! ஆக அந்த விரைப்பினால்தான் உடம்பு அவன் தொட்டதும் அப்படித் தகித்ததோ? அல்லது விருப்பத்தால் விளைந்த சிலிர்ப்பா?

ஆரம்பத்தில் மகேந்திரனின் புகைப்பழக்கம்... அதன் நாற்றம் குமட்டியது. அவனுக்கோ அதின்றி முடியாது. இப்போதும் கூட விமான நிலையத்திலிருந்து வெளி வந்ததும் முதல் வேலையாய் மகே செய்தது சிகரெட்டைப் பற்ற வைத்ததுதான்... இப்போது இவளுக்குப் புகையிலை நெடி சற்றுப் பழகிப்போய் -

'இது அத்தனை ஆரோக்கியமானதில்லை!' என்பதோடு நிறுத்திக் கொள்கிறாள். அது போல ராஜத்தானின் ஸ்பரிசம் திடீரென மிக நெருக்கத்தில் நேர்ந்ததால் அப்படி விநோதமாய் உணர்ந்தாளோ..?

மகேந்திரன் எழுந்திருக்கக் கூடும் என்று பட, அவனுக்காய் வெந்நீரில் தேனும் எலுமிச்சம் பழப் பிழிவுமாய் எடுத்துப் போனாள்.

இவளும் மும்பையில் பருகுவது இதைத்தான். இவளது டயட்டீஷியன் ஆரம்பத்திலேயே சொன்ன அறிவுரை அதுதான்.

'ஷோவான தொழில் இது. நம்ப உடம்பைப் பால் போலக் கச்சிதமாய்க் காய்ச்சி வச்சுக்கணும்... பிறகு தேவைக்கேத்ப காபியோ, தேநீரோ தயாரிப்பது சுலபம். அல்லது அதையே உறைய வைத்துத் தயிராக்கலாம். கோவாவாகவும் கிளறலாம்... ஆக உடம்பு 'சிக்'கென்று



பராமரிக்க எந்த உடையும் பாவனையும் நமக்கு ஒத்து வரும்... விகல்பமாய்த் தோன்றாது...' என்று.

அந்தப் பராமரிப்பிற்கு அரிச்சுவடி இந்த புளிப்புச் சாறும் அரை மணி நேர உடற்பயிற்சியும்...

தவறாமல் செய்த அந்த நியமம் இங்கு வந்ததும் புரண்டு போனது...

கமகமக்கும் காபி... பின் அத்தானின் அணைப்பில் கிளர்ந்த குழப்பம் என...

மகேந்திரனின் அறைக் கதவைத் தட்டினாள். சற்றைக்கெல்லாம் உள்ளே அசைவுகள்... பின்பு குரல் -

''யாரது?''

''நான்தான், மகே..''

''அஞ்சே நிமிஷம்.''

மாடி வெராந்தாவிலிருந்த உயர்ந்த முக்காலியில் குவளையை வைத்தவள், வெளியே படர்ந்து, உள்ளேயும் கிளை நீட்டி எட்டிப் பார்த்த வேப்ப மரத்தின் குளிர்ச்சியை அனுபவித்தாள். உயரத்திலிருந்து காண எட்டிய தூரமெங்கும் தெரிந்த பசுமை இதமாயிருந்தது.

வெயிலில்தானே புரியும் நிழலின் அருமை. ஆக இங்கிருந்தவரை இயல்பும் சாதாரணமுமாய்க் கருதிய இவை மும்பையின் புகைப் பரப்பிற்குப் பிறகு பேரின்பம் போலப் படுகின்றன!

அகன்ற மரக்கதவு முனகலாய் விரிந்தது.

''குட் மார்னிங் மதி.''

''மார்னிங்... அம்மா போலவே மதின்னு கூப்பிடறீங்க?''

''மதின்னு கூப்பிடக் கூட ஆசைதான்.''

சிறு வயதில் ராஜத்தான் அப்படி அழைத்து அழ வைத்தது நினைவு வந்தது. விவரம் புரியும் முன் அவன்,

'குட்டி மந்தி, குறும்பு மந்தி!' என்றெல்லாம் கொஞ்சி மகிழ்ந்து போயப் பின்னர் கோபத்தில் குதித்திருக்கிறான்.

"ஓ... ஜூஸ் எடுத்து வந்தியா... நன்றி."

"காபியும் உண்டு."

முகம் சுழித்தான்.

"இங்கேயே கறந்த பாலைக் காய்ச்சிக் கலந்த காபி . நுரையும் மணமுமாய்..."

அவன் முகம் மேலும் கோணலானது.

"தோ மாண்டி... மூணு நாட்களுக்குள் பழக்கங்கள் மாற வேண்டாம். ஆனால் உன் அத்தான்... அந்த மோகன் என் பெட்டிகளை மாற்றி வச்சுட்டான்."

அவன் பேசியது புரியச் சங்கடமாய் நெளிந்தாள். இவர்களது எதிர்பாராத வருகையால் வீட்டில் வேலைக்காரர்கள் எவருமில்லை. தோட்டத்தில் மும்முரமாயிருந்தார்கள் போலும். ஆகப் பெட்டிகளை ராஜத்தான் தான் அறைகளுக்குச் சுமந்து போயிருக்கிறார்... அதிலும் எதை, எங்கு, எப்படித் திறந்து வைப்பதென்று மகேந்திரனின் உத்தரவுகள் வேறு..!

தன் பெட்டியும் தன் அறையில் இருந்ததே. வீட்டின் பெண்ணிற்காக அவன் செய்வது சகஜம்தான். விருந்தாளியையும் இப்படி விழுந்தடித்து உபசரிப்பது நம் பண்புதான்... ஆனால் ஒத்த வயது ஆணின் பெட்டியை அவன் உத்தரவுகளின்படி சுமப்பதும், வைப்பதும்... ஏனோ இவளுக்குள் கோபம் புஸுபுஸுத்தது.

தான் அன்று விவரம் புரியாமல் மோகன் எங்கோ போய் விட்டதாய்க் கருவியதும் நினைவுக்கு வந்து உறுத்தியது.

பூவேலை செய்த ஸில்க் இரவு உடையில் நின்ற மகேந்திரனைச் சற்று அலுப்பாய்ப் பார்த்தாள்.



"குளிச்சுத் தயாராகி வாங்க..." என்று விட்டு விலகினான். ஒரே காலைச் செய்தித் தாள்களுடன் நுழைந்த மோகனைக் கண்டான். வாய் சட்டெனத் திறந்தது.

"ஸாரி... நீங்கதான் பெட்டிகளை எல்லாம்... மேலே அறைகளுக்குக் கொண்டு..."

"ம்ம்.. பாரிஸ் கூடப் போயிருக்கே. தெரியும். உன் நண்பர் வெளிநாடு போனதில்லை போல?"

"ஏன்... எப்படி?"

"ல்ல... அங்கே நம் பொருளை நாமதான் சுமக்கணும். சுமை தூக்கக் கூலிகள் கிடையாது... ஆக அவருக்குச் சுமந்து பழக்கமில்லை போல... ஆனாலும் அவருக்கு உன் மேல் நிறைய அன்புதான்னு புரியுது."

இந்த அறிக்கையின் காரணமும் மந்திராவிற்குப் புரியவில்லை.

"அவரும் உன் நிமித்தம் இந்தப் பட்டிக்காட்டில் 15 நாட்கள் தங்கப் போறாரே!"

"இல்லை. மூணு நாட்கள்தான்."

அதீத வியப்புடன் பார்த்தான்.

"மூணு நாளைக்கா ரெண்டு பெட்டிகள்? இங்கே ஏதும் ஃபேஷன் ஷோ நடக்க இருக்குதா?"

அந்த நக்கல் இடித்தது என்றாலும், இவளுக்குமே அது அதிகம் என்றுதான் பட்டது.

இந்த எளிய ஊருக்கு, குளிர்பதனமற்ற வெப்பத்திற்கு அவன் கொண்டு வந்திருந்த அலட்டல் உடைகளும், அதற்குப் பொருத்தமான ஆடம்பரக் காலணிகளும் அதீதம்தான்!

காலை உணவிற்குத் தயாராகி வந்து நின்ற மகேந்திரனை ஒரு பெருமூச்சுடன் பார்த்தாள். அருகருகே நின்ற

இரு ஆண்களையும் ஒப்பிடுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இருவரில் மோகனின் உயரம் கூடுதல் - உழைத்து, வியர்த்து உரமேறியதில் ஆண்மையும் தூக்கலாகவே தெரிந்தது. அத்தனை முரட்டுக் கவர்ச்சியை அவன் புருவங்களைத் திருத்தி, கன்னங்களில் பளபளப்பேற்றிய எந்த ஆண் மாடலிடமும் கண்டதில்லை.

வெள்ளையில் நீலமும் கருப்புமாய்க் கோடிட்ட பருத்திச் சட்டை. துளி கஞ்சியும் இஸ்திரியுமான விரைப்பில், கருநீலப் பருத்தி பாண்ட், கச்சிதமான தையலில், வேலைக்குத் தோதான தைக்கி ஸாண்டல் பாதங்களில். நேற்று பிங்கட் கலர் உடைக்குப் பொருத்தமாய் அதே நிறக் காலணிகளில் அவன் நடந்தது ஞாபகத்திற்கு வர, அவளது பார்வை ஆச்சரியமாய் மேலேறியது...

மீசையற்ற வழுவழுவென்ற மகேந்திரன் முகத்திலிருந்து மிக வேறுபட்ட மீசை முகம். அடர்ந்த மீசையின் கீழ் மேலுதடுகள் காணாமற் போயிருக்க, வளைந்த கீழுதடு மட்டுமே தெரிந்தது. சிறு வயதில் மீசை முளைக்கும் முன் அவன் மேலுதடு எப்படி இருந்தது என்று யோசிக்க முயன்றாள்.

''என்ன பலத்த யோசனை... அந்த நாள் ஞாபகமா?'' ஒத்துக் கொள்வது போலச் சிவந்த முகத்தை மறைப்பதற்காய் அவசரமாய் அம்மாவைத் தேடிப் போனாள் அவள்...

## 7

''அடை வார்க்கறீங்களாம்மா... வாசம் தூக்குது...'' ஆவலாய்த் தட்டின் முன் அமர்ந்தாள் மந்திரா.



''இப்படிப் பசிக்கும் கூட நாளாச்சு... அங்கே கிடைக்கப் போறது ரெண்டே டோஸ்ட்டும் முட்டையின் வெள்ளைக் கருவும்தான் என்பது புரிந்தாற் போல, வயிறும் கூட லேசாய்த்தான் பசிக்கும்!'' சொன்ன மகள் சிரித்தாலும், கேட்ட தாயின் முகத்தில் வாட்டம்.

''ஏன்ம்மா செல்லம்? உழைப்பது சாண் வயிற்றுக் காகத்தான்னு சொல்வாங்க. அதை வருத்திக் காய விடுவானேன்... மறுபடி காய்ச்சல், காமாலைன்னு வரவழைச்சுக்காதே.''

''நான் என்ன வியாதிக்கு அப்பாயிண்ட்மெண்ட் தந்தாம்மா அழைக்கிறேன்?''

''உடம்பை இப்படிக் காய விடுவதுதான் வெத்தலை பாக்கு வச்சு அழைப்பது போல.. ஒரு மாசமேனும் இருப்பேல்ல மதிம்மா... உன்னை இப்படி நம்ப வீட்டில் பார்த்து வருஷங்களாச்சே!''

மற்றொரு ஜோடிக் கண்களும் இவளைக் குற்றஞ் சாட்டின. ராஜ் அத்தானின் கண்கள்.

இங்கிருந்து போன முதல் வருஷம் விடுமுறைக்கென வீடு வந்தாள். மறு வருடம் இவள் ஆசையாய்ச் சேர்த்து வைத்த இருபது நாள் விடுப்புச் சமயம்தான் இவளுக்கு அயல்நாடு போகும் முதல் வாய்ப்பு வந்தது. தித்தித்த திகைப்பில் திக்கு முக்காடிப் போன மகளின் துடிப்பு புரிந்து, 'போய்ட்டு வாம்மா, மதி!' என்று அனுமதி தந்தனர் பெற்றோர். மறு ஆண்டோ அழையாத விருந்தாளியாய் மஞ்சட் காமாலை - அம்மா கரிசலாங்கண்ணியும் கையுமாய் அப்பாவோடு மும்பை வந்து பத்தியமாய்ச் சமைத்துப் போட்டு மகளைத் தேற்றினார்.

ஆனால் மூன்று பேர் சேர்ந்து நின்றாலே இடிக்கும் அந்தச் சிறு வீட்டில் அவர்களது அவஸ்தையைக் காண

மகளுக்குச் சிக்கலில்லை... தோப்பு தூரவென்று வாழ்ந்து பழகியவர்களின் கவனிப்பு தேவையாய் இருந்ததால் சிக்க வேண்டிய நிலை.

இது நான்காம் ஆண்டு...

தன் கணவனாகப் போகும் மகேந்திரனுடன் வந்திருக்கிறாள்... பெற்றவர்களுக்குப் பெரு மகிழ்வுதான்...

ஆனால் அம்மா மகிழ்வது போல நடிப்பது போலும், அப்பா சற்று யோசனையுடனேயே இருப்பதும் ஏன்...?

தவிர மோகன்ராஜ் அத்தான் இங்கயே இருப்பதும் ஏன்?

நினைவு தெரிந்த நாளாய் இரு குடும்பங்களும் நெருக்கம் என்பதால் ஒருவர் மற்றவர் வீட்டில் இருப்பதும் உண்பதும் சகஜம்தான்.

உறுத்தலுடன் அவன் பெற்றோர், குடும்பத்தார் நினைவு எழ, அவர்களின் நலம் விசாரித்தாள்.

"எல்லாம் சௌக்கியம்தான்."

"பரிசுப் பொருட்களை அத்தை, மாமாக்கும் வாங்கினேன்... சாயங்காலமாய் வீடு வரட்டுமா?"

"வரலாம்... ஆனா வீட்டில் பெரியவங்க அனிதா வீட்டிற்குப் போயாச்சு... அவளுக்குப் போன வாரம்தான் மகன் பிறந்தான்..."

"சந்தோஷம்... பரிசுகளை..."

"எங்கே வாங்கினே? பாரீஸ், இத்தாலி... அல்லது, மும்பைதானா?"

ராஜின் புருவங்கள் சுருங்க, இவளது எரிச்சல் வேதாளம் மறுபடி உச்சாணிக் கிளை தேடி ஏறிக் கொண்டது.



"திரும்ப இரண்டு வாரங்களாகும்."

"ஓஹோ?"

"மோகனும் போயிருக்க வேண்டியது... ஆனால் வேலையிருக்குன்னு இங்கேயே தங்கிட்டான்... உண்மை என்னன்னா எங்களைத் தனியே விட்டுட்டுப் போக அவனுக்கு மனமில்லை."

அப்பா நலிந்த குரலில் சொல்ல, இவளுக்குக் கூசி விட்டது. பெற்ற தான் தொலைவில் இருந்தபடி அவ்வப்போது 'பேசி'யில் நலம் விசாரிக்க, இவன் மௌனக்கெடுவது...

"நன்றி அத்தான். நீங்க இங்கே இருப்பது அப்பா, அம்மாவிற்குப் பேருதவி... இல்லைன்னா... சிரமம்."

"இல்லைன்னா... நீ நிலைமை உணர்ந்து... அதாவது உணர முடிந்தால் இங்கேயே வந்து இருந்திட மாட்டாயா?"

அடை தொண்டையில் விக்கியது.

தேங்காய்ப் பத்தை, கறிவேப்பிலை, வெங்காயம், காரம் எல்லாம் அளவாய்க் கலந்து வாயில் மொறமொறப்பாய் அரைபட்ட அந்தப் பதார்த்தம் ருசியற்றதாகவே பட்டது.

மகேந்திரனுக்கு அடை ருசிக்கவில்லை போலும்...

மருந்தை விழுங்கும் பாவனையிலிருந்தது அவனது முகம்! தனக்குக் கல்யாணமான பிறகு பெற்றவர்களின் நிலை என்ன? மும்பைக்கு அவர்கள் வருவதும் தங்குவதும் சிரமம். இங்கே வந்து மூன்றே நாட்களைக் கழிப்பதும் கூட மகேந்திரனுக்குத் துன்பம்... எனில் இருவருக்கிடையே தான் அவஸ்தைப்பட நேருமோ?

"இன்னும் கொஞ்சம் வெண்ணெய் தொட்டுக்கோ, மதிம்மா."

புதிதாய்க் கடைந்தெடுத்த பசும் வெண்ணெய் நீர் முத்துக்களோடு இவளது தட்டில் விழுந்தது.

''அம்மா... வந்து...''

''வெல்லம் போதுமா?''

''ம்ம்... உங்களுக்காய் நான் கொண்டு வந்த சேலை, பொருட்களெல்லாம் பிடிச்சிருந்ததா?''

''பின்னே? உன் தேர்வு... வந்து நயமான பருத்தியில் நான் கட்டறதுக்குத் தோதாய் எடுத்திருக்கேம்மா... அந்த அபூர்வ நிறங்களில் ரவிக்கைத் துணி கிடைக்காதுன்னு அதுவும் கூட வாங்கிட்டே. தையல்காரரை வரச் சொல்லி, அத்தனையையும் தைத்து நீ போகறதுக்குள்ளே தினத்துக்கு ஒன்றாய் உடுத்திக் காட்டிடறேன்... அப்பாவுக்கு அந்த ஸ்வெட்டர் கச்சிதம்... இப்பல்லாம் அவங்களுக்குக் குளிர் தாங்கலை.''

''நேற்று வேற என்னவோல்ல சொன்னே?''

இழுத்த கணவரைக் கேள்வியுடன் பார்த்துப் பின் புன்னகைத்தார்.

''ம்ம்... சொன்னேன்... எல்லாம் அழகுதான்... ஆனா மதிச் செல்லம் வந்ததுதான் பெரிய பரிசுன்னு... அதுவும்... அவரை...''

''அதோடு நிறுத்தலை, உன் அம்மா... அடுத்த வருஷம் ஒரு பேரக் குழந்தையும் வந்துட்டால் - கோடிப் பொன்னை அவ மடியில் கொட்டினது போலாயிடுமாம்!''

அபூர்வமாகவே பேசும் தந்தையின் பேச்சை ஆச்சரியமாய்ப் பார்த்திருந்தாள்.

''ஆமா, மதிச் செல்லம்... அது போதும்... மறுபடி நம்ப வீட்டில குழந்தை தவழ, அழ, சிரிக்கன்னு இருந்தால் போதும்... உனக்கு மும்பைல குட்டிச் செல்லத்தைப் பேணிக் கொள்ள கஷ்டம்தான்... அதனால எங்களிடம் விட்டுடு... எங்க சூன்யத்தை அவன் பிஞ்சுக் கையும் பொக்கை வாய்ச் சிரிப்பும் போக்கட்டும்... என்ன?''



மகேந்திரனின் முகம் போன போக்கில் இவளுக்கு அடையை மெல்லவும் கூட முடியவில்லை.

ஒருவருக்கொருவர் சங்கோஜப் பார்வைகளைப் பரிமாறினர்.

கல்யாணம் பற்றி எளிதாகவே பேசி, மோதிரம் போடுவது வரை வந்தவர்கள் குழந்தையைப் பற்றி யோசிக்கவேயில்லை..!

அந்தக் குழந்தையை இப்போது பெரியவர்கள் சீராட்டுகிறார்கள்!

ஏன் பிள்ளை பற்றிய எண்ணமே துளிர்க்கவில்லை?

மேனி அழகை மூலதனமாய்க் கொண்ட வேலை என்பதாலா? ஆனால் இப்படி இருப்பது இயற்கை அல்லவோ? கல்யாணத்தின் போதே பல சடங்குகள், ஆசீர்வாதங்கள் வம்ச விருத்தியைக் குறிக்கும் வகையில் உண்டே...

தொட்டில்தானே தாம்பத்தியத்தின் நிறைவாம்!

அதைப் பற்றிய கனவுகளே இன்றி இவர்கள் இருந்தது இப்போது சற்று விசித்திரமாகவே பட்டது.

''தரிக்காத பிள்ளைக்கு ஜாதகம் எழுதறீங்க, அத்தை... அவ அதை எல்லாம் பற்றி யோசிக்கலை.''

மிகச் சுலபமாய் உண்மையைப் பிட்டு வைத்தான் ராஜ். ''பிள்ளை வரம் யோசித்தா வருவது? அது கடவுளின் கிருபை. தம்பதிகள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பில் மகிழ்ந்து ஆண்டவர் அருளும் வரம்.''

எந்த முக பாவமும் இன்றி மகேந்திரன் கைகழுவ, இவள் வெட்கப்படுவதுபோலக் காட்ட முயன்றாள்!

''அம்மா சொல்றதுதான் சரி, மதி. மலைய்க்கா எல்லாம் இல்லை - குழந்தையைப் பெற்ற பின்பும் விளம்பரங்களில் கலக்கியபடி!''

ராஜ் சொல்ல, வியப்புடன் பார்த்தான்.

''என்ன, மாடும் மாறுமாய் இருப்பவனுக்கு மலெப்க்கா எப்படித் தெரியும்னா? இங்கேயும் பத்திரிகையும் செய்தித் தாளும் வருதே.''

''தவிர இப்ப உதவிக்கு ஒரு மானேஜரும் நியமிச்சிருக்கான், மோகன் - அந்த மானேஜரின் மனைவி வாசுகி - இப்ப மாசமாய் இருக்கா... மோட்டார் பம்ப் செட்டை அடுத்து அவங்களுக்கு ஒரு வீட்டைக் கட்டியும் தந்தாச்சு... வாசுகி வரப் போக இருக்கறதில் எனக்கு ஒரு சந்தோஷம்.''

''வளைகாப்பெல்லாம் நடத்துவதாய்த் திட்டம்.''

''ஓ... நான் இன்னும் அவங்களைச் சந்திக்கலையே?''

''மார்க்கெட்டிங் விஷயமாய் மானேஜர் மதுரை போயிருக்கார். உறவுக்காரங்க அங்கு உண்டென்பதால் வாசுகியும் கூடப் போயிருக்கா.''

மார்க்கெட்டிங்? தேங்காய், பருப்பு, புளியைச் சந்தைக்கு எடுத்துப் போய் விற்பதற்கு இந்த நவீன ஆங்கிலப் பதம் வேறா?

மனதுக்குள் சற்று ஏளனமாகவே கேட்டுக் கொண்டாள் மந்திரா.

## 8

**வ**ரிசையில் வழுவழுவென்று நின்றன, அம்மஞ்சள் பூசணிக்காய்கள்.

அவற்றின் உச்சிப் பகுதியைக் கத்தியால் வெட்டி எடுத்த புவனி, வெட்டிய மூக்கைப் பத்திரப் படுத்தினாள்.



மற்றவள் பூசணியின் உள்பகுதியை வளைவான ஒரு கரண்டியால் வழித்துச் சுத்தப்படுத்த, இன்னும் ஒருத்தி அதன் வெளிப்பகுதியில் சீரான வட்டங்களை வெவ்வேறு வடிவில் வரைந்து வைத்தாள்.

''அசந்துட்டாங்க போ, சின்னம்மா!''

''யப்பா... என்னா அழகுல்ல அவுங்க!''

''அது நாம அசந்தது புள்ள. அவுங்க நம்ப பூசணி விளக்கைக் கண்டு அசந்ததைச் சொல்றேன்.''

''அதைத்தான் ரெண்டு தரம் சொல்லிட்டியே.''

''செல்வி இப்பத்தான் வந்தா. அவளுக்கோசரம் சொல்லுதேன்!'' என்று அதட்டிய லட்சுமி, தன் கைகளை இரு கன்னங்களில் பதித்துப் பாவனையோடு நடித்தும் காட்டினாள்.

'''லோ லவ்லி... எக்ஸ்.. டாட்டி..' அப்படீன்னுல்லாம் ஏதேதோ சொன்னாக.''

''அப்படீன்னா?''

''அழகு, அம்சம்னு அர்த்தமாயிருக்கும்... வேற நாம என்னத்த இங்கிலிஷ்ல கத்தோம்!''

''ம்ம்... ஆனா முதத் தரம் நாமளுமே இந்தப் பூசணி விளக்கைப் பாத்ததும் அயந்துதான போனோம்!''

''பின்ன? பூசணி மேல உள்ள வட்ட வட்ட ஓட்டை வழியா உள்ளே வச்ச மெழுகுவத்தி வெளிச்சம் தங்கமா வழிஞ்சது கொள்ளை அழகுதான்.''

''அழகுதான்... ஆனா அது இப்படி விலை போவும்னு யாரு எதிர்பார்த்தா?''

''ராஜய்யா எதிர்பார்த்துத்தான் நமக்கு இந்த வேலையைக் கத்துக் கொடுத்திருக்காரு. என்ன பத்துக்

வரைஞ்சாச்சா?'' என்றபடி, மின்சார காய்க்கு வட்டம் ட்ரில்லரைக் கையில் எடுத்தான் புவனி.

குடைந்த பூசணியின் பக்கங்களில் வரையப்பட்ட வட்டங்களில் அவன் கவனமாய் ஓட்டிய ட்ரில்லர் வட்டத் துளைகளை உருவாக்கியது.

வெளியே சிறிது பாலிஷும், உள்ளே பாதுகாக்கும் திரவமும் பூசப்பட்டதும், பூசணியின் உள்ளே கனத்த குட்டை மெழுகுவத்திகள் பதிக்கப்பட்டன.

ஓரமாய் வைக்கப்பட்டிருந்த பூசணி மூக்கு மறுபடி உரிய இடத்தில் பொருத்தப்பட, அந் நூதன விளக்குகள் தயாராயின!

''உள்ள இருக்கற மெழுகை ஏத்தினதும்தான் இருக்கு விஷயம்... வெளிச்சம் டிசைன் டிசைனாய் விழும்... அதுவும் ஒரே அறையில் மொத்தமாய் ஏழு, எட்டுன்னு ஏத்தி வச்சா கண்ணை அள்ளும்.''

''நேத்தி ராவு சாப்பாட்டு மேசைக்கு நடுவால இதுல ஒன்னைத்தாம் பின்னை ஏத்தி வச்சோம்... அதுக்கே சின்னம்மா கன்னா பின்னான்னு இங்கிலீஷ்ல அதிசயப் பட்டாங்க.''

''இங்க இம்புட்டு வேலை நடக்குது... சின்னவுக இங்கியே தங்கி எல்லாத்தையும் மேற்பார்வை பண்ணிட்டு இருந்தாப் போதும். பெரியவங்களுக்கும் நெஞ்சு குளுந்து போவும்... எங்கயோ சீமையில போய் இருந்துகிட்டு...''

''ந்தா... அது இங்கன காய வேண்டிய நிலவா? எத்தனை அழகு... ஸ்டைலு... அதது அங்கங்கே இருந்தாத்தானேடி ஜொலிப்பு... பவுசெல்லாம்!''

''நாலு வருஷமா பம்பாயி போயி ஆசைக்கு ஜொலிச்சாச்சல்ல! இனி நம்ப வீட்டுல விளக்கேத்தற சோலிய பாக்க வேணாமா?''



''ந்தா... பெரிய வீட்டுக்கு நாட்டாம்மை பண்றதுக்கா நமக்கு இங்கன சம்பளம்... வேலையை முடிங்கடி.''

''இன்னைக்கே நாப்பது பீஸு முடிக்கணுமாமேக்கா... இத்தனையும் ஒரே இடத்துக்கா போவுது?''

''சென்னையில இரண்டு பெரிய ஹோட்டலுக்குப் பப்பாதியாப் போவுமாம். இதுவரை மதுரை வரைக்கும் போன நம்ம கைவேலை இனி பட்டணம் வரைக்கும் போவுதுடி.''

''இனி வடக்கே கூடப் போவுமாயிருக்கும்.''

''வடக்கேயிருந்து நம்ம மந்திராம்மா இங்க வரணும்னு முதல்ல ஆண்டவனை வேண்டிக்கோ.''

''யக்கா!''

வேலையில் மும்முரமாயிருந்த லட்சுமி நிமிர்ந்தாள்.

''என்ன?''

''ஒண்ணு கேக்கட்டா?''

''விஷயம் தப்பானது போல... அதுதான் தடுமாறுறே.''

''ல்ல... சின்னம்மாளோட வந்துருக்காரே ஒத்தரு...''

''ம்ம்.. கருட மூக்கும் முழியுமா.''

இப்போது... இந்தத் தொனியில் கேட்டவளின் துணிவு கூடியது.

''அவரேதான்... அவரு... அவரா மதியம்மாளைக் கட்டிக்கப் போறாராம்?'' கேட்டவள் குரலைத் தழைத்தாலும், மற்றப் பெண்களும் செய்த வேலைகளை விட்டு விட்டு உடம்பெல்லாம் காதாய்க் கவனித்தனர்.

''அப்படித்தாம் போல...'' சொன்ன குரலின் காரத்துக் குறைந்தது, மற்றவர்களின் தைரியத்தை முடுக்கி ஏற்றியது.

''அப்ப கல்யாணமானா மதிம்மா இங்ஙன இருக்க முடியாது. பிறவு பெத்தவங்களை... இம்புட்டு சொத்தையும்?''

''இப்போ போல ராசய்யாதான் பொறுப்பாய்ப் பார்த்துக்கனும்.''

''இவரையே... வந்து... மதிம்மா... வந்து.''

''போதும்ம. வாயை மூடிட்டு வேலையைப் பாரு.''

கனீர் என்று வந்த வார்த்தைகளோடு இணைந்து பளிச்சிட்ட பார்வையிலும் காரமான சேதி தெரிய, பெண்கள் வேலையில் மும்முரமானார்கள்.

சற்றைக்கெல்லாம் அங்கு தந்தையோடு வந்த மந்திராவைக் கண்டதும் மறுபடி பிரகாசமானார்கள்.

''அடடே... எத்தனை விளக்குகள்... இத்தனையும் இப்ப செய்ததா?'' வியந்த மந்திராவின் முகத்தை அதை விட வியந்து நோக்கினார்கள், அந்தக் கிராமத்துப் பெண்கள்.

மிகக் கவனமாய் மெருகிடப்பட்ட அதீத அழகை அழகே நின்று பார்த்த பிரமிப்பு!

''அதுவும் உள்ளே விளக்கை ஏற்றிட்டா... அத்தனை அற்புதம்.''

''நீங்... நீங்களுந்தாம்மா.''

''என்ன?''

''ரொம்ப அழகாயிருக்கீக.''

அடக்க மாட்டாமல் வெளிப்பட்ட பாராட்டில் மந்திராவின் முகம் கனிந்தது.

விளம்பர உலகில் பாராட்டும் புகழுரைகளும் வெகு சகஜம். 'எப்படியிருக்கே? சௌக்கியந்தானே?' என்பது போல.

''இன்னைக்குப் பிரமாதமாயிருக்கே.''



''உன் உடை அபாரம்!'' - என்பது.

ஆனால் மெய்யான பாசம், பெருமிதத்துடன் வந்த பாராட்டு பன்னீராய் நெஞ்சைக் குளிர்வித்தது.

''நன்றி... எவ்வளவு நாளாய் இதைச் செய்றீங்க... யார் கற்றுத் தந்தது?''

''எப்பன்னு கேக்கறீங்களாம்மா?'' சற்று யோசித்தாள் லட்சுமி... ''அது அம்மாக்கு முடியாமப் போச்சல்ல... அது மாசி மாசம்... அப்பத்தான் ராசய்யா...''

அப்பா குறுக்கிட்டார்.

''ஏழெட்டு மாதங்களாய்த்தான்... மோகன்தான் இவர்களுக்குக் கற்றுத் தந்து...''

''அவரேவா?''

''பெண்கள் கல்லூரியில் கைவினைப் போட்டிக்கு உங்கம்மாவை நீதிபதியாய் அழைக்க... அப்ப அவளுக்கு மேலுக்கு முடியாமல் இவனை அனுப்பினா. அங்கே முதல் பரிசைத் தட்டிகிட்டது இந்தப் பூசணி விளக்கு. அதைச் செய்த மாணவிக்குத் தனியே உங்கம்மா கையால் ஒரு மோதிரத்தைப் பரிசளித்து, இவங்களுக்கு அந்தச் செய்முறையைக் கற்றுத் தர வைத்தவன்... அதைச் சற்று மேம்படுத்தவும் செய்தான்.''

''ராஜத்தாளுக்கு இதிலெல்லாம் ஆர்வம் இருப்பதாய் நினைச்சதே இல்லைப்பா.''

''எல்லாம் உங்க அம்மாக்காகத்தான்.''

அவர் நடக்க, இவளும் தொடர்ந்தாள்.

''அம்மாக்கு முடியலைங்கறது பற்றி எனக்கு ஒரு வார்த்தை சொல்லலியேப்பா?'' ஆற்றாமை தாளாமல் கேட்டாள்.

''அப்ப நீ வெளிஸ் போயிருந்தே.''

''ம்ம்... பதினைந்து நாட்கள் டிரிப்... வந்த பிறகும் அது பத்தி... அம்மா ரொம்ப கஷ்டப்பட்டாங்களாப்பா?''

''பெண்களுக்கு அசதியும் சோர்வுமாய்ப் பருவம் போல... உடம்பு அதிக உதிரப் போக்கால் பலவீனப்பட, ஒழித்த நாராட்டம் கிடந்தா... மனகம் நைந்து போச்சு... தான் தனியாள்... தனக்குன்னு யாருமில்லை, தன்னால் பிறருக்குக் காலணாப் பிரயோசனமில்லைன்ற புலம்பல் வேற...''

''ம்ம்.''

''மோகன் ஒரு பெண் டாக்டரிடம் கேட்க, இந்தக் கால கட்டத்தில் பெண்கள் மனதை எதிலேனும் செலுத்தனும். உபயோகமாய், சுவாரஸ்யமாய்க் கழியும் நேரம்தான் இந்த வகை மனச் சோர்வுக்கு மருந்துன்னு...''

''ஓ... புரியுது. அம்மாக்கு இந்தப் பூசணி விளக்கு வேலை பிடித்திருக்குதா?''

''சிறு பெண்ணாட்டம் ஆயிட்டா... நாலு பெண் களோடு சேர்ந்து உட்கார்ந்து வரைய, வெட்டன்னு... பிறகு ஆர்டர் வாங்கன்னு... நேரம் கழியுது. உன்னை நினைச்சபடி மோட்டுவளையை வெறிச்சபடி உட்கார்ந் திருப்பது, புலம்புவது எல்லாம் குறைஞ்சு... பிறகு நின்னுடுச்சு.''

குற்ற உணர்வில் மகளின் மனம் துடித்தது.

''உனக்குக் கல்யாணமாகி இதே மும்பையில் இருந்திருந்தால் உங்கம்மா இத்தனை கவலைப்பட மாட்டா. ஏதோ தன் கடமையில் தவறினது போலொரு பதைப்பு அவளுக்கு... பெண்ணுக்கு ஏற்ற வாழ்வு சீக்கிரம் அமையணுங்கற கவலையில் மனசைக் காய்ச்சி எடுத்தா...''

''இனி அடிக்கடி இங்கே வந்துட்டுப் போறேன்ப்பா.''



அவரது முகம் இறுகியது... மகேந்திரன் இங்கு தரையில் விழுந்த மீன் போலத் தவிப்பதை அவர்தான் பார்க்கிறாரே... ஆக அவன் வர மாட்டான்... கணவனை விட்டு மகள் எத்தனை நாட்கள் இங்கே வந்து இருப்பது..?

கையை ஆட்டினார்.

''அவரவர்க்கு அவரவர் வாழ்வும்மா. நீங்க சந்தோஷ மாய் இருந்தால் சரி.''

ஆனால் அவளுக்கு அது மட்டுமே சரியில்லை என்பதாய்ப் பட்டது.

தன் பிள்ளைகளேனும் இங்கே இவர்களின் பாசத்தில் திளைத்து, வளர வேணும். குழந்தை பற்றிய பேச்சில் மகேந்திரனின் முகத்தில் ஏறிய சுழிப்பு நினைப்பு வர, வயிறு சுருண்டது.

## 9

உருண்ட வெள்ளிக் குவளையில் பசுவின் மடுவி லிருந்து பீறிட்ட பால் 'சர் சர்' எனச் சங்கீதத்தோடு இறங்கியது.

சேர்ந்திருந்த பாலைப் பீய்ச்சியது 'விர்'ரென்று ஊடுருவ, நுரை நுரையாய்ப் பொங்கிய அழகை ரசித்தபடி மரத்தில் சாய்ந்து நின்றாள்.

ஒரே லயத்தில் கேட்ட ஓசையும், பசுஞ்சாணப் புல்லுமாய் விரவி வீசிய காற்றும், பாலின் வெண்நுரைப் புரளலும் அவளுள் அசாத்திய அமைதியைத் திரட்டின.

அதை நிதானமாய் அனுபவித்தாள்.

மும்பையில் இப்படி ஒரு நிமிடம் கூட முழுதாய்த் தவம் போன்ற நிலையில் நின்றதில்லையே...

தேவையான பாலைக் கறந்த பின், அவிழ்த்து விடப் பட்ட கன்று ஓடிப்போய்த் தாயின் மடியை முட்டியது.

அம்மா குழந்தை பற்றிப் பேச, தானும் மகேந்திரனும் விழித்ததை நினைத்து வெட்கினாள்.

திருமணத்தின் அடுத்த நிலை அதுதானே... ஆனால் அதைக் கூட ஏன் இருவரும் யோசிக்கவில்லை? ராஜத்தானின் பார்வையிலிருந்த ஏளனம் அதற்காகத்தானோ?

முன்தின இரவு உணவிற்குப் பிறகு ஒன்பதுக்கெல்லாம் கொட்டாவி விட்டான்.

"என்ன ராஜாத்தி... தூக்கமா... பயண அலுப்பு."

"ஆமாம்மா.. தினம் இந்நேரத்துக்குப் படுத்திடுவேன்... அதான்."

"தம்பி, நீங்களும்."

"எனக்கு நடுராத்திரியைத் தாண்டணும். கம்ப்யூட்டரில் மேய்ந்து, விருந்து, கேளிக்கைன்னு சுற்றுவேன் - எனக்கு மாண்டி போல அதிகாலையே எழ வேண்டிய அவசியமில்லையே..."

மறுபடி அத்தானின் பார்வை இவளில் ஏளனமாய்ப் படிந்தது. என்ன சொல்ல வருகிறான்?

இதிலும் உங்களுக்குள் ஏழாம் பொருத்தம். நீ ஒன்பதுக்கெல்லாம் படுத்து, அதிகாலையே வேலைக்கு ஓட, உன்னவர் அதிகாலை தூங்கி, நடுப்பகல் எழும் வர்க்கம் போலவே, என்ற சீண்டலா?

இவளுக்குத் தலை சுற்றியது.

"கல்யாணத்திற்கு உங்க பக்கத்திலிருந்து எத்தனை பேரை எதிர்பார்க்கலாம், தம்பி? தென்காசியில் நல்ல



ஹோட்டல் உண்டு. தேதி குறிச்சிட்டா... இப்பவே அறைகளைப் பதிவு பண்ணிடலாம்."

அப்பா சொல்ல, மகேந்திரன் அதீத ஆச்சரியம் காட்டினான்.

"எங்க கல்யாணம் - இங்கேயா?"

அவன் இழுத்த இழுப்பில் தந்தையின் முகம் விழுந்து போனதைக் கவனித்தாள்.

"எங்களுக்குத் தொழில் முறை நட்பு அதிகம். என் பக்க உறவினரை நான் அழைக்கவே போவதில்லை... அநாவசியக் கூட்டம்!" - முகம் சுழித்தான்.

"நாங்க உங்க பெற்றவங்க பெரியவங்களைச் சந்திக்கப் பேச வேண்டாமா?"

"அது வேண்டாத பிரச்சனை! சீர், பணம், பலகாரம்னு உங்களைக் குடைஞ்செடுப்பாங்க... பணம்... உங்களால் முடிஞ்சதைத் தந்தால் நாங்க மும்பையில் நட்சத்திர ஹோட்டலிலிருக்கும் வரவேற்புக்குப் பயன்படுத்திக்கு வோம்... எல்லாம் எங்க பொறுப்பு."

அவன் சொன்ன தோரணை நெருடியது.

ஏதோ கடமைக்காக இங்கு வந்தது போலும்... ஆனால் தரும் காசு மட்டும் பயன்படும் என்ற தோரணை பிடிக்கவில்லை.

"எங்களால் மும்பைக்கு வந்து உதவக் கூடிய அளவில் உடம்பில்லை, தம்பி. இங்கென்னா ஆள், உறவு உண்டு. முக்கியமாய் மோகன்... அத்தனை தெளிவாய் எல்லாவற்றையும் பார்த்துச் செய்யற பிள்ளை!" - சொன்ன தாயின் கண்கள் மோகனை வாஞ்சையாய் வருடின.

மோகனின் பாசமும் பராமரிப்பும் அதிகம்தான்.

அது இன்றித் தன் பெற்றோர் தவித்துத் தடுமாறிப் போயிருப்பார்கள். தாயின் நிலையறிந்து ஒரு சிறு தொழில் ஆரம்பித்துத் தருமளவிலான கரிசனை...

ஒரு மகனாய் அவன் இங்கேயே இருப்பது பெரும் பாக்கியம்தான்.

தன்னை இளமையில் ராஜ் அத்தான் சீண்டியது ஞாபகம் வந்தது. மட்டம் தட்டியது... அவன் காலையே சுற்றி வந்த தன்னைத் செய்த உதாசீனம்... அப்படிப் பட்டவன் பெரியவர்களிடம் இத்தனை கனிவும் கரிசனையுமாய் இருப்பான் என்று அவள் எதிர்பார்க்கவே யில்லை.

மகேந்திரனிடம் தெரிந்த மாற்றமும் எதிர்பாராததுதான்.

மும்பையில் உல்லாசமாய், உற்சாகமாய் இருந்தவன் முகம் இப்போது சிடுசிடுப்பும் சுழிப்புமாய் இருக்கின்றது.

ஏன்... அவனுக்கு இந்த ஊரும் வீடும் பிடிக்கவில்லை. இவளைப் பெற்றவர்களிடமும் சற்று உதாசீனமாகவே நடந்து கொள்கிறான்.

'சற்று ஒதுங்கியே நில்லுங்கள். உங்கள் தயவு எங்களுக்கு வேண்டாம். நாங்களும் இந்தக் கிராம மண்ணில் உங்களோடு உருண்டு புரள்வதாயில்லை!' என்பதான தோரணை.

''ம்மா...'' பகவின் அழைப்பு அவளை நிகழ்காலத் திற்கு இழுத்து இறக்கியது.

மகேந்திரன் இவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

கருட மூக்கில் சிறு சுழிப்பு!

''என்ன மான்டி... இந்த நாற்றத்தில் என்ன சிந்தனை?''

''நாற்றமா? இந்தக் காற்றும் காட்சியும் அற்புத மாயில்லை!''



எதை அற்புதம் என்கிறாய் என்பது போல அவன் கண்கள் தோட்டத்தை ஒரு முறை சுற்றி வந்தன.

''நாம ஏன் குழந்தைகள் பற்றியே யோசிக்கலை, மகே?''

''என்னா அதற்கு அவசரமேயில்லை... குறைஞ்சது ஆறு வருஷங்களுக்கு நீ உன் வேலையில் பிஸி... அதுவும் அழகை மூலதனமாய்க் கொண்ட நம் வேலையில் குழந்தை - பெரிய இடைஞ்சல்.''

''முப்பது வயசுக்கு மேல் பெற்று... பிறகு வளர்த்து... எனக்கு இரண்டு குழந்தைகளேனும் வேணும்... என்னைப் போல ஒற்றையாய் வேண்டாம்.''

அதற்கும் அவனது மூக்கு சுழித்தது.

''ஒண்ணே போதும்... அதுவும் பையனாய்ப் பிறந்தால் வசதி.''

தான் கடவுள் போன்ற பாவனையில் தீர்மானித்தான்.

தங்க நிறக் குஞ்சுகளுடன் பெருமிதமாய் ஒரு கவனத்துடன் நடந்த கோழியைச் சிறிது ஏக்கத்துடன் கவனித்தாள்.

இயல்பான இன்பங்களை இழந்து ஒரு இயந்திரத் தனமான வாழ்வை ஏன் வாழ வேண்டுமென்ற குமுறல் உள்ளே ஆரம்பமாகி இருந்தது.

மோகனராஜின் குடும்பத்திற்காய் வாங்கிய பரிசுகளுடன் அவளது வீட்டிற்குப் போனாள். தனியாகத்தான்... மகே வரவில்லை என்று மூக்கைச் சுழித்து விட்டான்!

வீடு நேர்த்தியாய்ப் பராமரிக்கப்பட்டிருந்தது.

''வா மதி...'' என்ற அவன் அழைப்பும், அந்நேரம் அவனது கண்களில் வந்த ஒளியும் மகிழ்வாயிருந்தது.

பரிசுகளைப் பிரித்துக் காட்டினாள்.

இளநீரைப் பருகியபடி "உங்களுக்கு இந்த டி-ஷர்ட்ஸ்."

இதைப் போடுவான் என்ற கிராமத்தில் அவன் எங்கே இதைப் போடுவான் என்ற அப்பரிசை அவன் நிறைவாகவே வாங்கிய அப்பரிசை அவன் நிறைவாகவே வாங்கிக் கொண்டான்.

"ஏனோ... இந்த வகைச் சட்டைகளை நான் வாங்கினதில்லை... இனிப் பயன்படுத்தறேன். நன்றி."

"நான் உங்களுக்கு நூற்றுக் கணக்கில் நன்றி தெரிவிக்க வேண்டும் போலிருக்குது... நன்றி, ராஜத்தான். அதிலும் முக்கியமாய் அம்மாக்கு."

"சோம்பலும் சோர்வும்தான் மனுஷனுக்கு முதல் எதிரி... அதிலிருந்து அம்மாவைக் காக்க இது ஒரு எளிய வழி."

"நல்ல விற்பனையாகிறது போல, இந்த நவீன விளக்கு?"

"ஒரு வாரத்திற்கு வைத்து, தினம் மாலைகளில் பயன்படுத்தலாம் என்பதால் ஹோட்டல்களில் வாங்கறாங்க... உணவு மேஜைகளில் பொருத்தவும் அலங்காரமாயும் இருப்பதால் நல்லா போகுது..."

"லாபம் கூட வருதாமே?"

"அதை விட நாலு பெண்களுக்குப் பிழைக்க வழி தந்துட்டோம்ற சந்தோஷம் அதிகம்... அத்தையே ஆர்டர்கள் எடுத்து, வரவு செலவு பார்ப்பதால் உற்சாகமாய் ஈடுபடறாங்க."

"ஆமாம்."

"ஏது, மகேந்திரன் உன்னைத் தனியே அனுப்பிட்டார்? அவருக்கு நம்ப ஊர் பிடிக்கலைல்ல?"

"அவருக்கு இங்கே பொழுது போகலை..."



"ம்ம்... கம்ப்யூட்டர், கிளப், டான்ஸ், டின்னர்... வாழ்வில் இவைகளைவிட முக்கியமான, உன்னதமான விஷயங்கள் உண்டுன்றது... புரியணும்."

இவள் மௌனமாய்ச் சுவரில் தொங்கின பழங்காலக் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களையே வெறித்தாள்.

முற்றிலும் வேறு வித வாழ்க்கை வாழ்ந்த மனிதர்கள் அதிலிருந்து இவளை முறைப்பது போலிருந்தது...

மகேந்திரனும் இதை ஏதோ நூதன வாழ்க்கையாய்க் கருதுகிறான்...

அதில் மந்திரா மகிழ்வதும் கூட அவனுக்குப் பொறுக்கவில்லை.

"அப்ப உள்ள குடும்பங்களில் குறைஞ்சது நாலைந்து குழந்தைகள்!" என்றான் மோகன். "உங்களுக்கு...?"

"ஒரே குழந்தை போதும்னு... தெரியலை..." ஒருவித ஆயாசத்துடன் பெருமூச்செறிந்தாள்.

"உங்களுக்கிடையே நிறைய வேற்றுமைகள். வேலைக் கான நேரம், குடும்பம் அமைப்பதில், உணர்வுகளில்..."

"எதிர்த் துருவங்கள்தானே ஒன்றை ஒன்று ஈர்க்கும்."

"ஈர்த்த பின் நம்மை ஒட்டி வைத்திருக்கச் சில ஒற்றுமைகளேனும் வேணுமே..." பேசியவன் மிக நெருங்கி நின்றான்.

நேற்றைப் போலத் தடுமாறி அவன் கைக்குள் விழ, பட நேருமோ என்ற இறுக்கத்துடன் நின்றாள்.

முதுகுத் தண்டில் இரும்பாலானது போன்ற விறைப்பு.

"பெண் உரிமை, விடுதலை, சுதந்திரம் எல்லாம் என்னன்னு யோசித்ததுண்டா, மதி?"

"அதை அனுபவிச்சிட்டிருக்கறதாய் நினைக்கறேன்!" - சற்று மெத்தனமாகவே பதிலளித்தாள்.

''அப்படியா? உன் பெற்றோரை வந்து பார்த்து வருஷங்களாச்சு... உன் கல்யாணம் எங்கே என்பதில்கூட உன் கருத்துக்கு மதிப்பில்லை. உன் ஆசைப்படி குழந்தை பெத்துக்க முடியாது. உன் வேலையை விட முடியாது... நிம்மதியாய் மாட்டுக் கொட்டிலில் நிற்பதும் கூடச் சிரமம்...''

இவனுக்கு இரண்டே நாட்களில் இத்தனை தெரிந்து விட்டதா? ''ஆனால் என்னை விரும்பியவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''மகேந்திரன் விரும்புவது உன் புற அழகை... அதன் மூலம் நீ சேர்த்த புகழ், பணத்தை... அதற்குப் பிறக்கப் போகும் வாரிசைக் கூட இடையூறாய் நினைக்கலாம்.''

அவன் சொல்வதில் பொய்யில்லை.

''எல்லாவற்றையும் விட முக்கியம்... நீ அவரை நேசிக்கிறியா, மதி... உயிராய்... உயிருக்கும் மேலாய் விரும்புகிறாயா?''

யோசித்துப் பார்த்தாள்...

புரிந்த உண்மை சுட்டது...!

## 10

கூடு திரும்பும் பறவையாய்த் தன்னை எண்ணி, தகுந்த இணையைத் தேடிய பெருமிதத்தோடு வீடு வந்தவளுக்கு இங்கு வந்த பின் ஏன் முழு மகிழ்வில்லை?

குற்ற உணர்வு குடைகின்றது.

தவிர சுதந்திரமற்றுச் சிறையில் அடைபட்ட ஜீவனாய்த் தன்னை உருவகப்படுத்தி விட்டான், ராஜத்தான்.



தன் மனது அது உண்மையோ என்று வேறு எண்ணி மருகுவது அவளுக்கு அச்சமூட்டியது.

தான் இத்தனை அவசரமாய்ப் போட்டுக் கொண்டது ஒரு விலங்குதானோ?

புரிந்திருப்பது மீள முடியாத ஒரு இரும்புக் கூண்டா?

கோபம் கிளம்பியது - மோகனராஜின் மீது.

கையில் சிறு கிண்ணத்துடன் வந்த அம்மா, இவளருகே அமர்ந்தார்கள்.

''வாடி, தங்கம். மருதாணிதான் வச்சுக்க முடியாதுன்னுட்ட.... வெந்தயம், கறிவேப்பிலை இட்டுக் காய்ச்சி எண்ணெயாவது குளிரத் தேய்ச்சு விடறேன். நல்லாக் குளி. கை, காலெல்லாம் தேய்க்கணும் -வறண்டு தெரியுதே...''

தாய் சொல்வது உண்மைதான்.

வயிறார உண்டு, பட்டாம்பூச்சி போலப் பண்ணையில் திரிந்த காலத்தில் மேனியில் ஆரோக்கியமான மினுமினுப்பு இருந்தது. இப்போதோ தந்த நிறச் சாந்தைக் குழைத்துப் பூசி, எரிக்கும் மின் ஒளியில் நின்று பளபளப்பாய்த் தோற்றமளிப்பதோடு சரி.

குளித்த பின், பழச்சாறும் பருகியபோது உடம்பெல்லாம் குளுகுளுவென்ற சுகம். இளம் வெயிலில் கூந்தல் உலர்த்தப்பட, கண்கள் சொக்கின...

''அடடே! இளவரசியாருக்கு இங்கும் சொகுசான சிகுருஷை போலு?''

போச்சு. இந்தச் சுகத்தையும் அனுபவிக்க விட மாட்டானோ?

''அங்கே.. என் வேலை கடுமையானது, அத்தான்!'' என்றாள் கடுப்புடன்.

''அழகாய் உடுத்தி, ஏ.ஸி. அரங்கில் ஒயிலாய் நடக்கணும். அதுவா கடுமை?''

கடும் வெயிலில் தோட்டத்து வேலையில் உழலும் பெண்களிருக்கும் இடத்தில் அவன் அப்படிக் கேட்டது உகப்பிலது.

''உலகத் தரத்தில் அழகாய் இருப்பது சுலபமல்ல... சூரியோதயக் காட்சியின் பின்னணி ஒரு விளம்பரப் படத்திற்கு வேண்டுமானால் நான் காலை நாலுக்கெல்லாம் உடம்பு முழுக்க ஒப்பனையோடு கூந்தலின் ஒவ்வொரு இழையும் தருந்த கருணோடு விழத் தயாராய் நிற்கணும்.''

அவன் புறமே திரும்பாமல் தாயிடமாய்ச் சொன்னாள்.

''போன மாசம் ஜுவல்வந்த் லால் நகைக்கடை விளம்பரப் படப்பிடிப்பு. அந்தப் படத்தைக்கூட உங்களிடம் காட்டினேனே... காதுத் தொங்கட்டான் மட்டுமே ஒன்றொன்றும் மூன்று பவுனிருக்கும். நல்ல கனம், அது என் காதின் துளைக்குள் போகவேயில்லை. உதவியாளர் வாஸலின் தடவி அதை என் காதில் திணித்து...''

கேட்ட தாயின் தோள் சிலிர்த்தது.

''ஐயோ! இந்தப் பிஞ்சுக் காதைப் புண்ணாக்கி இருப்பாங்களே.''

''ம்ம்.. ரத்தம் கசிந்து கட்டியாகி, பிறகு கம்மலைக் கழட்டும் போது மறுபடி உயிர் போகிற வலி. ஆனால் வேதனையோட அதை மறைத்து ஒரு மணப் பெண்ணின் நாணம், மகிழ்வை முகத்தில் காட்டணும்.''

''கஷ்டந்தான்.''

''முக்கியமாய் உடம்பில் ஒரு கிலோ கூட ஏறிடக் கூடாது... ஆக யோசிக்க, கணித்துச் சாப்பிடணும்... ராத்திரி ஒன்பதைத் தாண்டிட்டா, பிடித்த சினிமாவைக் கூடப் பார்க்க முடியாது... படுத்திடணும். உடம்பும் புத்தியும் பிரகாசமாய் இல்லைன்னா சமாளிக்க முடியாது.''



''இந்தச் சிரமமெல்லாம் சில மாசங்கள்னா சரி... வருஷக் கணக்கில் தேவையா, மதிம்மா?''

ஓரக்கண் பார்வையில் அத்தானின் நீண்ட கால்கள் பட்டன. ஏதோ பெண்களின் பேச்சு என்று விலகாமல் இங்கேயே ஏனிவன் நிற்க வேண்டும் என்று பொருமி னாலும், தான் ஒன்றும் மும்பையில் சொகுசாகவே உட்கார்ந்து புகழ், பொருளைக் குவித்து விடவில்லை என்பதை அவனுக்கு உணர்த்தும் உந்துதல் இருந்தது.

''ஆகக் கொஞ்சம் சிரமமான வாழ்வுதான்... ம்ம்...?''

என்று இழுத்தவனைக் காட்டமாய் முறைத்தாள்.

''பிறகு இதையே கல்யாணத்திற்குப் பிறகு தொடரணுமா மதி?''

''கல்யாணமானதும் ஆண்கள் தங்களின் வேலையை விட்டுடறாங்களா என்ன?''

''சம்பாதிக்கும் நிர்பந்தம் எங்களுக்கு. கல்யாணத்தில், உலகில் ஆணுக்கும் பெண்ணிற்கும் வெவ்வேறு பொறுப்புகள். வேண்டிய வசதிகளுடன் வீட்டை, உடை, உணவுக்கான பொருட்களைக் கொண்டு வர வேண்டியது ஆணின் கடமை. அவற்றைக் கொண்டு வாழ்வை இதமாய் நடத்திச் செல்வதும், குடும்பத்தாரைப் பராமரிப்பதும் பெண்ணின் பங்கு.''

''இப்ப பெண்ணும் உழைக்க வேண்டிய கட்டாயம். காலம் அப்படி...''

''சிலருக்குக் கட்டாயம், சிலருக்கு ஆர்வம். பலருக்கு அது ஒரு பகட்டு. நானும் சம்பாதிக்கறேன்ற வீம்பு...''

''விருப்பு... தன் திறமைகள் மறையக் கூடாதுன்ற ஆர்வம்.''

''திறமை உள்ளவங்க எங்கேயும் எதிலும் ஜொலிக் கலாம்! இங்கே கூட இருந்து சாதிக்கலாம்... தவிர அழகு

ஒன்றும் ஊறுகாய் போலக் கெடாதிருக்கும் பொருளல்ல... மும்பையில் நீயில்லையென்றால் பதினெட்டு வயதில் வேறு ஒருத்தி. நம் கிராமத்தில் உன் உழைப்பும் திறனும் பயன் பட்டால் ஊர் செழிக்கும்... இங்குள்ள பெண்களின் வாழ்வின் தரம் உயரும், மதி...''

''ஓ... பூசணி விளக்கு பத்தி பேசறீங்க போல!''

குரலில் சற்று எகத்தாளம் கலந்தே கேட்டாள்.

''அது அத்தைக்காக ஆரம்பிக்கப்பட்டது... அதுவும் சிறிய அளவில்.''

''ஓ... அப்ப பெரிய அளவிலும் திட்டம் தயாரா?''

''ஆமாம், மதி... இப்ப வந்து பார்க்கறியா?''

சற்றுக் கெஞ்சுவது போல அவன் கேட்க, இளகி விட்டாள்.

''எங்கே?''

பத்து நிமிட நடையில் அப்பெரிய கூடம் வந்தது.

''எம்.எஸ்.சுவாமிநாதனின் ஆராய்ச்சி மையத்திலிருந்து சிலர் வந்து இந்த உயிர் உரம் பற்றிச் சொல்லி, ஆரம்பிக்கவும் உதவினாங்க...''

வெளியே குழாய் நீரில் பாதம் கழுவி மறுபடி டெட்டாலில் நனைத்துக் கூடத்தினுள் நுழைந்தார்கள்.

''அப்படீன்னா...?'' அங்கிருந்த பெண்களை, அவர்களின் சுறுசுறுப்பைப் பார்த்தபடி கேட்டாள்.

''செயற்கையை எதிர்த்து ஒரு மௌன யுத்தம், மதி. 'சூடோமோனஸ்'ங்கற உயிர் உரத்தைத் தயாரிக்கறோம். இது வாழை வாடல் நோய், வேர் அழுகலை எல்லாம் அடக்கும்.''

''எப்ப ஆரம்பிச்சீங்க... இதென்ன 'லேப்' போலிருக்குது!''



அவளது வியப்பு வளர்ந்தது. ''மண்ணிலிருக்கும் ஒரு வகை பாக்டீரியா இது. இதுதான் மூலப் பொருள். பெட்டோன், மெக்னீசியம் சல்பைட் போன்ற சில ரசாயனங்கள் சேர்த்து வடிகட்டி, தொற்று நீக்கம் செய்யணும்... நம்ப மூச்சு மூலம் கூட மறுபடி கிருமிகள் பரவும்.''

''ஓ... அதுதான் பெண்களுக்கு முகமூடியா?''

''மெஷினரி தேவை... ஆனா அத்தனைக்கும் வங்கிக் கடன் கிடைச்சது... ஒரு கிலோ உரத்திற்கு இருபது ரூபாய் லாபம் வரும். சீக்கிரமே உற்பத்தி ஒரு டன்னை நெருங்கிடும்.''

''பிரமாதம்... முழுக்கப் பெண்கள்தான் வேலை செய்றாங்க போல! இவங்க வேலைக்கு வந்தது வீம்புக்காகவா...''

பிரமிப்பு இருந்தாலும் அவனை வம்பிற்கு இழுக் காமலிருக்க இயலவில்லை.

''பாதிப் பேர் விதவைகள்... மீதிப் பேருக்கு வேறு பிரச்சனைகள்.'' அவன் முகம் மாறாமல் சொல்ல, குன்றி விட்டாள்.

''ரொம்ப சந்தோஷம் ராஜத்தான்... மனமாரப் பாராட்டறேன்...''

''இதை வரப்போகும் என் மனைவி ஏற்றுச் செய்தால் நானும் மனமார மகிழ்வேன், மதி... அவளை ராணி போல வைப்பேன். அவளது ஆசை, வசதிக்குத்தான் முதலிடம்... அதே சமயம் தன் திறமைகள் ஒரு கிராமத்தில் புதைந்து போனதாய் அவள் மருகிடக் கூடாது. கிளியான அவளுக்கு என் வீடு ஒரு சுகமான கூடாய்த்தான் இருக்கணும்.''

கனவில் பேசுபவன் போலத் தொடர்ந்தவனைப் பார்த்திருந்தாள்.

''நல்ல விருப்பம்... திட்டம்... ஆனால் உங்க மனைவிக்கு இதில் சுடுபாடு இருக்குமா?''

''இல்லைன்னா கல்லூரி முதல்வர் மணிமேகலை பொறுப்பேற்பதாய்ச் சொல்லியிருக்காங்க... இந்த வருடத்தோட ஓய்வு பெறுறாங்க.''

இப்போது புது மரியாதையோடு அத்தானைப் பார்த்தாள்.

ஆக இதையும் தனக்கு வருபவள் மீது திணிக்க நினைக்கவில்லை. பெண் விடுதலை பற்றிய அவனது கருத்து வெறும் ஏட்டளவில் இல்லை.

''நல்ல மாற்றம்தான்... உங்களில்.''

அவன் கண்கள் கேட்ட வினாவிற்காய்த் தொடர்ந்தாள்.

''காயாய் இருந்த உங்களில் கனிவு... முன்பு என்னைச் சதா மட்டம் தட்டுவீங்க... ஒட்டகச்சிவிங்கி போல ஆள் வளர்ந்தாப் போதாது, அறிவும் வளரணும்... உனக்கு மாப்பிள்ளையே கிடைக்காது... ஆக என்னைத்தான்...''

தொடர முடியாமல் தடுமாறினாள்.

''அதை வெறும் மட்டம் தட்டலாய் அப்போ நினைச்சிருப்பே, மதி... இப்போதுமா?''

இப்போது மந்திராவின் விழிகள் கேள்வி கேட்டன.

''உனக்குக் கொஞ்சம் சோம்பலும் அலட்சியமும் உண்டு...''

'வெடுக்'கென இவள் நிமிர, அவனது புன்னகை விரிந்தது.

''போதாததற்குத் தொட்டாச் சிணுங்கிக் குணம் வேறு. அதிலிருந்து உன்னை விடுவிக்கச் சொன்னதாய் இருக்கக் கூடாதா?''

''ஓ... அதாவது உங்க முரட்டு வார்த்தைகள்தான் என்னை உலுக்கி இந்தளவிற்கு உயர்த்தியதாய்... சொல்றீங்க!''



''இப்ப நீ அடைந்திருக்கும் உயரம் ஒரு மாயை!'' அவனது தலை மெள்ள ஆடியது... விளக்கைத் தேடிச் சிறகடிக்கும் விட்டில் பூச்சியாய் நீ அந்தப் பகட்டு உலகிற்குள் நுழைஞ்சே... இன்னும் எத்தனை நாள்?''

''இளமை போன பிறகும் நான் இதே துறையில் நீடிக்கக் கூடும்... நிர்வாகி போல... எல்லாம் பரிச்சயமான வேலை, முகங்கள்...''

''அதற்காகப் பாசமான இதயங்களைத் தனிமையில் விடணுமா?''

மறுபடி அவனது பேச்சு சொடுக்கியது.

''எத்தனை பேருக்கு இப்படிப் பசுமையான பூமி சொந்தத்தில் இருக்கும்... இருப்பதை விட்டுப் பறப்பதைத் தொடருவானேன்?''

இவளுள் குழப்பம் கூடியது.

'''கல்லூரிப் படிப்பிற்கே உன்னைச் சென்னைக்கு அனுப்பச் சொன்னேன், மாமாவை. அத்தைக்கு மனமில்லை... ஸிட்டி வாழ்வில் உன் பார்வை, எண்ணமெல்லாம் விசாலமாகும்னு நினைச்சேன்... அதற்குள்.''

''மும்பையில் மூணு வருடங்கள்... உலகின் பல பகுதிகளையும் இப்ப பார்த்தாச்சு, ராஜத்தான்.''

''ஆமா - எது நல்லது, தேவையானதுன்னு புரியும் பக்குவம் வந்திருக்கணும்... நிதானமாய் யோசி. பிறகு சரியான முடிவை எடு... அது உன்னை நேசிப்பவர்களைத் திருப்திப்படுத்துவதாய் இருக்கட்டும்...''

அவன் சொன்னது புரியவில்லை...

ஆனால் புரிவது போலவும் நெஞ்சுள் ஒரு படபடப்பு.

## 11

**வீ**டு திரும்பியபோது வீட்டின் கூடம் சிரிப்பும் பேச்சமாய்க் கலகலத்தது... வந்திருப்பது யார் என்ற யோசனையுடன் உள்ளே நுழைந்தவளுக்கு ஒரே பார்வையில் புரிந்து போனது.

புது மானேஜரின் மனைவி - வாசுகி.

மேடிட்ட வயிறும், கை நிறையக் குலுங்கிய கண்ணாடி வளையல்களுமே அறிமுகப்படுத்தின.

''வாசுகிதானே?''

தரையில் அமர்ந்து வெற்றிலையைத் துடைத்துக் கொண்டிருந்த அப்பெண் அவசரமாய் எழ முயன்று, தடுமாறினாள்.

அம்மா அதட்டினார்கள். ''மெள்ளடி, பெண்ணே - என்ன அவசரம்?'' மூச்சு வாங்க நின்றவள் கை குவித்தாள்.

''மும்பையிலிருந்து வந்திருப்பதாய் அம்மா சொன்னாங்க.''

''அடடே... ரெண்டு பேருமே சரியாய்க் கண்டு பிடிச்சுட்டீங்களே?''

''இருக்கறது நாலே பேரு... இதுல யாரு எவருங்கறது கம்ப வித்தையாம்மா?'' தனம் சிரித்தாள்.

''உங்களுக்கு வளைகாப்பு ஆச்சு போலவே... அம்மா உங்களுக்கு அதை இங்கே நடத்தணும்னு சொல்லிட்டிருந்தாங்க.''

''ஊரில் உறவுக்காரங்க சொல்லைத் தட்ட முடியலிங்க...''



''அதான் மருதாணி அரைக்கச் சொல்லியிருக்கேன். எங்கையால் அதையேனும் இட்டு அழகு பார்க்கட்டும்.''

''முதல்ல சாப்பிடச் சொல்லுங்கம்மா.''

''ஆச்சுங்க... அம்மா கையால் பிசைஞ்சு போட்டாங்க... அதான் இப்ப வெத்தலை...'' வெட்கத்துடன் சிரித்தாள்.

தாய்மைப் பூரிப்பில் விகசித்த முகத்தை விநோதமாய்ப் பார்த்திருந்தாள் மந்திரா.

மிகத் திறமையும் நுணுக்கமுமான ஒப்பனைக் கலைகூட இதன் முன் நிற்க முடியாதெனப் பட்டது.

''இதுதான் முதல் குழந்தையா?''

''ஆமாங்க... கல்யாணமான முத மூணு வருஷம் இவரு பயந்தாரு. ஒரு சிறு ஜீவனை வளர்க்கற அளவு வசதி வேணாமான்னு. ஆனா உங்க பண்ணையில வேலை கிடைச்சதுமே நானு சொல்லிட்டேன்.

'தாய் வீட்டை விடப் பாசமான இடம் அமைஞ்சிடுச்சு. இனி என்ன தடைன்னு!'' அதிகம் பேசி விட்டோமென்பது போல, உதட்டைக் கடித்தபடி குனிந்து கொண்டாள் வாசுகி.

ஆக இந்தப் பெண்ணிற்கும் தான் நினைத்த நேரம் தாயாகும் உரிமை உண்டு... நினைப்பு உள்ளோடியது.

''உங்களைப் பத்தி அம்மா பேசாத நாளே இல்லீங்க.''

''ம்ம்.''

''ஆனாலும் சமாதானப்படுத்துவாங்க. மதும்மா இங்க இருக்க வேண்டிய பெண்ணில்லை... அவ அழகுக்கு திறமைக்கு எல்லாம் அனுபவிச்சுட்டு வரட்டும்னு... உங்கம்மாக்குப் பெருந்தன்மையான குணம்ங்க.''

''நிஜந்தான்... அது புரிஞ்ச ஆட்கள் எங்களிடம் வேலைக்குச் சேர்ந்தது எங்க அதிர்ஷ்டம்.''

''என்ன சாப்பிடற மதிம்மா..?''

''இளநீர், நுங்குன்னு வயிறு நிரம்பிடுச்சு. கொஞ்ச மாம்ச் சாப்பிட்டுச் சுருங்கிய வயிறு...'' - இருபத்து நான்கு அங்குலமே சுற்றளவில் இருந்த இடையைத் தொட்டுச் சிரித்தாள்.

''உங்கம்மாவுக்கு நிஜமாவே அபூர்வமான மனசுங்க... எனக்கு இத்தனை அழகா பெண் பிறந்தா என் கண்ணை விட்டு விலகவே விட மாட்டேன். அதிலும் குலக் கொழுந்தான ஒரே வாரிசை ஆயிரம் மைலுக்கு அப்பால அனுப்பிட்டு, சதா உங்க நினைப்பில வாழ்ந்து... உங்க ஆசை, சந்தோஷத்துக்கு அத்தனை மதிப்புத் தர்றாங்க...''

வாசுகி சொன்னது வாஸ்தவமே.

அம்மா புன்னகையுடன் பேசினார்... ''மோகன் சொன்னான் - மதியை வெளியே அனுப்பிப் படிக்க வைங்க... உலகம் உணரட்டும்னு. நாங்க படிக்க அவளை விடலைன்னாலும் அவ ஆசைப்படி சந்தர்ப்பம் அமைஞ்ச போது தடுக்கலை... ஆனா வாழ்க்கை இங்கே... எங்க எதிரில் அமையும்னு... மோகனும்கூட.... ஆனா யாருக்கு யார்னு கடவுள் ஏற்கெனவே எழுதி யாச்சே.''

இவளுக்கு மேலும் சிறிது புரிந்தது.

ஆக அதனால்தான் அத்தானுக்கு மகேந்திரனைக் கண்டால் ஆகவில்லையா? மகேந்திரனும் இதம் பதமாய் நடந்து கொள்ளவில்லையே...

'மோகனும்கூட....' என்று அம்மா சொன்னதற்கு அர்த்தம் என்ன? நடுநெஞ்சில் 'சில்'லென்றது.

கூடவே சந்தனத்தைக் குருதி ஓட்டத்தில் கலந்து விட்டது போலொரு கமகமப்பு.



தனக்குமே அத்தானின் மீதிருந்த ஈர்ப்பு இப்போது தான். அதாவது விவரம் வந்ததும்தான் புரிகின்றது...

மேலாக்குப் போடும் தேவை வந்ததும் தன்னைப் பின் தொடர்ந்து கேலி பேசிய விடலை வாலுகளைப் பற்றி மோகனிடம்தான் புகார் செய்தாள். கல்லூரி நாட்களில் வந்த காதல் கவிதைகளையும் கடிதங்களையும் கூட..

தான் பிற ஆண்களை வசீகரிப்பது பற்றி மோகனிடம் சொல்வானேன்?

அத்தானிடம் - 'என்னைக் கவனி - நான் கவர்ச்சி யானவள்!' என்ற குறிப்போ அது?

அவனும் சீண்டலாய் என்றாலும், 'உனக்குத் தாலி கட்டும் தியாகத்தைச் செய்ய நான் தயார்!' என்பானேன்?

''என்ன யோசனை, மதிம்மா?''

''இல்லை... ராஜத்தான் என்னைச் சீண்டுவதில், மட்டம் தட்டுவதில் வேற எந்த நோக்கமும் இருந்ததாய் நினைக்கலை நான்.''

''அதெல்லாம் எதுக்குத் தெரியுமா?''

''ஓ... காரணம் வேறு உண்டா என்ன?'' விளையாட்டு போல வினவினாலும் அவளது நெஞ்சில் துறுதுறுப்பு... நெல்லிக்காய் மூட்டை அவிழச் சரிந்து உருளும் கனிகளைப் போல... பல உண்மைகள் சிதறுகின்றதே என்ற யோசனை.

''நீ ஒற்றைக் குழந்தை. நானும் உங்கப்பாவும் மதிம்மாங்கறதுக்கு மறு சொல் சொல்றதில்லை... நீ வச்சதுதான் சட்டம். ஆக ரொம்ப பூஞ்சை மனசாய், செல்லங் கொடுத்தே சீரழிச்ச பெண்ணாய் நீ ஆகிடக் கூடாதேன்று சற்று தட்டிக் கொட்டி... சரி செய்வதாய்.''

''நான் என்னம்மா - மத்தளமா?''

கேலி பேசினாலும், அவன் கணிப்பு தவறில்லை என்பதும் புரிந்தது. எவரது சிறு சொல்லிலும் மனமொடிந்து போவாள். அத்தான் மட்டுமே அவளைக் கேலி பேசி இயல்பாய் நடத்துபவன். மற்றவர்களுக்கு எல்லாம் அவள் ஒரு குட்டி ராணிதான்!

பையன்களைப் பற்றிய புகார்களுக்கு -

''கம்புக்குப் புடவை சுற்றினாலும் சுத்தற பயலுங்க. உன் கவனமெல்லாம் படிப்பில் மட்டும்தான் இருக்கனும்..'' - அதட்டுவான்.

அவனிடம் சற்று ஒட்ட முயன்றால்,

''ஊர் உலகத்துல ஒவ்வொருத்தர் எப்படிச் சாதிக்கத் துடிக்கறாங்கன்னு கவனி... நீ சாதிக்கப் பார்... வெறுமே காதல், கல்யாணம்ங்கற வாழ்வு... போதாது...!'' என்று அவளை வெட்டி விட்டிருக்கிறான். ஆக அவன் நினைப்புகள் சற்றுக் கசப்பாகவே இருந்திருக்கின்றன. ஆனால் இப்போது தான் ஒரு துறையில் முன்னேறிப் பிரபலம் அடைந்ததையும் அவன் கொண்டாடவில்லை. ஏற்ற ஜோடியை எளிதாய்த் தேடிப் பிடித்ததில் பூரிக்கவு மில்லை. முகம் வாழைப் பூப் போலக் கூம்பிக் கிடக்கிறது...

இன்று, ''உன்னை நேசிப்பவர்களைச் சந்தோஷப்படுத்து. சரியான முடிவாய் எடு!'' என்று அத்தான் சொன்னதற் கெல்லாம் என்ன அர்த்தம்...?

## 12

நூறு பச்சைக் குடைகளை ஒருசேர விரித்தது போலப் படர்ந்து நின்றது அப் புளிய மரம்.



அதனடியில் கிடந்த சிமெண்ட் இருக்கையை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

எத்தனை தரம் அவள் ஏறி, ஆடி, உலுக்கிய மரம் இது. கீழே விழுந்த பழம் அல்லது பிஞ்சுகளைப் பிறகு பொறுக்கி எடுத்தபடி அவசரமாய் ஓட வேணும்... ஏனெனில் இரண்டு நிமிஷங்கள் அங்கே நின்றாலும் கட்டெறும்புகள் காலில் ஏறி மொய்த்துப் பிடுங்கும்.

''ராஜத்தான், இங்கே ஒரு பெஞ்ச் போடணும்... அப்பதான் கொண்டு வர்ற கல்லுப்புல புளியங்காயைத் தொட்டுத் தொட்டு நிம்மதியா சாப்பிடலாம்.''

பல வருஷங்களுக்கு முன்பு சொன்னது இன்னும் தெளிவாய் ஞாபகமிருக்கிறது... அவனுக்கும்தான்... அதனால்தான் இந்த வசதியான இருக்கை... கைப் பிடியும் சாய்மானமுமாய்...

மெள்ள அதில் அமர்ந்து சாயப், புல்லரித்தது...

''முன்னே இது கிடையாது... ராஜத்தானும் நானும் அடிக்கடி வரும் இடம் இது...'' - புன்னகையுடன் சொன்னாள்.

''விளையாட்டுத் துணைக்கு வேறு யாரும் இல்லாததால், நீங்க இருவரும் அண்ணன், தங்கை போல... ம்ம்?''

மகேந்திரன் கேட்ட விதம் சற்றுச் சிரிப்பு மூட்டியது. அவர்களுடையது பால் போன்ற பாசம் அல்ல... இனிப்பு, உப்பு, காரம், ஏன் - கசப்பும் கலந்து ருசித்த உறவு... இன்று, அன்றைய சீண்டலும் கேலியும் வேறு அர்த்தம் சொல்லியது.

''அழாதே, மதிம்மா. அண்ணன் தூக்கிக்கட்டா?'' என்று ஒரு போதும் ராஜத்தான் இளகினதில்லை.

''ச்சே... இதுக்கெல்லாமா அழுகை? காலை உதறிட்டு நட. வீடு பக்கத்தில்தானே?'' என்று இவளை நிமிர்த்தவே

முயற்சித்திருக்கிறான். செல்லப் பெண்ணாய் வளர்ந்த தால் அது புரியாமல் சலித்து, மருகியிருக்கிறாள்.

அற்றவள் என்றால் இப்போது தன் கரிசனை அற்றவள் பெற்றவர்களைக் கண்ணாய்ப் பேணக் கூடுமா?

அதுவும் இத்தனை ஆண்டுகளாய்... சலிப்பின்றி...

அவனுக்குத் திடுக்கென்றது.

தன்னை விட எட்டு ஆண்டுகள் மூத்தவள் என்றால் அத்தானுக்கு இப்போது வயது முப்பத்திரண்டு.

நல்ல குணமும், படிப்பும், சொத்தும் கம்பீரமுமான இவனைப் பெண்ணைப் பெற்றவர்கள் மொய்த்திருப்பார்களே...!

காலா காலத்தில் அவனது சகோதரிகளுக்குத் திருமணத்தை முடித்த அவனது பெற்றோருக்கு மகனது வாழ்வில் ஏனிந்த அலட்சியம்?

இவளருகே இருந்த மகேந்திரன் சிகரெட்டைப் பற்ற வைத்து ஆழ இழுத்தபடி சொன்னான்.

''உனக்கு இந்த ஊர் ஒத்தே வரலை, மதி.''

அவன் ஊதிய புகை எரிச்சலூட்ட, வானத்தில் மிதந்த ஒற்றை மேகத்தையே பார்த்திருந்தாள்.

''பாரேன்... என்ன சொல்ல வரேன்னு கூட நீ ஆர்வங் காட்டலை...''

''எனக்கு இந்தப் புகை பிடிக்கலை...''

''ஓ... ஸாரி. ஆனா இதுவரை புன்கயை நீ பொருட் படுத்தலையே... மதி?''

'மான்டி'யை விட்டு மதி என்று அழைத்ததைக் கவனிக்கவே செய்தாள்.

''மும்பையில் இது ஒரு பொருட்டாய்த் தோணலை... இத்தனை தூய காற்றை மாசு படுத்துவானேன்?''



அவசரமாய்ச் சில இழுப்புகளுக்குப் பிறகு, அந்தச் செங்கங்கை அணைத்தான்.

''இங்கே வந்ததும் நீ மாறிட்டே.''

''எப்படி?''

''ஒரே யோசனை... அநாவசியமான யோசனை... இப்பவும் கூட வானத்தை வெறித்தபடி.''

''ம்ம்... பளீர்னு ஒரே நீலத்தில் விரிந்த வானத்தில் மெத்துன்னு ஒத்தையாய்க் கிடக்கற மேகத்தில்...''

''போச்சுடா...'' - முகம் சுழித்தான்.

''ல்ல... அது திரண்டு, கருத்து மழை பொழியணும்னு நினைச்சேன். மகே... மண்ணு புழுதி போலவும்... செடி மரமெல்லாம் சற்று வரண்டும் தெரியலை? இதுல 'சடசட'ன்னு மழை விழ, புழுதி முதலில் பொங்கிப் பிறகு அடங்கும் போது கிளறும் வாசனையை அனுபவிக்கணும்னு ஆசை.''

''அதீத யோசனை விநோத ஆசைகளையும் கிளப்பு கிறது போல...!''

கோணலாய்ச் சிரித்தான்.

''ஏன்... அது சாதாரண ஆசைதானே!''

''ம்ம்... நேற்று இரு விவசாயிகளின் பேச்சைக் கேட்டேன்... இப்ப மழை பெய்தால் நல்லது... மறுமாசம் வந்தால் பூ உதிர்ந்து காய்ப்பு குறைஞ்சிடும்னு ஏதோ பேசினாங்க.''

வெளியே வயல், தோப்புகளிடம் போகாதவள் எப்படி, எந்த விவசாயிகளின் பேச்சைக் கேட்டாள் என்று வினவத் திறந்த அவனது வாய் 'கப்'பென மூடியது...

தன் அத்தானையும் அப்பாவையும்தான் அப்படிக் குறிப்பிடுகிறாளோ..?

''அது... அது உண்மைதான். மழையின் தேவையை இந்த நிலம் போல, அந்த விவசாயிகள் போல, நீங்களும் உணரலையா?''

''அது பெய்யும் போது பெய்யும்... இப்படி அநாவசியமாய் அலட்டினால் பொழியுமா என்ன?''

''அது அலட்டல் இல்லை, மகே. ஆதங்கம்... நிலம் விளைஞ்சால்தான் உலகம் பிழைக்கும்... நம் வயிறுகள் நிரம்பும். அதற்காகத்தான் இத்தனை உழைப்பும் எதிர்பார்ப்பும். நாம் நடத்தும் ஃபேஷன் ஷோ... உணவைப் போல் அத்தியாவசியத் தேவையில்லை... கவர்ச்சிகரமான ஒரு பொழுது போக்கு. அவ்வளவுதான்...''

ஆனால் அவன் கவனம் வேறெங்கோ போயிருந்தது.

அவன் பார்வையைத் தொடர்ந்தாள்.

சேவல் ஒன்று கோழியைத் துரத்த, பெட்டை சிறகுகளைப் பதட்டத்துடன் அடித்தபடி இங்கும் அங்குமாய் அலை பாய்ந்தது. சேவலின் மோக மூர்க்கத்தை உன்னிப்பாய் ரசித்தவனைப் பார்த்தவளின் முகம் சிவந்தது.

''கிளம்பலாமா?'' எழ முயன்றாள்.

அவனது கரம் அவளை இழுத்து இருத்தியது.

''இதில் வெட்கப்பட என்ன யிருக்கு? இதுவும் உயிர்களுக்கான அத்தியாவசியத் தேவைதான்... இயற்கையான உணர்வுதான்... ம்ம்?''

''ஐந்தறிவு உயிர்களுக்கு வெட்கம் கிடையாது. வேகம் மட்டும்தான்.''

''ஆறறிவுன்னு நாம் அநாவசியமாய்ச் சிலதைக் கத்து வச்சிருக்கோம், மதி.''

''எது... ஃபேஷன் ஷோ போலவா?''



வெடுக்கெனக் கேட்ட பின்புதான், தான் இதுவரை முயன்று பிரகாசித்த அந்தத் துறையைச் சற்று மட்டமாய்ப் பேசிவிட்டது புரிந்தது.

''காமத்தை மனுஷன் பூசி மறைக்கிறான்... அதற்குப் படுதா போடும் வார்த்தை - காதல்... இந்தக் காதல் கல்யாணமெல்லாம் எதுக்குன்றே? இதுக்குத்தான்...''

சேவலை அவன் காட்ட இவள் கூசிக் குறுகினாள்.

''அப்படீன்னா நம்ம கல்யாணம்...?''

''கச்சிதமான வசதியில்லையா, மதி? நம் இருவருக்கும் ஒரே மொழி, தொழில், அந்தஸ்து...''

''கல்யாணமென்பது அவ்வளவுதானா?''

'வேறென்ன?' என்பது போல விழித்தான்.

''ஓ... சரீரத் தேவைகளையும் முறைப்படி இதில் தீர்த்துக்கலாம். கௌரவமான வாழ்வு... அதில் உங்கம்மா சொன்னது போல ஆறேழு வருஷங் கழித்து ஒரு பையனையும் பெற்று... அவ்வளவுதான் வேலை!''

இப்போது இவள் விழித்தாள்.

மனம் தெளிவிழந்து மேலும் குழம்பியது.

சேவல் கோழியை அமுக்கிக் கொக்கரிக்க, மகேந்திரனின் கைகள் இவளைச் சுற்றின.

அவனது முகம் இவளை மிக நெருங்கியது... இவளுக்குச் சிலிர்த்தது. அத்தானின் அணைப்பில் கிளர்ந்தது போல விருப்பம் கலந்த சிலிர்ப்பல்ல... பயமும் சற்று அருவருப்பும் கூடச் சேர்ந்த கூச்சம்! சிகரெட் வாடையோடு அவனது கன்னம் இவளிடில் இழைந்தது. விலக மாட்டாளா அல்லது தள்ளி விடலாமா என்று பரிதவித்தாள்.

அப்படியானால் இதே உடல் அத்தான் தன்னை நெருங்கியபோது ஏன் அப்படி இன்ப வெப்பத்துடன் இனித்தது?

திருட்டு மாங்காயின் தித்திப்புதானோ?

விருட்டென எழுந்தாள்.

"வீட்டுக்குப் போகலாம், மகே... அம்மா தேடுவாங்க..."

அவன் சுதாரிப்பதற்குள் வேகமாய் நடக்கலானாள்.

## 13

மூன்றாம் நாள் காலையும் மகேந்திரனுக்கான எலுமிச்சஞ் சாற்றுடன் மாடிக்கு ஏறினாள், மந்திரா.

இன்றிரவு அல்லது நாளை அதிகாலை அவன் மும்பைக்குக் கிளம்பி விடுவான்.

அது இவளுக்கு ஏக்கத்தைக் கிளறாமல் சிறு நிம்மதி மட்டுமே! தன் உணர்வுகளைப் பிரித்துப் போட்டுச் சிக்கெடுக்கவும் இயலவில்லை.

கதவு திறந்தே கிடக்க, உயர்ரகப் பருத்தியில் பூவேலை நெய்த பைஜாமா செட்டில் அறைக்குள் மகேந்திரன் நடமாடியபடி இருந்தான்.

"ஏது, சீக்கிரமே எழுந்தாச்சா?"

கண்ணாடித் தம்ளரை நீட்டினாள்.

"தூக்கம் வந்தால்லா?"

படுக்கையை நோக்கினான்.



"என்ன அசௌகரியம்?"

"சுகக் குறைச்சல்! அதுவும் உன்னை நேத்து மாலை அப்படி அணைச்சு முகர்ந்த பிறகு... உடம்பு மேலும் நீ வேணும்னு ஒரே அடம்!"

அவனது கண் சிமிட்டல் இவளுக்குக் கசந்தது.

வெட்க வெப்பத்திற்குப் பதிலாய் வெறுப்பு மட்டுமே பரவியது.

மந்திராவிடம் மோக ஜம்பங்கள் ஏதும் செல்லாது என்பதாலேயே அவன் கௌரவமாய்க் கல்யாணப் பேச்சோடு நிறுத்தியது. பதினைந்து நாட்கள் விடுப்பு என்பதால் மும்பையில் குவிந்த வேலைகளை முடிக்க வேண்டிய கட்டாயம்...

ஆக, சரசங்களுக்குச் சமயமில்லை.

இங்கு அமைதியாய்க் கழிந்த நாட்கள் சல்லாபம் செய்ய அவனைத் தூண்டின போலும்!

"இன்னைக்குக் கிளம்பறீங்க, இல்லையா?"

பேச்சின் திசை திருப்பினாள்.

"ம்... அப்பாடான்னு இருக்குது. நீயும் என்னோடு... அல்லது சீக்கிரம் கிளம்பிடேன், மதி? இங்கே எப்படிப் பொழுது நகரும்... அதுவும் நானில்லாமல்?"

பருகிய எலுமிச்சம் பழ ரசத்தின் புளிப்பில் முகம் சுழித்தபடி கேட்டான்.

"எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு, மகே... இந்த அமைதி, நிம்மதி, ஒப்பனையற்ற, பாசாங்கில்லாத வாழ்வு ரொம்ப இதமாயிருக்குது.. உங்களுக்கு ஏனிது பிடிக்கலைன்னுதான் எனக்குப் புரியலை."

"இனி மும்பைதான் நம்ப ஊர்." - கருக்கமாய் விளக்கினான்.

"படப்பிடிப்பிற்காய் வெற்றூர் எல்லாம்... பாலைவனத்திற்குக் கூடப் போறவர்தானே நீங்க!"

"ம்ம்... ஆனா அங்கெல்லாம் என்னைச் சுற்றிலும் அழகுப் பதுமைகள்." இவளது முக மாற்றம் கண்டு சமாளித்தான்.

"வந்து மதி... இங்கே பேரழகுப் பாவை நீ இருந்தாலும்... உன்னைப் பங்கு போட உன் அத்தான், அம்மா, அப்பா... வேலைக்காரங்க... நாம அணைத்துச் சில முத்தங்களைக் கூடப் பரிமாறிக்க முடியலை..."

அப்போலிப் பெருமூச்சில் இவளுள் எரிந்தது.

அதை அதிகப்படுத்துவது போல, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான்.

விசாலமாய் இருந்தாலும் சுத்தக் காற்றுள்ள அறைகளில் மகேந்திரன் நுழைந்ததுமே 'குப்'பெனப் புகையிலை நெடி ஏறியது. முன் தினம் பீடி வலித்துக் கொண்டிருந்த ஒரு தொழிலாளிக்கு அறிவுறுத்தியது போல, அத்தான் சொன்னது மகேந்திரனுக்கு உறைத்ததோ?

"பழி ஓரிடம் பாவம் ஓரிடம்னு கேள்விப் பட்டிருக்கியா, ராமு?"

ராமசாமி சாய்த்து வைத்திருந்த மண்வெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டான்.

"வேலை நடக்குதுய்யா."

"கேள்விப்பட்டிருக்கியான்னு சொல்லுப்பா."

"ஆமாய்யா. தப்பு ஒரு பக்கம் ஆனா தண்டனை வேற ஒருத்தருக்குன்றாப்பல."

"அதேதான். நீ புகையை இழுத்து முழுங்க முடியாது. வெளியேதான் ஊதறே... அருகே இருந்து அதைச் சுவாசிப்பவர்களுக்குப் பாதிப்பு அதிகம், தெரியுமா? ஒரு



புகை வளையத்துல நாலாயிரம் பொருட்கள். அதில் நாற்பத்து மூணு புற்று நோயை உண்டாக்குபவை. உனக்கு ரெண்டு பிஞ்சுக் குழந்தைங்க, சிறு வயசுப் பெண்டாட்டி... போக நாங்களுந்தான் பிழைச்சுப் போகட்டுமே."

"இல்லீங்கய்யா... வந்து இதெல்லாம் தெரியாமே... இனி செய்யலீங்கய்யா..."

இதை எல்லாம் கேட்ட மகேந்திரனின் முகப் போக்கு சகிக்கவில்லை. ஆனால் பேச்சு சரியானதாகவே இவளுக்குப் பட்டது.

சூடும் சுவையுமான பானங்களை விடுத்து, தினம் காலையில் புளிப்புச் சாற்றை உடலுக்காய் உறிஞ்சுபவன், இப்புகைப் பழக்கத்தையும் விட்டொழித்தால் என்ன? அவனுக்கு மட்டுமல்லாது அருகே இருப்பவருக்கும் கேடுதானே?

துணிவு திரட்டிச் சொன்னாள்.

"சிகரெட்ஸ் குறைங்க, மகே... நான் அருகே நிற்கும் போதாவது புகைக்க வேண்டாமே."

"நீயும் இங்கே வந்த பிறகு மாறிட்டே."

"மூணே நாட்களிலா?"

"ம்ம்... சுற்றி இருப்பவங்களின் பிரசங்கம் கேட்டி றேல்ல. முன்பு சகஜமாய்த் தோன்றியது இப்ப கெட்ட சமாச்சாரமாய்ப் படுது... ப்ளீஸ் போய்ப் பளிச்சுன்னு உடுத்திட்டு வா... என் கண்ணுக்குக் குளிர்ச்சியாய். தென்காசியில் ஏதோ ஹோட்டல் இருக்குன்னாரே உங்கப்பா... போய்ச் சாப்பிட்டுட்டு வரலாம்... இப்படிச் சதா புடவையில் உன்னைப் பார்த்து அலுத்திடுச்சு."

"ம்ஹூம்... இன்னைக்கும் புடவையில்தான். அதுவும் பட்டுப் புடவை."

''ஹைபோ... ஏன்?''

''பக்கத்திலிருக்கும் கிராமத்துல நம்ப உறவுக் குடும்பத்தில் ஒரு விசேஷம். குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா.''

''ஹவ் போரிங்! அழற குழந்தைங்க... அதுகளைச் சமாதானப்படுத்தும் அம்மா, பாட்டீஸ்ன்னு கர்நாடகக் கூட்டமாயிருக்குமே.''

அந்த எண்ணமே சகியாதது போல உதட்டை மடித்தான். ''வீடு தேடி வந்து அழைச்சிருக்காங்க.... அதுவும் நான் வந்தது தெரிஞ்சதும் மறுபடி போனில் அழைப்பாம். அம்மாக்கு என்னை, முக்கியமாய் உங்களை நம் வீட்டாருக்குக் காட்ட இது ஒரு சந்தர்ப்பங்கற ஆசை... அதான்...''

''வித்தை காட்டும் கரடி போல என்னையும் கயிறு கட்டி இழுத்துப் போறீங்களா?''

''நம்ப கல்யாணமும் மும்பைலதான் என்றீங்க... எத்தனை உறவுக்காரங்க அங்கே வரக்கூடும்? நாம வந்த இடத்திலேனும் சிலரைச் சந்திக்கலாமில்லையா?''

''எனக்கிந்தச் சொந்த பந்தத்தில் எல்லாம் நாட்டமில்லை, மதி... நாம், நம்ப தொழில்... அதிலிருந்து கிடைக்கும் பேர், புகழ், பணம்... அந்தப் பணம் கொண்டு வர்ற சௌகர்யங்கள். அவ்வளவுதான்.''

கைகளை ஒரு அலட்சியத்துடன் தட்டினான்.

''ஆனால் எனக்கு ஊரும் உறவும் முக்கியம், மகே... எல்லோரையும், முக்கியமாய் என்னைப் பெற்றவர்களை விட்டு வெறும் ஒரு மேனாமினுக்கித் தொழிலுக்காய் நான்கு வருஷங்கள் நான் ஒதுங்கியிருந்தது தப்புன்னு கூட இப்ப தோணுது...'' அழுந்தச் சொன்னாள்.



கருட விழிகளும் இவளைச் சற்று அழுந்தவே ஆராய்ந்தன..

''இப்ப என்ன - அந்த விழாவிற்குப் போகணும்?''

தலையசைத்தாள்.

''நான் ஒரு மணி நேரத்தில் தயாராகி வரேன்... அந்த அடை, புட்டு, தோசை எல்லாம் வேண்டாம் - ரெண்டு டோஸ்ட், துளி ஜாம் போதும்.''

''சரி.''

மேற்கொண்டு பேசாமல் இவள் படியிறங்க, அவனது கண்கள் தன்னையே துளைப்பதை அவள் உணர்ந்தாள் -

ஆனால் திரும்பவில்லை.

திரும்பிப் பார்த்து அவனிடம் இதமாய் ஒரு புன்னகையை வீசிச் செல்ல மனமில்லை.

அம்மா தனக்காய்த் தேர்ந்தெடுத்திருந்த ரோஜா நிறப் பட்டில், உத்தேசமான அளவில் தைக்கப்பட்டிருந்த ரவிக்கையில் தான் சற்றுச் சோளக்கொல்லைப் பொம்மை சாயலுடன் இருப்பதாகவே பட்டது.

''நான் பின்னி விடட்டா, மதிக்குட்டி?'' என்ற அம்மாவின் வேண்டலையும் மறுக்கவில்லை.

வழுவழுவென்று பின்னி, அரை முதுகையே எட்டிய பின்னல் - அது வழிய வழிய மொட்டு மல்லிகை -

'இது எங்கம்மா நான் வயசுக்கு வந்தப்ப போட்டு விட்ட நகை. நல்ல ராசி. மறு வருஷமே உங்கப்பா என்னைத்தான் கட்டுவேன்று சொல்லிட்டாரே...' சிரிப்புடன் அம்மா மகளின் கழுத்தில் இட்டவை தாமரைப்பூப் பதக்கமும் முத்து ஜிமிக்கிகளும்...

எளிதில் மனமோ, வாயோ திறக்காத தந்தை அப்படிச் சொன்னதை வியந்து கேட்டாள்.

காதலின் வேகம் அசாத்தியம்தான் என்ற வியப்பு! தாய் அலங்காரம் முடிந்த மகளை நெட்டி முறித்தார் - ''என்னென்ன நிறுசிலே எல்லாம் ஃபோட்டோஸ் காட்டின மதிம்மா... ஆனா இப்பதான் உன் அழகு பூரணமாய் ஜொலிக்குது...''

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் தானேம்மா!'' பரிகசித்தாள்.

''இந்தக் குட்டியைப் பொன்னுன்னு ஊரே பாராட்டுதே!'' தாயும் விடாமல் பீற்றினார்.

வெளியே நின்று குரல் தந்தான் புவனி -

''காரு வாசலுக்கு வந்திடுச்சும்மா... ராசய்யா சொன்னாக...'' எட்டிப் பார்த்தவள், விலக மனமின்றி மந்திராவையே பார்த்தபடி நிற்க,

''பார்த்தது போதும்... வர்றோம்னு சொல்லு...'' தாய் விரட்டினாள்.

''கார் வந்த சத்தமே கேட்கலையேம்மா...'' என்றபடி வாசலுக்குச் சென்ற மந்திராவின் முகத்தில் சிறு வியப்பு.

அங்கு மினுமினுவென்று வெள்ளி நீலத்தில் நின்றது ஒரு லான்சர்.

''இது... இது யார் காரம்மா?''

''நம்மதுதான்...''

''நம்மதுன்னா?''

''வந்து சில மாசங்கள்தானாச்சு... அடடே, உங்கிட்ட சொல்லலியா, மதுக்குட்டி... நீ சொல்ற விவரங்களைக் கேட்கவும், 'நீ சௌக்கியமா சாப்பிட்டியா, என்னெய் தேச்சுக் குளிச்சியா'ன்னு விசாரிக்கிறதிலுமே நம் பேச்சு ஓடுதோ... இப்படியான விவரங்கள் விட்டுப்போயிடுது... முதல்ல நம்ம மோகன் ஒன்னு வாங்கினான்... அதுல



போன உங்கப்பாவிற்கு அந்தச் சவாரி ரொம்ப பிடிச்சுப் போச்சு... உடனே மோகன் நமக்கும் ஒன்னைப் பதிவு செய்துட்டான்...''

''நானும் இதெல்லாம் யோசிச்சிருக்கனும்மா...''

''அதிகம் பயணப் படாததால் நமக்கிது அவசியமில்லைன்னு நினைச்சோம்டா. ஆனால் கோயிலு, குடும்ப விசேஷங்க, சீசனப்ப குற்றாலத்துக்குன்னு இப்ப அடிக்கடி போறோம்... நினைச்சதும் ஏறிடறது...''

''வங்கியில் பெரும் பணம் கிடந்தாலும் இப்படி சௌகர்யமாய் இருக்கனும்... எனக்கு சந்தோஷமாயிருக்கும்மா...''

''ம்ம்... காரும் வசதியுமாய் இருக்கோம்னா, மதிம்மா?''

''அதில்லைம்மா... ராஜத்தான் உங்களை இப்படிக் கருத்தாய்க் கவனிச்சுக்கறதில்... இங்கேயே தங்கி இருப்பதில்...'' என்றான் நெகிழ்ந்து.

## 14

'அடடே... யாரு, நம்ப மந்திரால்ல?'

'எப்படிம்மா இருக்கே? உன் படங்களைப் பத்திரிகைகள்ல பாத்துக்கறது...'

'உங்கம்மா முகம் இப்பத்தான் தெளிச்சியா இருக்கு - மகளைக் கண்ட சந்தோஷம்...'

'வாம்மா... நீ வந்ததுல எங்களுக்குப் பெருமை...' ஆளாளுக்கு வாஞ்சையாய் வரவேற்க, உடனே அந்த உறவுக்காரக் கும்பலில் ஐக்கியமாகி விட்டாள் மந்திரா.

ஆனால் அவ்வப்போது ஓரக்கண்ணால் மகேந்திரனை நோட்டமிட்டுப் பரிதாபப்படவும் தவறவில்லை.

எடுத்ததற்கெல்லாம் கடந்த மூன்று நாட்களாய் முகம் சுழித்தவன் இப்போது அதைச் சற்று இனித்தது போல வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம்.

அதைச் சற்றுக் குரூரத்துடனேயே ரசித்தாள் - அவனைச் சுற்றியிருந்த ஊர்ப் பெரியவர்கள் -

'என்ன தம்பி, மும்பையில மழை எப்படி?'

'அங்கே விவசாய முறைகள் ரொம்ப மாடர்னோ?'

'தண்ணிக் கஷ்டமே அங்கே கிடையாதுங்கறாங்களே - வாஸ்தவமா?' என்று கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தனர். நாதஸ்வர டேப்பின் இரைச்சலைக் குறைத்தபடி, ஒரு பெண் கத்தினாள்.

''கனகா பாட்டி! பிள்ளையைத் தொட்டிலிடணும் - பாடறீங்களா?''

செருமியபடி ஆரம்பித்தார் பாட்டி -

'கண்ணே... முத்தழகு

கனகமணிப் பேரழகு...'

ராகமும் சுருதியும் பிரிந்து அலை பாய்ந்தன.

பிய்த்தெடுத்த கேள்விகளிலிருந்து நழுவிப் பெண்கள் புறமாய் நின்ற மந்திராவை நெருங்கிய மகேந்திரனின் முகம் சகிக்கவில்லை.

'என்ன?' பார்வையாலே விசாரித்தாள்.

மேலும் நெருங்கிக் கிசுகிசுத்தான் -

''எப்பப் போகலாம்... சகிக்கலை...''

''எது...?''

''இந்தக் கூட்டம், பேச்சு, பாட்டு எல்லாந்தான்...''

''பாட்டுக்கென்ன?'' வேண்டுமென்றே வினவினாள்.



''கர்ண கடூரம்...''

''பாட்டிக்குக் காது ரொம்ப மந்தம்... அதான் சுருதி சேரலை - ஆனா எங்க எல்லோருக்கும் தூரத்துல சொந்தம். எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற மகராசி.''

''ராகமும் தூரம்தான்...''

இடையே புகுந்தது மோகனராஜின் குரல் -

''குழந்தைக்கு ஆசி கூற மனசுதான் முக்கியம் - ராகமும் குரலுமல்ல...''

''நோ - எதிலும் எப்பவும் அழகு இருக்கணும் - இல்லைன்னால் அதைச் சகிக்க முடியலை...''

''மனசு ஒன்றுதான் காலம் போகப் போக அழகாகக் கூடும்...''

மகேந்திரன் ஏதும் பதிலாய்ச் சொல்லுமுன் கனகா பாட்டியின் பாட்டு முடிந்திருந்தது...

பிள்ளைக்குப் பேரும் சூட்டியாயிற்று போல... எல்லாரும் வாழ்த்தோடு பரிசுகளைத் தர முண்டியடிக்க, பாடிய முதியவள் இவர்களது புறமாய் வந்தார்.

''விசுவத்தோட மகன்தானே... எப்படி மாறிப் போயிட்ட?''

''நல்லா யிருக்கீங்களா பாட்டி?''

''என்ன? காது போச்சு போ... நீ ஏண்டிம்மா இப்படி மெலிஞ்சிருக்க?''

''அது... வேலை நிமித்தம் பாட்டி....''

''எங்கோ போய் வேலை பாக்கறியாம்... இருக்கட்டு - அதுக்கேத்தது போலச் சாப்பிட்டுக்கோ... நாளைக்கே ஆசைக்கு ஒன்னும் ஆஸ்திக்கு ஒன்னுன்னால பெத்தெடு கணுமே - அதுக்குப் பலம் வேண்டாமா?''

பாட்டி நெருங்கக் கண்டதுமே, மகேந்திரன் வில யிருந்தாள்.

"என்னடி பெண்ணே, குனிஞ்சுக்கறே... உனக்குக் கல்யாணம் நிச்சயமாயாச்சாமே... நீயானா கிள்ளி எடுக்கச் சதையில்லாம... குடல் உருவிய கொக்காட்டமா நிக்கற..." பொங்கிய சிரிப்பைச் சிந்தாமல் அடக்கிக் கொண்டாள்.

"எப்ப கல்யாணம்?"

"இந்த வருஷ முடிவுக்குள்ளே..."

"மாப்பிள்ளையைப் பத்தி ஏதும் விவரம் தெரியல..."

முதியவள் இழுக்க, வார்த்தைகள் பலனில்லை என்பதால் குனிந்து விரலை நீட்டினாள் மந்திரா -

"அதோ அங்க... வாழை மரத்துக்குப் பக்கத்தில்..." காது மந்தமென்றாலும் பாட்டியின் பார்வை கூர்மைதான் போலும்...

"அடடே... அருமையான முடிவத்தான் எடுத்திருக்க, தங்கப் பொண்ணே! - ஊரெல்லாம் தேடினாலும் இப்படி ஒரு புருஷங் கிடைக்குமா? இப்பத்தான் புரிஞ்சதாக்கும்..."

மந்திரா குழம்பி விழித்தாள்.

"மகனில்லாத குறையே உணராதளவுல உன்னைப் பெத்தவங்களையும் கவனிச்சுகிட்டானே, தங்கச் சிங்கம்! வயசாகி சோறுக்குப் பதிலாப் பட்டை பட்டையா மாத்திரைகளை விழுங்கறப்ப மனசும் தளர்ந்திடுது... இந்த சமயத்துல பிள்ளைங்கதான் தூணாய் துணையாய் நிக்கணும்... அவுங்களுக்குப் பாசமாயும், பண்ணைக்குப் பாதுகாப்பாயும் நின்னுட்ட பிள்ளை..."

அவர் குறிப்பிடுவது ராஜ் அத்தானை என்று புரிந்தது... ஆனால் தப்பாய்ப் புரிந்து கொண்டாய் பாட்டி என்று மறுக்க நா எழவில்லை.

"ஆளும் பாரு... ராஜாவாட்டம் உன் உயரத்துக்கு ஈடு ஜோடாய்... நல்லா இருக்கணும்மா... பெத்துப் பெருகி வாழணும்..."



விவரத்தைக் கத்தி விளக்குவது எப்படி என்று புரியாமல்தானோ என்னவோ, ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டாள்!

பலத்த உணவிற்குப் பிறகு வீடு திரும்பியவர்களுக்கு அசதிதான். ஆனால் வாசலில் அகன்ற சிரிப்புடன் நின்றாள் வாசுகி.

"யம்மா... லக்கு பசங்கன்னு போட்டுடுச்சு... நல்ல நாளும் அதுவுமா..." என்ற தகவலுடன்.

"அடடே... இன்னும் ஒரு வாரமாகும்னாரே டாக்டர்?"

"பிரச்சனை ஏதுமில்லம்மா... ஆனாலும் டாக்டருக்குத் தகவல் சொல்லி அவரு வந்து கொட்டகையில்தான் இருக்கார்..."

"நீ பாக்கறியா மதிம்மா... கொஞ்சம் அசதியாயிருக்கு!"

"படுங்கப்பா - அம்மா! நீங்களுந்தான்... சாயங்காலமாய் வந்து பாருங்க!" என்ற மந்திரா, மகேந்திரனிடம்,

"பத்து நிமிஷத்தில் வந்துடறேன்..." என்றபடி பின் பகுதிக்குப் போனாள்.

அங்கு தன் குருத்தான நான்கு கால்களால் நிற்கப் பெருமுயற்சி செய்து, அதைச் சாதித்தும் விட்ட புது வரவைப் பூரிப்புடன் பார்த்திருந்தாள் -

முன்பும் ஈனப்பட்ட இளங்கன்றுகளைக் கண்டதுண்டு என்றாலும் இப்போது எல்லாமே புதுமையாய்ப் பட்டன.

புதுப்புது அர்த்தங்களோடு கருத்துக்கு இனித்தன.... புதுக் கன்றோடு, வெள்ளித்தாய் பசுவின் வளர்ந்ததையும் தடவிக் கொஞ்சி முத்தமிட்டவள், வைத்தியருக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களை, சன்மானத்தைத் தந்து வழியனுப்பிய பின், மாடிக்குப் போனாள் -

கதவு திறந்திருக்க,

'மகே...!' என்ற அழைப்புடன் நுழைந்தாள்.

பெட்டியை" அடுக்கிக் கொண்டிருந்தான். இந்த விழாவிற்கு அவன் போட்டிருந்த மூன்று பீஸ் சாம்பல் நிற ஸூட்,கட்டிலில் கிடந்தது.

''இதை மடிக்கவா?'' என்றபடி இவள் நெருங்க, மறுபடி அவனது முகத்தில் சுழிப்பு...

இந்த மூன்று நாட்களில் அடிக்கடி இந்த பாவனையைப் பார்த்து விட்டேன் என்ற நினைப்புடன் கேட்டாள் -

''என்ன மகே?''

''நாற்றம்... உன் மேல் மாட்டு நெடி அடிக்குது...''

''ஓ...ஸாரி...'' அவசரமாய் விலகினாள்.

''மாட்டுக்குப் பிரசவமே பார்த்துட்டியா?'

''ல்ல... பிறந்த கன்று அத்தனை அழகு... அதைக் கொஞ்சினேன்... அவ்வளவுதான்.''

''இப்படியான வாழ்வைப் பார்த்துப் பழகிய உங்கம் மாக்கு நீயும் கல்யாணமானதும் உடனே ஈன்றிடணும்ற எதிர்பார்ப்பு...''

சிறு அலுப்பும் அலட்சியமுமாய் அவன் சொல்ல,

இம்முறை இவளதுமனம் சுழித்தது. ''பிறப்பு ரொம்ப அற்புதமானது... அதை எதிர்பார்த்து வாசுகி எத்தனை சந்தோஷமாய் இருக்கா தெரியுமா? அவ பூரிப்பைப் பார்த்ததில் எனக்கே மனசு விம்முது...''

''அங்கேயும் இதே கதைதான்... அவங்க வாழ்வில் வேற என்ன இருக்கு - எதிர்பார்க்க... ரசிக்க?''

''இவங்கதான் வாழ்வை முழுக்க ருசிக்க அனுபவிக் கறதாய்த் தோணுது... அங்கே... அதாவது மும்பையில் நாம போடறது வேஷம்... நிழலாட்டம்... அந்த நிழலும்



கூட அந்தக் கவர்ச்சியாயிருக்கணும்னு நாம ரொம்ப முயன்று... களைச்சிடறோம்... எதையும் நிம்மதியாய் ரசிக்க முடியாதளவு களைப்பு...''

''அபத்தமாய்ப் பேசாதே... முதல்ல போய்க் குளிச்சு உடையை மாற்று. கர்நாடகமாய்ப் புடவை, பூ... அதற்குத் தோதாய் மாட்டு நெடின்னு... எனக்குச் சகிக்கலை...''

''வாழ்வின் ஒவ்வொரு நாளும் நான் அலங்காரமாய் நிற்க முடியுமா, மகே?''

''முடியும்... அப்படித்தான் வாழணும்னு முயன்றால் முடியும்...''

இவளுக்குள் அச்சம் முளைத்தது. கலைக்கவே முடியாத வேஷத்துடன் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டுமா? முடியுமா?

இயற்கையை ஒட்டிய வாழ்வு.... எளிய மக்களின் வாழ்வுத் தரத்தை உயர்த்தும் முயற்சிகள், தொழில் முறைகள்... பெற்றோரை விட்டு முழுக்க ஒதுங்காத பாசத் தொடர்பு... முக்கியமாய்த் தான் தனக்காக நேசிக் கப்படுகிறோம் என்ற தெம்பு, சுதந்திரமாய் வாழ்கிறேன் என்ற விடுதலை உணர்வு....

இதெல்லாம் இல்லாமல் தான் முழு வாழ்வும் ஓடுமா? ''மாலையே கார் இருந்தால் நல்லது மான்டி...''

'மதி' இப்போது பழையபடி 'மான்டி'யாய் மாறியதைக் கவனித்தாள்!

''நாளை அதிகாலை கிளம்பலாமே....''

''நோ. எனக்கு இனி... இங்கே இருப்பது அவஸ்தை தான்... எந்த மாதிரி வாழ்விலிருந்து நான் தப்பி விலகினேனோ... அதே போன்றதொரு சூழலில் என்னை அடைச்சுட்டது போல... எனக்குத் தாள முடியலை...''

அவனது முகம் மேலும் கடுமையாய்ச் சுழித்தது.

''உங்க இஷ்டம்... டிரைவரையும் வரச் சொல்லிடறேன்...''

''ம்ம்...'' இவளது பக்கமே திரும்பாமல் முனகினான்.

## 15

ஏன் அப்போது அப்பாவின் அறையை எட்டிப் பார்த்தாள் என்பது தெரியவில்லை...

சில விஷயங்களைக் 'கடவுளின் கிருபை' என்பதின் காரணம் புரிந்தது. அன்றும் அதுவேதான் அவளை அங்கு இட்டுச் சென்றது போலும்...

வந்தபோது பெருகிய ஆனந்தம் எல்லாம் நீர்க்குமிழ் போல உடைந்த தவிப்பில், தன் அறையின் தனிமை தேடி ஓடிய கால்கள்... சற்று அப்பாவின் அறைப் பக்கம் தாமதித்து, உள்ளேயும் பார்க்க,

அங்கே அப்பா மூச்சிரைத்தபடி புரண்டு தவித்தபடி... இவள் அலறியதில் வீடே அங்கு குழுமியது...

''என்னப்பா... என்ன ஆச்சப்பா?'' கதறினாள். அம்மா பதறினாலும் ஏதோ மாத்திரையை எடுக்க, இவள் மறுபடி மாடிக்கு ஓடினாள்.

''மகே, அப்பாவுக்கு உடம்புக்கு ரொம்ப முடியலை... வாங்க...'' இவளது பதட்டத்தை அவன் முகம் பிரதிபலிக்கவில்லை. மற்றப்படி இவளை ஒரு கூரிய ரசனையுடன் துளைக்கும் விழிகளில் இன்று ஒருவித அலட்சியமும் அலுப்புமே மிஞ்சியிருந்தன.

இவளுடன் கீழே இறங்கியவன் -

''ஆம்புலன்ஸுக்குத் தகவல் போயாச்சா?'' கேட்டான். சமையல்காரத் தனம் -



''ராஸய்யாவுக்குத் தகவல் தந்தாச்சய்யா!'' - என்றாள்.

''அவர் வந்து என்ன செய்வார்?''

''எதுனாலும் அவருக்கு ஒரு வார்த்தையில தெரிவிச்சுட்டா போதும்யா...''

பாண்ட் பாக்கெட்டுகளில் கைகளை நுழைத்து நின்றவனைப் பார்த்தவளுக்கு மேலும் பதறியது.

''கார் இருக்குது, மகே... அப்பாவை ஹாஸ்பிடலுக்கு அழைச்சுப் போயிடலாமா?''

ஏதாவது செய்ய வேண்டுமே என்று துடித்தாள்.

''ஆமாம், மதிம்மா... டாக்டர் ஸாமிற்கு அப்பாவின் இந்த ஆஸ்துமா அட்டாக், மற்ற பிரச்சனையெல்லாம் தெரியும்...''

''அப்ப டாக்டருக்குத் தகவல் சொல்லுங்கம்மா... மகே, ஒரு கை பிடிங்க... அப்பாவைக் காரில் ஏற்றிடலாம்...''

பெரியவரின் இரைப்பு குறைந்திருந்தது என்றாலும் வியர்த்து, கண்கள் செருகிக் கொண்டிருந்தன.

''இந்நிலையில் அப்படி யெல்லாம் அவரை அலட்டறது நல்லதில்லை... ஆம்புலன்ஸ் வரட்டும்...''

''ஐயோ... இங்க அந்த வசதி இருக்கான்னே தெரியலை...'' அலை மோதிய அவளது கண்கள் அறைக்குள் நுழைந்தவனைக் கண்டு சற்று நிம்மதி ஆயின.

நீண்ட நாலே எட்டுகளில் கட்டிலை அடைந்த மோகனராஜ், அப்படியே பெரியவரை அள்ளித் தூக்கினான்.

''மதி! காரைத் திற...''

இவளும் அந்த வேகத்திற்கு ஈடு தர, பதினைந்தாம் நிமிஷம் மருத்துவ மனையில் இருந்தனர்.

''டாக்டர்... இந்நேரம்?''

''ஏற்கெனவே சொல்லிட்டேன்...''

''நன்றி, ராஜத்தான்... நீங்க இல்லைன்னா...''

''ஒன்றும் பிரச்சனையில்லை... மாமாவுக்கு ஆயுள் கெட்டி...''

அவனது புன்னகை அவளைப் பலப்படுத்தியது.

''அப்பா அடிக்கடி இப்படிச் சிரமப்படுவாரா?''

''சில சமயம்... ஆஸ்த்துமா மனது சம்பந்தப்பட்ட வியாதிங்கறது உனக்குத் தெரிஞ்சிருக்கும், மதி... அதிர்ச்சி, ஏக்கம், ஏமாற்றம் எதுவோ இப்படி ஒரு திணறலை ஏற்படுத்திடுது...''

''இப்ப ஏன்...?''

இவர்களை நெருங்கிய மகேந்திரன்,

''அந்த விழாவில் நிறையச் சாப்பிட்டுட்டார்னு... அது ஒத்துக்கலை போல...'' சொன்னதை, வெறுப்புடன் ஒதுக்கினாள்.

''அப்பாவுக்கு அளவு தெரியும்...''

தோள் குலுக்கலுடன் அவன் மறுபடி நகர, மோகன் புன்னகைத்தான்.

''அது மாமாக்கே தெரியுமோ என்னவோ? யாரேனும் சொன்னது அவரைப் பாதிச்சிருக்கலாம்... அல்லது நம்ப பொண்ணுக்கு இதேபோல விழாவும் வைபவமும் நம்ப ஊரில் நடத்திப் பார்க்க முடியுமான்ற ஏக்கமாய்க் கூட இருக்கலாம்...''

ஒருவேளை மகேந்திரனின் வெறுப்பை... அவன் இனிமேல் இந்தக் கிராமப்புறத்திற்கு வர மாட்டான். ஆக அவனது மனைவியாகப் போகும் தன் மகளையும் இனி இப்படி இங்கு பார்ப்பது அரிது என்ற கவலை மனதை அரித்து...



இனிக் காரணத்தை ஆராய்ந்தென்ன?

சிக்கலில் இருந்து தப்பும் வழியைத்தான் பார்க்க வேணும்...

''அப்பா, அம்மா பாவந்தான்! இல்லையா, ராஜத்தான்?''

''நீ இருக்கையில் என்ன பாவம்? சாதிக்க முடியும்னு காட்டின ஒரு மகள்...''

''மனசு வைத்தால் சாதிச்சுடலாம்றதைப் புரிஞ்சுகிட்டேன்... ஆனா இதுவரை வாழ்ந்த வாழ்வு சாதனையான்றது புரியலை... தவிர நான் இங்கே இல்லாமல்...''

''இனி அடிக்கடி வா, மதி...''

''இனி இங்கேயே இருந்திடலாம்னு நினைக்கறேன்...'

ஒரு கணம் அவனது விழிகளுள் மத்தாப்பூச் சிதறல்களின் வெளிச்சம்!

''நல்ல நினைப்பு...'' என்றவனின் கரங்கள் மிக இயல்பாய் அவளை இழுத்து அணைத்தன.

அது தனிமையான பகுதி என்பதால் பிறர் கண்டு விடுவார்களே என்ற பதைப்பு இல்லாமல் கட்டுண்டு நின்றாள்.

இரும்பு போன்ற அவன் உடம்பில் கொடியான தன் தேகம் வெகு வசதியாய்ப் படர்ந்திருந்தது போன்ற நிம்மதி.

முன்பு தொட்டபோது தகித்த அவனது ஸ்பரிசம் இப்போது உள்ளே கொதித்த கேள்விகளை எல்லாம் அடக்கிக் குளிர்வித்தன. இத்தனை கச்சிதமாய் இரு உடல்கள் பொருந்தக் கூடுமா என்ற பிரமிப்புடன் மேலும் அவனை ஒண்டினாள்.

இவள் தலை சாய்ப்பதற்கென்றே அமைக்கப்பட்டது போல வாகான உயரத்தில், அகலத்தில் இருந்தன அத்தானின் தோள்கள்.

''அப்பாவுக்குச் சரியாயிடும்ல, அத்தான்?''

''இப்ப சுவாசம் சீராயிடுச்சு... ராத்திரி எல்லாருமாய் வீடு திரும்பிடலாம்.''

ஆறுதல் பெற்று அவனிடமிருந்து விலகினாலும், நிமிர்ந்து அவன் கண்களைக் காணக் கூசியது...

''வெளியே டீக்கடை உண்டு - ஏதேனும் சூடாய்க் குடிக்கறியா?''

''ம்ம்...''

அந்தப் பெட்டிக் கடையில் நின்று புகைத்துக் கொண்டிருந்த மகேந்திரன் இவளைக் கண்டதும் சிகரெட்டை எறிந்தான்.

''இன்னும் சில மணி நேரங்களில் நாம வீடு போயிடலாம், மகேந்திரன்.''

''ஓ... நல்லது... நானும் இப்பவே கிளம்ப முடிந்தால் ரொம்ப நல்லது...''

இவள் ஏதும் சொல்லவில்லை... ஆனால் இந்தப் பயணம் இவளுக்குச் சில விவரங்களைப் புரிய வைத்தது போல... அவனுக்கும் தெளிவைத்தான் தந்திருக்கின்றது.

''இப்ப கிளம்பினால்... மதுரையில் தங்கணுமே...''

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்... கார் இருந்தால் போதும்...''

அப்பா இந்நிலையில் இருக்க, கிளம்ப என்னத்தனை அவசரம் என்று கேட்க நாக்கு துடித்ததுதான்... ஆனால் இனிக் கேள்விகளில் அர்த்தமில்லை...

''என் கார் இருக்குது - டிரைவரும் ஏற்பாடு பண்ணிடறேன்... மாமாவை நான் வீடு கொண்டு சேர்த்திடறேன்...''

''சரி.''

சற்றைக்கெல்லாம் மகேந்திரன் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டபோது, தன் கண்களைச் சந்திப்பதைத்



தவிர்ப்பது புரிந்தது... இருவரிடையே விழுந்த விரிசலும் புரிந்தது.

மருத்துவ மனையின் வாசலில் நின்று விடை தந்தவளின் இதழ்கள் புன்னகைக்க மறுத்தன.

''மும்பையில் பார்க்கலாம், மான்டி...''

''பார்க்கலாம்!'' அந்த ஒற்றை வார்த்தையை இரட்டை அர்த்தத்துடனேயே உச்சரித்தாள்...

தொடர்ந்த பத்து நாட்களும் விறுவிறுவெனச் சுழன்று மறைந்தன.

மும்பைச் சிநேகிதிகளுடன் 'பேசி'யில் தொடர்பு கொண்டு செய்ய வேண்டியவற்றைப் பட்டியலிட்டாள்.

இங்கே தினம் உரத் தொழிற்சாலைக்குப் போய் வேலை முறைகளைப் பழகிக் கொண்டாள் - செய்தவர் களை ஊக்குவித்தாள்.

பண்ணையும் அதன் வேலைகளும் பரிச்சயப்பட்டன. மகளின் எதிர்காலத் திட்டங்கள், பெற்றவர்களுக்குக் காய கல்பம் போலானது போலும்.. ஆரோக்கியம் அசாத்திய மாய் முன்னேறி இளமையாய்த் தெரிந்தார்கள்.

வீடு சதா பேச்சும் சிரிப்புமாய்க் களை கட்டியது. இவளது ஆசையை நிறைவேற்றுவது போல நல்ல மழையும்... ஒரு நாள் தாழ்வாரத்தில் அமர்ந்து பொழிந்த வானத்தையும் நனைந்து பெருகிய பூமியையுமே பார்த்திருந்தாள் -

இடையே அம்மா ஊட்டி விட்ட பால் சாதமும் மாவடுவும் அலாதி ருசியில்...

அவ்வப்போது வானைக் கீறிய மின்னல்களைக் கண்டு புன்னகைத்தாள். ''என்ன அது, காமரா பிளாஷ் போலிருக்கா? புன்னகை பலமாயிருக்கே!'' சீண்டிய குரல் அத்தானுடையது...

"சந்த எப்ப வந்தீங்க..."

"எனக்கும் பால் சாதமும் மாவடுவும் வேணும் போலிருக்குது..."

"ஓ... நானும்... எவ்வளவு பிரமாண்டமான ஃபிளாஷ்ன்ற கற்பனையில்தான் புன்னகைத்தேன்... நீங்க நினைக்கலை இல்லையா..."

"நானும் அதைபேதானே சொன்னேன்?"

"புரியாதது போல நடிக்காதீங்கத்தான். இந்த ஒல்லிக்குச்சி உடம்புக்காரி நவநாகரீக உலகில் ஒரு சுற்று வருவான்னு நினைக்கலை..."

"அப்படிப்பட்ட உடம்புகள்தானே இப்ப அழகுன்னு கருதப்படுது. ஆக என் கேலி தப்புன்னு நீ நிரூபிச்சுட்ட..."

"அந்தத் துறையில் எனக்கு ஆர்வமிருந்தது... எனக்கு அதில் சிறிது காலம் இருந்த திருப்தி... ஐயோ..." நிமிரெனத் துள்ளி இவன் பக்கமாய் ஒண்டினாள்.

மழை நீரில் நனைந்து உற்சாகமாய்க் கத்திய தவளைக் கூட்டத்திலிருந்து ஒன்று இவன் புறமாய்த் தத்தியதே காரணம்!

"இன்னும் தவளைப் பயம் போகலையா?"

"பயமில்லை... ஏதோ அருவருப்பு... ஆனா..." புன்னகைத்தாள்.

"இப்ப என்ன ஞாபகம்?"

"பத்து வருஷங்களுக்கு முன்னே இதே போலொரு சம்பவத்தில் நீங்க சொன்னது ஞாபகம் வந்தது...

'ஏன் கத்தறே மதி - தவளையே பாவம் உன்னைக் கண்டதில் மிரண்டு குதிக்குது... இப்படி அலறினா உயிரை விட்டுப் போகுது!'ன்னு...



"அதெல்லாம் வெறும் சீண்டல், மதி... உனக்குத் தவளையைக் கண்டதும் அச்சம் போய் வெறுமே சிரிப்புதான் வரணும்றதுக்காய்ச் செய்த பரிகாசம்... நீரே காணாத செடி வாடும்... ஆனா அதிக நீரால் செடி அழுகிடும்... உன்னைச் சுற்றிப் பொழிஞ்ச அதிகப் பாசம் உன்னை அழிச்சுடக் கூடாதுன்னு..."

"புரியுது..."

"இப்பதான் புரியுது இல்லையா? எனக்கும் கூடச் சில விஷயங்கள் இப்போதான் தெளிவாகியிருக்கு, மதி..."

"என்னது...?"

"என்னை இங்கேருந்து நகர விடாமல் கட்டி வைத்திருப்பது உன் நினைவுகள்தான்னு..."

"எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சு..."

"யாருக்கு அதை நினைவு படுத்தறே, மதி - எனக்கா அல்லது உனக்கேவா?"

## 16

மும்பை நட்சத்திர ஹோட்டலின் அரங்கம்... அதன் ஒரு அறையில் முகத்திற்கு பான்கேக் தடவிக் கொண்டிருந்தவளுக்குப் புது உல்லாச ஊற்று...

ஊறி உடம்பெங்கும் ஓடிப்படி... மிகக் கவனமாய் வரையப்பட்ட அவளது முகம் சிறு சிரிப்புடன் கண்ணாடி மூலம் அவளையே பார்த்தது...

'போதுமில்லையா அனுபவித்ததெல்லாம்?' என்பது போல அன்று இவர்களது ஃபேஷன் ஷோ முடிந்ததும் ஒரு

நாடோடி ஃபிரெஞ்ச் கதையை நாட்டிய நாடகமாய் நடத்தக் காத்திருந்தது ஒரு குழு.

திருப்தியாய்த் தன் வேலையை முடித்தவள், அதையும் காண அமர்ந்தாள் - நாடகத்தின் தலைப்பு 'குட்டி இளவரசன்!' வேற்றுக் கிரகத்து இளவரசான அவனுக்கு ரோஜா மலர்கள் மீது அலாதி பிரியம். பரிசாய்க் கிடைத்த ஒரு ரோஜாச் செடியைப் போற்றிப் பராமரிக்கிறான். மேயும் மிருகங்களிடமிருந்து காப்பாற்றி அளவாய் நீரும் விடுகிறான்... செடி அழகாய்ப் பூக்கிறது. ஆனால் அப் பூவோடு ஏற்பட்ட ஒரு உரசலில் கோபித்த இளவரசன் கிரகத்தையே விட்டு விட்டுப் பூமிக்கு வருகிறான்... இங்கேயுள்ள அரண்மனைத் தோட்டங்களில் நூற்றுக் கணக்கில் ரோஜாச் செடிகள்... எண்ண முடியாத மலர்கள்... அவனது செடியின் மலரை விடவும் வண்ணமும் வாசனையுமாய்! குழம்புகிறான்...

அப்போது அவனது நண்பனான நரி புத்தி சொல்லுகிறது.

'இதில் ஒன்றுகூட உன் மலருக்கு ஈடாகாது... ஏனெனில் அது உன் ரோஜா!'

இளவரசின் புத்தி தெளிகின்றது.

'ஆம், அவள் என் ரோஜா...

அவளுக்கு வேறெதும் ஈடில்லை...' என்று தன் இடத்திற்குத் திரும்புகின்றான்.

ஏனோ அம் முடிவில் மந்திராவின் கண்கள் கசிந்தன.

உதடுகளில் ஒரு புதுப் புன்னகை... தனக்கான ராஜா யார் என்பது புரிந்ததாலா? தான் ஒருவனுக்கு மட்டுமே உரிய மலராக முடியும் என்ற தீர்மானத்தினாலா?

கண்ணீரூடே தன் விரல்களைப் பார்த்தாள் -

சில நாட்களாய் அங்கிருந்த இரட்டைக் கல் மோதிரம் இப்போது அங்கில்லை!



அதைக் கழற்றி மகேந்திரனிடம் திருப்பிய போது, மனதின் பாரம் நீங்கியிருந்தது. அவனும் அதைப் பிரு இன்றிப் பெற்றுக் கொண்டதில் நிம்மதி. இப்போது சில நாட்களாய் அவன் ஜூலியோடு இணைந்து சுற்றுவதும் கூட நிம்மதிதான்...

இதுவே காதலாய் இருந்திருந்தால்...

'விட்டது தொல்லை' என்றிருக்கக் கூடுமா? அடிவயிறு காந்த, அலறித் துடித்திருப்பாளே...!

இப்போதுதான் தன் இதயத்தின் பேச்சு தனக்கே புரிந்திருக்கின்றது. கடந்த சில வருடங்கள், முத்தெடுக்க மூழ்கி வெறும் கிளிஞ்சல்களைப் பொறுக்கி யெடுத்து வந்ததான அனுபவம்!

நல்லவேளை! இப்போதேனும் முத்து எது என்பதைக் கண்டு கொண்டாள்... அத்தான் முன்பே கண்டு கொண்டாலும் பொறுமையாய்க் காத்திருந்தது... கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டிய விஷயம்...

வீடு போய் இறங்கும் போது அத்தான் மனைவியோடு நின்றிருந்தால்... மனம் வெந்திருக்கும்... ஆனால், தான் மகேந்திரனோடு போய் இறங்கியதில் அத்தானுக்கு எந்தப் பாதிப்பும் இருந்ததாய்த் தெரியவில்லையே...

அலட்சியமாகத்தானே நின்றான்...? உணர்ச்சிகரமாய் நடிக்கப்பட்ட கதையைக் கண்டதில் மனம் இளகிக் கனிந்திருந்தது... மயங்கிய நினைவுகள்...

''அற்புதமான கருத்து இல்லையா, மதி?''

மதி மயங்கித் தான் போனதோ... இல்லாமல் அத்தானின் குரல் எப்படி இங்கே... இவ்வளவு அருகே?

திரும்பிய பார்வைக்கு அவனது மந்திரப் புன்னகை கிடைத்தது...! மனதை அப்பளமாய் நொறுக்கிய புன்னகை!

''ராஜத்தான்...!''

''நாடகத்தைப் பத்திச் சொன்னேன்...''

''நீங்க எங்கே மும்பையில்... அதுவும் இங்கே?''

''உன்னை மேடையில் பார்க்கணும்ற ஆசை...''

அவனது லுட் மிகக் கச்சிதமாய்ப் பொருந்தியிருந்தது. பாட்டி சொன்னது போல குடல் உருவிய கொக்கு போலில்லாத ஆரோக்கியமான ஆண்.

''வீட்டுக்குப் போகலாமா, மதி?''

''ம்ம்... ஐந்தே நிமிஷம்... இருங்க...உடை மாற்றிட்டு வந்துடறேன்!'' கூடவே முகப்பூச்சை வழித்துத் துடைத்தாள்.

அத்தானுக்குத் தன் மீது அலட்சியமோ என்று மருகிய மறுகணமே அவன் வந்து நிற்பதென்றால்...

மனசு படபடத்தது.

வெளியே தனக்காய்க் காத்து நின்றவனைக் கண்டு பொங்கியது...

''சாப்பிடலையே நீங்க...''

''காபி ஷாப்பில் கட்லெட்ஸ் சாப்பிட்டேன்... உனக்காய் அத்தை பலகாரம் வேறு அனுப்பியிருக்காங்க...''

''அப்பா, அம்மா...?''

''சௌக்கியம். எனக்குத்தான் இருப்புக் கொள்ளலை.''

பினாட்டினுள் நுழைந்து விளக்கை எரிய விட்டாள்.

''என் ரோஜா இங்கேயிருக்க... அங்கே எனக்கென்ன வேலைன்னு கிளம்பிட்டேன்.'' ஒருவரை ஒருவர் மௌனமாய்ப் பார்த்து நின்றனர்.

இவனது தோளைத் தொட்டாள்.

''புரியலையா, மதி?''



''உங்களுக்கும் புரிஞ்சிடுச்சேன்ற நிம்மதி...''

விரிந்த அவனது கரங்களுக்குள் ஒண்டினாள். அவை அவளைச் சுற்றி வந்து மார்போடு இறுக்க, அந்தச் சுக வெப்பத்தில் அமிழ்ந்தாள். கூடு சேர்ந்த பறவையின் ஆசுவாசம்...

''என்னை முன்பே பிடிக்குமா, ராஜத்தான்?''

''நான் இளவரசனோ இல்லையோ... நீதான் என் ரோஜா மதி... எத்தனை பொருத்தமான நாடகம், பார்த்தியா... இவனுக்குப் பேசத் தெரியாதுன்னு கடவுளே இரங்கி அதன் மூலம் நமக்குப் புரிய வச்சுட்டார்... நமக்கிடையே இருந்த வயசு வித்தியாசம்... தவிர உலகம் தெரியாமல் வளர்ந்த உன்னை அப்படியே மடக்கி என் மடியிலே வச்சுக்கறது நியாயம் இல்லைன்னு தோணுச்சு...''

''ரொம்ப பெருந்தன்மைதான்...''

''இல்லை, புத்தி மட்டு...! இல்லைன்னா என் வாலிபத்தை இப்படி வீணடிச்சிருப்பேனா, மதி? நமக்குக் கல்யாணமாகி ரெண்டு குழந்தைகளுக்கு அப்பனும் ஆகியிருப்பேன்...''

முகம் சிவந்தாலும் விடாமல் ஊடினாள் -

''எனக்குக் கடிதம் எழுதியிருக்கலாம்... இல்லைன்னா ஃபோனில் அன்பாய் நாலு வார்த்தை...?''

''உனக்கு வலை விரிச்சது போலாகுமே... என் மனசில் நீ புகுந்திருந்தது போல, உன்னிலும் நானிருந்தால் நீ வந்திடுவேன்ற ஒரு நினைப்பு... உலகமெல்லாம் சுற்றினாலும் எங்கிட்ட வந்து சேர்ந்திடுவேன்ற ஒரு காதலனின் கர்வம்... ஆனா எனக்கது அதிர்ச்சிதான்...''

இறுகிய அவனது உதடுகளை மெல்ல வருடினாள்... அவற்றின் மந்திரப் புன்னகை மீண்டது!

''அதாவது மகேந்திரனோடு நான் வந்தது...''

''ரொம்ப பயந்துட்டேன், மதி... உன் பெற்றோர் இந்த மகேந்திரனைப் பற்றி முன்பே சொன்ன போதும் கூட, நீ ஏதோ பூச்சாண்டி காட்டுவதாய்த்தான் அதை ஒதுக்கிட்டேன். இந்த இளவரசிக்கான ராஜா நான்தான்ற சர்வ நிச்சயம்...

''செருப்பை ஈ மொய்க்காது அத்தை!' என்று சிரிச்சேன். ஆனால் நீங்க ஜோடியாய் வந்திறங்க, நொறுங்கிட்டேன்...''

''ஸாரி அத்தான்... சரியான முடிவெடுக்கறதாய் நினைத்து நான் செய்த தப்பு...''

''கத்தியின்றி ரத்தமின்றி ஹிம்சை செய்வதில் காந்தியையும் வென்று விட்டாள் காதலி'ன்னு ஒரு புதுக்கவிதை. கவிஞரும் என்னைப் போலவே நொறுங்கின கேஸ் போல!''

''ஐயோ, அத்தான்...!'' தாளாமல் அவனை முத்தமிட்டாள்... ''முட்டாளாய்த்தான் இருந்திருக்கேன்... ஆனா கடவுள் நம்மைச் சரியான நேரத்தில் முறைப்படி இணைச்சிடலையா?''

விடுகதை விடுபட்டதுபோலத் தெளிவாயின அவர்களது முகங்கள். ''அத்தை ரொம்ப சந்தோஷமாய்ச் சொன்னாங்க... மும்பை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வச்சிடுவா மதின்னு...

''ஆள் பாதி ஆடை பாதி என்றாலும், அட்டையைப் பார்த்துப் புத்தகத்தின் தரத்தை எடை போடறது தவறுன்னு புரிஞ்சிடுச்சம்மா... பகட்டான வாழ்வுதான்... ஆனால் உள்ளே எழுத்தில்லாத வெறுமைன்னு...''

''ம்ம்... ஆக அத்தானுக்கு எல்லாம் தெரிஞ்சிடுச்சு!''



''ஹேமலதாவும் சொன்னாங்க... இன்று உன்னுடைய கடைசி நிகழ்ச்சின்னு...''

''அவங்களுக்கும் என் நிலைமையை விளக்கத்தான் வேண்டியிருந்தது. நம்ம ஊர் பக்கம் வந்தபோது குற்றாலக் குளியலை மிக அனுபவிச்சாங்க.

'அதற்காய் வாழ்நாள் எல்லாம் குளிச்சுட்டே இருக்க முடியுமா?'ன்னு கேட்டேன். என்னை மேலும் உயரத்துக்குக் கொண்டு போகணும்ற ஆர்வம் அவங்களுக்கு... எது உன்னதம்ன்றதை இப்பவேனும் புரிஞ்சுகிட்டேனேன்ற நிம்மதி எனக்கு...''

ஆரத் தழுவிய அவனது கரங்களுக்குள் மெழுகாய் உருகினாள்.

''இனி நான் இங்கே இருப்பது முறையில்லை, மதி...'' விலக மனமின்றி மேலும் அவனை ஒட்டினாள்.

''கல்யாண வேலைகளை மும்முரமாக்கச் சொல்லிடறேன்... கொஞ்சம் பொறுத்துக்கோ மதி...'' சீண்டினான்.

''உங்களுக்கும்தான் பொறுமை இல்லாமல் இப்படி ஓடி வந்திருக்கீங்க...'' செல்லமாய்க் குற்றஞ்சாட்டினாள்.

''மும்பையை விட்டு நிரந்தரமாய் நாளைக் காலை கிளம்பப் போறேன்னு தெரியும்... அதான் வந்து பத்திரமாய்க் கூட்டிட்டே போயிடலாம்னு...''

''அச்சச்சோ...'' அவனிடமிருந்து விலகினாள். ''என் சிநேகிதர்கள் அத்தனை பேருக்கும் விருந்து தர்றதாய்ச் சொல்லியிருந்தேன்... உங்களைக் கண்டதில் அத்தனையும் மறந்து...''

''நம்ப கல்யாணத்திற்கு எல்லாரையும் கண்டிப்பாய் வரணும்னு சொல்லிட்டேன்... மூன்று நாள் விருந்து...!''

''ஆக எல்லாம் இப்ப அத்தானின் கட்டுப்பாட்டிற்குள் தான்.''

''நான்... இதோ இந்தச் சுண்டு விரலுக்குள்...'' அவளது சின்ன விரலைப் பற்றியபடி அடுத்த விரலுக்குள் அம் மரகத மோதிரத்தை நுழைத்தான்.

ஒவ்வொரு விரலாய் முத்தமிட்டான்.

'உங்களுக்குப் போட... என்னிடம் மோதிர மில்லையே...''

''முத்தமிட்டால் போதும்...'' விரலை நீட்டினான்..

''கல்யாண நாளைச் சீக்கிரமாய்க் குறிக்கச் சொல் லுங்க...''

முறுக்கிக் கொண்டாள் அவள்...!

*